# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்

# 5000

(வேதாத்திரி மகரிஷியின்
நூற்றாண்டு விழா நினைவாக
14-08-2010 அன்று வெளியிடப்பட்டது)

## முதல் பாகம்

*அருள்நிதி*
***மன்னார்குடி பானுகுமார்***

**விஜயா பதிப்பகம்**
*20, ராஜ வீதி,*
*கோயம்புத்தூர் - 641 001.*
vijayapathippagam2007@gmail.com

© விஜயா பதிப்பகம்

நூலின் பெயர் : **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 - முதல் பாகம்**

ஆசிரியர் : மன்னார்குடி பானுகுமார்

முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2010

வெளியீடு : **விஜயா பதிப்பகம்**
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
✆ 0422 - 2382614 / 2385614

ஒளியச்சு / புத்தக வடிவமைப்பு : ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை.

அட்டை வடிவமைப்பு : ஆர்.சி. மதிராஜ், சென்னை.

அச்சாக்கம் : ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5.

பக்கம் : 144

விலை : ரூ.70/-

**ISBN - 81-8446-274-3**

**VEDHADHRI MAHARISHIYIN PONMOZHIGAL 5000 PART - I**

Author : Mannarkudi Banukumar

First Edition : August 2010

Published By : **VIJAYA PATHIPPAGAM,**
20, Raja Street, Coimbatore - 641 001.
✆ 0422 - 2382614 / 2385614

Layout & Laser type set : IRIS Graphics, Coimbatore.

Cover Design : R.C. Mathiraj, Chennai.

Printed At : Jothi Enterprises, Chennai - 5.

Pages : 144

Price : Rs.70/-

# ஞானப்பெட்டகம்

அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்வது பொன்மொழியாகும். அந்த வகையில் அருட்தந்தையின் உபதேசங்களை பொன்மொழிகளாகத் தொகுத்துள்ளார் நமது ஞானச்செல்வர் பானுகுமார்.

கடமையைக் கடவுள் பணியாக ஆற்றி வருபவர். செய்வன வற்றைத் திருந்தச் செய்யும் பண்பாளர். அவர் எண்ணத்தால், சொல்லால், செயலால், எழுத்தால் பலருக்கும் உதவிவரும் பெருந்தகையாளர். அருட்தந்தையின்மீது அளவற்ற குருபக்தி கொண்டவர். இவரது குடும்பமே அருட்தந்தையின் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. குருவின் நூறாவது பிறந்த நாளுக்கு, குருகாணிக்கையாக, அருட்தந்தையின் ஐயாயிரம் பொன்மொழிகளை ஐந்து தொகுப்பாக வடிவமைத்து உள்ளார்கள்.

இந்நூல் மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு விடைதேடுபவர்கள் - வாழ்க்கை கல்வி பயில விரும்புபவர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்களுக்கும் நண்பனாக நல்லாசிரியராக வழிகாட்டும்.

உலக வாழ்க்கை, ஞானவாழ்க்கை மட்டுமல்லாது அரசியல் முதல் ஆன்மீகம் வரை, அனைத்துத் துறைகளிலும் மானுடத்திற்கு இந்நூல் வழிகாட்டிக் கொண்டிருக்கும். இந்நூல் ஒரு **ஞானக் களஞ்சியம்; ஞானப்பெட்டகம்; ஞான அகராதி; ஞானப்பட்டறை.** உலகம் உள்ள வரை மானுடத்தை வழிநடத்திச் செல்லும் என்பது உண்மை.

*அன்புடன்*

***புலவர். க. தியாகராஜன்***

*அறிவுத் திருக்கோயில்*

*ஆழியார்.*

# குரு காணிக்கை

***“எந்தக் காட்சியை அகக்காட்சியாக, இறைவன் காட்சியாகக் கண்டேனோ, அந்த நிலைக்கு, என் அறிவைக் கொண்டு உங்களைத் தூக்கிக்கொண்டுபோய் அந்தக் காட்சியைக் கொடுக்கிறேன்”***

*- அருள்தந்தை.*

*அண்மையில், ‘வேதாத்திரிய சிந்தனைகள்’ என்ற புத்தக வெளியீட்டு விழாவிற்குச்சென்றிருந்தேன். ‘வேதாத்திரியத்தின் பெருமை உலகுக்கு எப்போது புரியும்?’ என்று அப்புத்தகத்தில் ஆசிரியர் வினா எழுப்பி இருந்தார். புத்தகத்தின் சிறப்பினை பேசி முடித்தபின், ஆசிரியரின் வினாவுக்குப் பதிலளித்தேன். இதனை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.*

*‘‘ஒரு மகானின் பெருமையை அல்லது அவரது கருத்துக்களை உலகம் உணர வேண்டும் என்றால், அந்த மகானுக்கு திறமைவாய்ந்த சீடர்கள் அமைய வேண்டும். அவரைப் பற்றி மற்றவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் எழுதவேண்டும்’’.*

***இயேசுவிற்கு** புகழ்பெற்ற 12 சீடர்கள் இருந்தனர். **ஸ்ரீராம கிருஷ்ணருக்கு** விவேகானந்தர் உட்பட 16 சீடர்கள் இருந்தனர். **புத்தருக்கும்** திறமை வாய்ந்த பல சீடர்கள் இருந்தனர். இந்த சீடர்கள் உலகம் முழுவதும் தங்கள் குருவின் கருத்துக்களை, பெருமைகளை பரப்பினார்கள். இந்தச் சீடர்களைப்போல் வேதாத்திரிய சீடர்களும் குருவின் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்ப தன்னலமற்ற தொண்டு புரிய முன்வர வேண்டும்.*

*அடுத்து, ஒரு மகானின் பெருமையை உலகம் புரிந்துகொள்ள வேண்டுமாயின், அந்த மகானைப் பற்றிய நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும்.*

*மகாத்மா காந்தி எழுதிய புத்தகங்கள் குறைவு. ஆனால் அவரைப் பற்றி எழுதியவர்களின் புத்தகங்கள் அதிகம். இராமலிங்க*

வள்ளலார் எழுதிய நூல்களைவிட, அவரது நூல்களைப் பற்றி வெளிவந்த நூல்கள் அதிகம். திருவள்ளுவர் எழுதிய நூல்களைவிட, அவரது ஒரு குறள் பற்றி வெளிவந்த நூல்கள் ஏராளம்.

**வேதாத்திரியத்தைப் பற்றி அதிகளவு புத்தகங்கள் வெளிவர வேண்டும். இம்முயற்சிக்கு அருட்தந்தையின் சீடர்கள் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும். வேதாத்திரியத்தைப் பற்றி ஏராளமான நூல்கள் பல மொழிகளில் வரவேண்டும்.**

**புத்தகங்கள் மாமனிதர்களை உருவாக்கி இருக்கின்றன. பகவத்கீதை, அரிச்சந்திரன் கதை, ஜான் சங்கினின் 'அண்டு டு தி லாஸ்ட்' ஆகிய புத்தகங்கள்தான், காந்திஜி என்ற மகாத்மாவை உருவாக்கியது. விவேகானந்தரைப் பற்றிய ஒரு புத்தகம்தான், சுவாமி சத்பவானந்தரை உருவாக்கியது. இதைப்போல் அருட்தந்தையின் கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் அதிகளவில் வந்தால்தான் மாமனிதர்கள் தோன்றுவார்கள்.**

வேதாத்திரியத்தின் புகழ் விரைவில் உலகெங்கும் சென்றுவிடும். அவரது கருத்துக்களை உலகம் ஏற்றுக்கொள்ளும். அவரது இலட்சியக் கனவான உலக சமாதானம் நிச்சயம் வந்துவிடும்.

அன்று பேசிய கருத்துக்களின் தாக்கம்தான் இந்தப் புத்தகம். உலகெங்கும் புகழ்பெற்றுள்ள மகான்கள், அறிஞர்கள் - சான்றோர்கள் ஆகியோர்களின் பொன்மொழிகள் அடங்கிய புத்தகங்கள் வெளி வந்துவிட்டன. நமது ஞானத்தந்தையின், ஞானகுருவின், ஞானவழி காட்டியின் பொன்மொழிகள் மட்டும் இன்னும் வெளிவரவில்லையே என்ற ஏக்கம் என்னிடம் இருந்ததுண்டு. இப்பணியினை, என்னிடம் தான் குருநாதர் விட்டுச் சென்றுள்ளார் என்பதை இப்போது பெருமையாகக் கருதுகிறேன்.

சமய காழ்ப்புகள் மறைய, ஏற்றத்தாழ்வுகள் நீங்க, உயர்வு தாழ்வுகள் இல்லாத நிலை மலர, உலக சமாதானம் மலர்ந்திட, இறையை உணர்ந்து போற்றிய மகரிஷியின் மொழியும் அருளுரை களும் மானுடத்திற்குக் கிடைத்த பொற்குவியலாகும்.

குருவின் நூற்றாண்டு நினைவாக, குருவின் பொன்மொழிகளை தொகுத்து ஐந்து பாகமாக அருட்தந்தை வேதாத்திரி மகரிஷிக்கு இத் தொகுப்பினை அர்ப்பணிக்கிறேன்.

இந்நூல் பொன்மொழிகள் அடங்கிய பேழை மட்டுமல்ல; வேதாத்திரிய அறிவுக் களஞ்சியம், உபதேச மந்திரி, ஞானக் களஞ்சியம்.

**வேதாத்திரியத்திற்கு ஒரு அகராதி.** பொன்மொழிகளோடு கூடுதலாக இவற்றையும் சேர்த்திருப்பது இந்நூலுக்கு பெருமை சேர்க்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை தொகுக்க அவ்வப்போது ஆலோசனை வழங்கிய புலவர் க. தியாகராஜன், அவ்வப்போது மலர்களைக் கொடுத்தனுப்பி வரும் அருள்நிதி தினகரன், வாழ்க்கைத் துணைவியார் அ.நி. பானுமதி குமார், ஞானச்செல்வங்கள் - பிரம்மஞானிகள் நிவேதிதா, நரேந்திரன், தவமைய அன்பர்கள் மற்றும் ஆர்வத்துடன் இந்நூலை வெளியிட்ட பாசமிகு சகோதரர் திரு. மு. வேலாயுதம் ஆகியோர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருவின் புகழை அவரது உபதேசங்களை உலகெங்கும் கொண்டு செல்வோம். குருவின் வாழ்த்தினைப் பெற்று வளமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

குருவின் தொண்டில்
***பானுகுமார்***

*பி.58, ஏழாவது குறுக்குத்தெரு,*
*அண்ணாநகர், செங்கற்பட்டு.*
E-mail: banukumar.v@gamil.com

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அகத்தாய்வு | 13 |
| 2. | அகந்தை | 14 |
| 3. | அகத்தவம் | 15 |
| 4. | அச்சம் | 16 |
| 5. | அசைவ உணவு | 16 |
| 6. | அடிமைகள் | 17 |
| 7. | அரசாங்கம் | 17 |
| 8. | அரசாட்சி | 18 |
| 9. | அரசியல் | 18 |
| 10. | அரசியல்வாதிகள் | 19 |
| 11. | அரசு அலுவலர்கள் | 19 |
| 12. | அமைதி | 19 |
| 13. | அருள் | 21 |
| 14. | அருட்காப்பு | 21 |
| 15. | அறக்கல்வி | 21 |
| 16. | அறம் | 21 |
| 17. | அறநெறி | 22 |
| 18. | அறநெறி மலர | 22 |
| 19. | அறவழி | 23 |
| 20. | அறிவாளி | 23 |
| 21. | அறவழிபாடு | 23 |
| 22. | அறிவுக்கோயில் | 23 |
| 23. | அறிவுடமை | 24 |
| 24. | அறியாமை | 24 |
| 25. | அறிஞர் | 24 |
| 26. | அறிவாட்சித் தரம் | 24 |
| 27. | அறிவு | 24 |
| 28. | அறிவியக்கம்: உடலியக்கம் | 28 |
| 29. | அறிவாட்சித்தரம் | 28 |
| 30. | அறுகுணம் | 29 |
| 31. | அளவுமுறை | 29 |
| 32. | அறிவுரை | 29 |
| 33. | அறுகுண சீரமைப்பு | 29 |
| 34. | அஞ்ஞானம் | 30 |
| 35. | அவதாரம் | 30 |
| 36. | அன்பு | 30 |
| 37. | அன்பு நெறி | 31 |
| 38. | அன்பும் அருளும் | 32 |
| 39. | அன்பும் கருணையும் | 32 |

| | | |
|---|---|---|
| 40. | அன்பும் பாசமும் | 32 |
| 41. | அணு | 33 |
| 42. | அணு ஆயுதங்கள் | 34 |
| 43. | அம்மாவாசை | 34 |
| 44. | அனுபவம் | 35 |
| 45. | அசேதனப் பொருட்கள் | 35 |
| 46. | ஆகர்ஷணம் | 35 |
| 47. | ஆக்கினைத் தவம் | 35 |
| 48. | ஆகாசம் | 36 |
| 49. | ஆதாயம் | 36 |
| 50. | ஆச்சாரம் | 36 |
| 51. | ஆசிரியர் | 37 |
| 52. | ஆசை | 37 |
| 53. | ஆசை ஒழுங்கு | 39 |
| 54. | ஆட்சி | 39 |
| 55. | ஆட்சித்தலைவர்கள் | 39 |
| 56. | ஆதி | 40 |
| 57. | ஆதிநிலை | 40 |
| 58. | ஆயுள் | 40 |
| 59. | ஆலயம் | 40 |
| 60. | ஆராய்ச்சி | 41 |
| 61. | ஆற்றல் | 41 |
| 62. | ஆறாவது அறிவு | 42 |
| 63. | ஆறு தீயகுணங்கள் | 42 |
| 64. | ஆறுமுகம் | 42 |
| 65. | ஆயுதங்கள் | 42 |
| 66. | ஆயுள் | 43 |
| 67. | ஆளுமைத்திறன் | 43 |
| 68. | ஆளுமைப்பேறு | 43 |
| 69. | ஆளுமைவளம் | 43 |
| 70. | ஆன்மா | 43 |
| 71. | ஆன்ம சாந்தி தவம் | 44 |
| 72. | ஆன்ம ஞானம் | 44 |
| 73. | ஆன்ம நிலைகள் | 44 |
| 74. | ஆன்மீகம் | 45 |
| 75. | ஆன்மீக அறிவு | 45 |
| 76. | ஆன்மீக வாழ்வு | 45 |
| 77. | ஆன்மீக விழிப்புணர்ச்சி | 45 |
| 78. | ஆன்மீக மேம்பாடு | 46 |
| 79. | ஆண்கள் | 46 |
| 80. | ஆண் - பெண் | 47 |
| 81. | ஆஸ்திகமும் நாஸ்திகமும் | 47 |
| 82. | இச்சை | 47 |
| 83. | இசை | 48 |
| 84. | இறவாமை | 48 |
| 85. | இறைநிலை | 48 |
| 86. | இறைநிலையறிவு | 51 |
| 87. | இறைநிலை உணர்ந்தவர்கள் | 51 |
| 88. | இறையாற்றல் | 51 |
| 89. | இறையுணர்வு | 52 |
| 90. | இறை நீதி | 53 |
| 91. | இறைவெளி | 53 |
| 92. | இறைத்துகள் | 54 |

| | | |
|---|---|---|
| 93. | இறைநிலைத் தவம் | 55 |
| 94. | இறை வழிபாடு | 55 |
| 95. | இறையருள் | 55 |
| 96. | இருப்பும் இறைநிலையும் | 56 |
| 97. | இயக்க விளைவு | 56 |
| 98. | இயற்கை | 56 |
| 99. | இயற்கை விதி | 58 |
| 100. | இயற்கை நியதி | 58 |
| 101. | இயல்பூக்கம் | 58 |
| 102. | இரத்த அழுத்தம் | 59 |
| 103. | இரண்டொழுக்கப் பண்பாடு | 59 |
| 104. | இராணுவம் | 59 |
| 105. | இல்லறம் | 59 |
| 106. | இளமை நோன்பு | 60 |
| 107. | இழிநிலை | 61 |
| 108. | இலக்கியம் | 61 |
| 109. | இந்தியா | 61 |
| 110. | இன்சொல் | 61 |
| 111. | இன்பம் | 62 |
| 112. | இன்பதுன்பம் | 62 |
| 113. | ஈகை | 63 |
| 114. | ஈசன் நிலையறிந்தோர் | 64 |
| 115. | ஈதல் | 64 |
| 116. | உதட்டுச் சாயம் | 65 |
| 117. | உதவுதல் | 65 |
| 118. | உத்தமர் இயல்பு | 65 |
| 119. | உடல் | 65 |
| 120. | உடலுறவு | 67 |
| 121. | உடல்நலம் | 68 |
| 122. | உடலோம்பல் | 69 |
| 123. | உடற்பயிற்சி | 69 |
| 124. | உற்சவங்கள் | 70 |
| 125. | உயர்புகழ் | 70 |
| 126. | உண்மை | 70 |
| 127. | உபதேசம் | 71 |
| 128. | உரிமை | 71 |
| 129. | உருவங்கள் | 72 |
| 130. | உறவு | 72 |
| 131. | உறவுகள் மேம்பட | 72 |
| 132. | உறக்கம் | 73 |
| 133. | உறுதி | 74 |
| 134. | உயர்முறை | 74 |
| 135. | உயர்வு | 74 |
| 136. | உயர்வு தாழ்வு மனப்பான்மை | 74 |
| 137. | உயிர் | 75 |
| 138. | உயிர் உணர்வு | 76 |
| 139. | உயிர்க்கொலை | 76 |
| 140. | உயிர் - மெய் | 76 |
| 141. | உயிர்நிலை | 76 |
| 142. | உயிர்ச்சக்தி | 76 |
| 143. | உள்ளம் | 78 |
| 144. | உலகநலம் | 78 |
| 145. | உலக அமைதி | 79 |

146. உலகநல வாழ்த்து 79
147. உலக சரித்திரம் 80
148. உலக சமாதானம் 80
149. உலக சமுதாய வாழ்வு 81
150. உலக ஒற்றுமை 81
151. உலக அமைதி வேட்பு 81
152. உலகநல வேட்பு 81
153. உழைப்பு 82
154. உழைப்பாளர் 82
155. உணவு 83
156. உணவு உண்ணும் முறை 83
157. உணர்ச்சி 84
158. உணர்வுகள் 85
159. ஊக்கம் 85
160. ஊழ்வினை 86
161. எண்ணம் 86
162. எண்ண அலைகள் 89
163. எதிர்பார்த்தல் 89
164. ஐம்புலன் 90
165. ஐந்து ஒழுக்கப் பண்பாடு 90
166. ஐயுணர்வு 90
167. ஒழுக்கம் 90
168. ஒத்துப்போகாத சட்டம் 92
169. ஒளி 92
170. ஒலி 93
171. ஓய்வு 93
172. ஓம் 93
173. ஓங்காரம் 93
174. ஓம் சாந்தி சாந்தி சாந்தி 94
175. ஓஸஸ் மூச்சு 94
176. கடமை 94
177. கடவுள் 95
178. கடவுள் எங்கே? 96
179. கவலை 97
180. கடன் 100
181. கடையன் - கயவன் 100
182. கட்சி 100
183. கடைவீதி 100
184. கர்மங்கள் 101
185. கர்மயோகம் 101
186. கர்ப்பகாலம் 102
187. கருணை 103
188. கரு உருக்காலம் 103
189. கருவமைப்பு 104
190. கருமையம் 104
191. கருவிலே திருவுடையார் 108
192. கருமையத் தூய்மை 108
193. கனவு 109
194. களங்கள் 109
195. கடும்பற்று 109
196. கல்வி 110

| | |
|---|---|
| 197. கலை | 111 |
| 198. கந்தன் | 111 |
| 199. கற்பனை | 111 |
| 200. கற்பு | 112 |
| 201. காதல் | 113 |
| 202. காயகல்பம் | 113 |
| 203. காந்தம் | 114 |
| 204. காந்த தத்துவம் | 115 |
| 205. காந்த அலை | 116 |
| 206. காலம் | 116 |
| 207. காலில் விழலாமா? | 117 |
| 208. காற்று | 117 |
| 209. காமம் | 117 |
| 210. காமகுரோதம் | 118 |
| 211. கிரகண நாட்கள் | 118 |
| 212. கிள்ளி எறிவோம் | 118 |
| 213. குத்துவிளக்கு | 119 |
| 214. குடும்பம் | 119 |
| 215. குடும்ப அமைதி | 120 |
| 216. குடும்பமும் ஞானமும் | 121 |
| 217. குரு | 122 |
| 218. குரு காணிக்கை | 123 |
| 219. குருகுலக் கல்வி | 123 |
| 220. குழப்பங்கள் | 123 |
| 221. குழந்தை | 123 |
| 222. குழந்தை வளர்ப்பு | 124 |
| 223. குழந்தைப்பேறு | 124 |
| 224. குணம் | 125 |
| 225. குண்டலினி வாழ்க்கை | 125 |
| 226. குற்றங்கள் | 126 |
| 227. குறை காண்போர் | 126 |
| 228. குறைபாடுகள் | 126 |
| 229. குற்றவாளி | 126 |
| 230. குணநலப்பேறு | 126 |
| 231. கொலைகாரர்கள் | 127 |
| 232. கோள்கள் | 127 |
| 233. கோடீஸ்வரன் | 127 |
| 234. கூட்டுத்தவம் | 127 |
| 235. கூர்தலறம் | 128 |
| 236. கூட்டுறவு | 128 |
| 237. கைரேகை | 128 |
| 238. சக்தி | 129 |
| 239. சகிப்புத்தன்மை | 129 |
| 240. சகோதரத்துவம் | 129 |
| 241. சத்சங்கம் | 130 |
| 242. சங்கீதம் | 130 |
| 243. சடங்குகள் | 130 |
| 244. சட்டம் | 132 |
| 245. சப்தம் | 132 |
| 246. சங்கற்பம் | 132 |
| 247. சமத்துவம் | 132 |
| 248. சமத்துவ வாழ்வு | 133 |
| 249. சமாதானம் | 133 |
| 250. சமையல் | 133 |

| | | |
|---|---|---|
| 251. | சமுதாயநல வாழ்த்து | 133 |
| 252. | சமுதாயம் | 133 |
| 253. | சஞ்சித கர்மம் | 135 |
| 254. | சந்தர்ப்பம் | 136 |
| 255. | சாக்ரட்டீஸ் | 136 |
| 256. | சாபம் | 136 |
| 257. | சாதி | 136 |
| 258. | சாந்தம் | 137 |
| 259. | சாந்தி தவம் | 137 |
| 260. | சாஸ்திரம் | 138 |
| 261. | சிக்கல் | 138 |
| 262. | சித்தர்கள் | 139 |
| 263. | சித்தன் | 140 |
| 264. | சித்து | 140 |

# வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 [முதல் பாகம்]

## 1. அகத்தாய்வு

- ✪ அகத்தாய்வு என்பது தூய்மையை நாடிச் செல்லும் தெய்வீகப் பயணம்.
- ✪ அகம் + ஆய்வு = அகத்தாய்வு. அகம் என்பது அனைத்து எண்ணங் களையும் பதிவு செய்து இருப்பாக வைத்துள்ள கரு மையத்தைத் தூய்மை செய்வது.
- ✪ தானே தனது செயல்களைச் சோதனை செய்து விளைவைக் கணித்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு.
- ✪ தன்னையே உள்நோக்க அறிவால் ஆராய்ந்து, தன்னிடம் அமைந்துள்ள உணர்ச்சிவயப்பட்ட குணங்களையெல்லாம் அறிந்து, அவற்றையெல்லாம் மாற்றி அமைத்துக் கொள்ளத் தகுந்த போதனை, சாதனை முறைகளே 'அகத்தாய்வு' என்ற பயிற்சியாகும்.
- ✪ ஆக்கினை, துரியம், துரியாதீதம் முதலிய அகத்தவப் பயிற்சிகளைச் செய்து மனவலிமையைப் பெருக்கிக் கொள்ள முடியும்.
- ✪ அகநோக்குப் பயிற்சியால் அறிவின் நிலையும் இயல்பும் அறிந்த பின்னரே அதற்கு மூலநிலையான உயிரின் நிலையை உணர முடியும்.
- ✪ தனது செயல்களைச் சோதனை செய்து, வினையைக் களைந்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு ஆகும்.
- ✪ எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார்? - என்ற பயிற்சிகள் மூலம் அகத்தை ஆய்வு செய்து கொள்ள முடியும்.

- ✪ ஆசை சீரமைத்தல் அகத்தாய்வு பயிற்சி செய்யுங்கள். உடல்நலம், மனவளம், பொருள்வளம், நற்புகழ், நிறைவு இவை பெருகும். அமைதியுண்டாகும்.
- ✪ சினம் தவிர்த்தல் பழகுங்கள். குடும்பம், நண்பர்கள், தொழில் செய்யுமிடத்திலுள்ளோர், உற்றார், உறவினர் இவர்களிடமிருந்து உங்களுக்கு அன்பு, நட்பு இவை கிடைக்கும். இனிமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.
- ✪ கவலை ஒழித்தல் பழகுங்கள். அச்சமின்மை - மெய்யுணர்வு உடல்நலம் - மனநிறைவு இவையுண்டாகும்.
- ✪ நான் யார் என்ற ஆராய்ச்சியில் தெளிவு பெறுங்கள். பேரியக்க மண்டலத் தோற்றம், இயக்கம், விளைவு மற்றும் மறைபொருட் களான மனம், உயிர், தெய்வம் இவை பற்றிய உணர்வு உண்டாகும்.
- ✪ அகத்தாய்வு பயிற்சி ஆறு தீயகுணங்களைப் போக்க உதவுகிறது. பேராசை, சினம், கடும் பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம் என்ற தீயகுணங்களை, முறையே நிறைமனம், பொறுமை, ஈகை, நேர்நிறை உணர்வு, கற்பு, மன்னிப்பு என்ற நற்குணங்களாக மாற்றுகின்றது.
- ✪ நாள்தோறும் செய்தவற்றின் பயனை நீங்கள் நல்லுறக்கம் கொள்வதற்கு முன் கவனித்துக் கொள்வீர்.
- ✪ இறைவன் நானாக இருக்கிறான் என உணர்ந்தால் தன்முனைப்பு எழாது.
- ✪ தானே தனது செயல்களைச் சோதனை செய்து விளைவைக் கணித்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு ஆகும்.

## 2. அகந்தை

- ☆ அகந்தை உறவுகளை முறிக்கும். அன்பு உறவுகளை வளர்க்கும்.
- ☆ தான் என்ற அகம்பாவம் உள்ளவரை இறைவனின் செயல் எதிர்ப் பாகவே இருக்கும்.
- ☆ பேரியக்க மண்டல மலர்ச்சிகட்கு ஆதியானதே தெய்வம். அதன் மலர்ச்சி நிலைகளில் சிறந்த கட்டம்தான் மனிதன். அவன் தெரிந்தோ தெரியாமலோ அவனுள் அடங்கியுள்ள முழுமைப்

பொருளானது, தான் உயர்ந்தவன் என்று ஒலிக்கிறது. இதனால் எந்தத் தவறும் இல்லை. ஆயினும் 'எல்லா உயிர்களும் என்போன்ற பிறப்பிலும் - அதற்குரிய செயல்களிலும் சிறப்புப் பெற்றுத்தானே விளங்குகின்றன' என்ற உண்மையை மறந்து - 'தான் மாத்திரம் உயர்ந்தவன்' என்று எண்ணும் மயக்கம்தான் அவன் அறிவின் சிறுமையை விளக்குகின்றது. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே கால எல்லையைக் கொண்டு இயங்கும் உடலைப் பற்றியும், அதனோடு இயங்கும், உயிரைப் பற்றியும், அதன் படர்க்கை நிலையாகிய அறிவைப் பற்றியும் அறியும் வரை இந்த மயக்கம் ஒவ்வொருவருக்கும் இயல்புதான்.

☆ அகம்பாவம் அழியும்வரை இறைவனுடைய செயல் எதிர்ப் பாகவே இருக்கும்.

☆ மனிதனின் துன்பமெல்லாம் இயற்கையை அறியாமலும், அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்துகொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான் ஆணவம் என்பார்கள்.

## 3. அகத்தவம்

✯ அகத்தவத்தால் ஐம்புலனை வென்றிடலாம். அகத்தவத்தால் அறுகுண ஆளுமைப் பேறடைந்திடலாம்.

✯ அகத்தவத்தால் இல்லறத்தை அன்பகமாய் மாற்றிடலாம். அகத்தவத்தால் அனைத்துயிர்கள் நட்பை பெற்றிடலாம்.

✯ உயிருக்குள்ளாகத் தெய்வமே அறிவாக, சிவமாக இருக்கிறது என்று விளக்கிக் காட்டுவதுதான் அகத்தவப் பயிற்சி.

✯ அகத்தவத்தின் பொருள் கண்டு அதன் பெருமை உணர்ந்திடுவீர். அகத்தவமோ உயிரினிலே அறிவை ஒடுக்கும் பயிற்சி!

✯ அகத்தவத்தால் மேலும் உயிர் அறிவாகி மெய்ப்பொருளாகும்!

✯ கரு மையத்திலேயே மனதை வைத்து, ஒன்றி நின்று நிலைத்துப் பழகிய அகத்தவச் சாதனையாளர்களில் சிலருக்கே நுண்ணியக்க நிலையை உணர்ந்துகொள்ளுகின்ற வாய்ப்புக் கிட்டும்.

✯ மனதைச் சீரமைத்துக் கொள்ள உதவுவது அகத்தவம். அதற்கு உயிர்மேல் மனம் வைத்துப் பழகுகிறோம்.

✯ அகத்தவம், அகத்தாய்வு இவை இரண்டும் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதவை. இவற்றால் தன் விளக்கம் பெற்று, தன்நிலை

உணர்ந்து வாழ்வை வளப்படுத்திக்கொண்டு, தானும் வாழ்ந்து வாழ்வாங்கு வாழ அனைவருக்கும் உதவவேண்டும்.

- ✯ ஐயுணர்வு பெற்றபோதிலும், ஒருவன் மெய்யறிவு பெறாது போனால், அந்த ஐயுணர்வு பயனற்றதாகும். அவனது பிறப்பு, வாழ்க்கை யாவும் பயனற்றதாகப் போய்விடும். இந்தப் பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பெறவேண்டுமானால், அகத்தவம் பயில வேண்டும்.
- ✯ அகத்தவத்தால் அலைவிரைவு மனதுக்குக் குறையும்போது விரிந்துணரும் ஆற்றலும் நுணுகியறியும் திறமையும் அதிகரிக்கிறது. மனஅலை விரைவு குறையும் அளவுக்கு அறிவு இறைநிலை யாற்றல் என்ற நியதியை அந்தந்த அளவில் அறிந்துகொள்கிறது. எல்லா மனிதரிடத்திலும் இப்பேராற்றல் இயல்பாக உள்ளது. பயிற்சியும் பழக்கமும் வெற்றியைத் தரும், பயனை எல்லோரும் அனுபவிக்கலாம்.
- ✯ அகத்தவத்தால் வீடுணர்ந்து அமைதி பெற்று இன்புறலாம்.

## 4. அச்சம்

- ✯ இயக்கங்களுக்கெல்லாம் இறுக்கத் தத்துவம் மூலம். பயத்துக் கெல்லாம் மூலம் பற்றும் பாசமும்.
- ✯ சினம், அச்சம் இரண்டும் ஓர் மனிதன் வாழ்வில் சீர்குலையச் செய்யும் கொடும் உட்தீயாகும். சினம் அச்சம் ஒழிய சிந்தனையை ஏற்றி சிவன் சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.

## 5. அசைவ உணவு

- ✧ அசைவ உணவை உண்பதால் நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்காது. மேலும் இந்தப் பழக்கத்தால் தோல் நோய்கள், இருதய நோய்கள், மனம் சம்பந்தமான நோய்கள், பதட்டம், கோபம் போன்றவை வருகின்றன. மேலும் உடலில் உள்ள சுமார் 2,70,000 கோடி செல்களையும் பாதிக்கின்றது. ‘கொன்றால் பாவம், தின்றால் போச்சு’ என்பது வழக்கு. கொன்ற பாவம் தின்றவனுக்குப் போச்சு என்பதுதான் இதன் பொருள்.
- ✧ பிறர் பொருளை அபகரித்தால் திருட்டு என்போம். இந்தப் பேருலுகில் மக்கள் எல்லாம் பரமென்பார்! இதனை பிற உயிரை

ருசிக்கும் உணவிற்கும் கொன்று படைத்தல் கொலை திருட்டு இரு இணைப்பு குற்றமன்றோ?

✧ உயிர்கள் தமை முயற்சியினால் பலவாக்கி அவற்றின் ஊன் வளர்க்கும் முறை படிப்படியாய் ஒழித்து உயிர்களிடம் அன்பு கொள்வோம். நம் குழந்தைகட்கு உணவு முறையைத் திருத்தி உணர்வாழ்வு காண்போம்.

✧ மாமிச உணவு அதிகமான உணர்ச்சிகளைத் தூண்டும். நோய் களையும் உண்டுபண்ணக் கூடியது. உதாரணமாக ஒரு மாமிசத் துண்டையும், ஒரு கத்தரிக்காய் துண்டையும் எடுத்துக் கொள்ளுங்கள். அந்த இரண்டையும் தனித்தனியே மூடி வைத்துவிடுவோம். ஒரு வாரம் கழித்துத் திறந்து பார்த்தால் கத்தரிக்காயில் எந்த துர்நாற்றமும் வராது. ஒன்றிரண்டு புழுக்கள் இருக்கலாம். ஆனால் மாமிசத்துண்டு அத்தனையும் புழுக்களாக மாறியிருக்கும். துர்நாற்றம் தாங்க முடியாது. அந்த அருவருக்கத்தக்க மாற்றம் பெற்று மாமிசம் நோயை உண்டுபண்ணக் கூடியது.

✧ மாமிச உணவை மனிதன் நாடும்பொழுது 1. உயிர்க்கொலை; 2. அதன் உடலை உணவுக்காக திருடுதல்; 3. அவ்வுயிரின் வாழும் உரிமையைப் பறித்தல் என்று மூன்று குற்றங்களையும் செய்து விடுகிறான். இந்தக் குற்றங்கள்தான் சமுதாயத்தில் மக்களிடையேயும் பரவும்போது எல்லா வகையான துன்பங் களுக்கும் காரணமாகின்றன. இந்த மூன்று குற்றங்களே உலகில் உள்ள அனைத்து குற்றங்களுக்கும் அடிப்படை. அங்கு அன்பும் கருணையும் எவ்வாறு மலரும்.

## 6. அடிமைகள்

✪ ஆண்கள் பெண்களை அடிமைகளாக நினைப்பதும் - நடத்துவதுமான இன்றைய போக்கானது பண்பாட்டினை உருக்குலைத்து விடுகிறது.

## 7. அரசாங்கம்

* அறியாமையாலும் - உணர்ச்சிவயத்தாலும் மனிதர் ஒருவருக்கு ஒருவர் துன்பமளிக்காது தடுக்கவும் - மீறுபவர்களைத் திருத்தவும் - தண்டிக்கவும் ஏற்ற செல்வாக்கோடு அமைக்கப்பெறும் சமுதாய நலக்காப்பு நிறுவனமே அரசாங்கம் ஆகும்.

* அரசாங்கத்தை நடத்துவதற்கு - அறிஞர்கள் - தொழில் நிபுணர்கள் - உழைப்பாளிகள் இவர்களின் சேவை தேவைப்படுகிறது.
* ஆழ்ந்த சிந்தனையாளர்கள் அரசேற்க களங்கம் போம்.
* அறிவிலும் - தொழில்துறையிலும் - பொருள் வளத்திலும் மக்கள் முன்னேற வேண்டுமெனில் சிந்தனையாளர்கள் மன்றமே ஆட்சியை நடத்த வேண்டும்.

## 8. அரசாட்சி

❀ பிறருக்கு ஒரு குறிப்பிட்ட துன்பத்தை ஒருவன் விளைவித்தால் அதற்குப் பதில் சமுதாயப் பொறுப்பில் இன்பதுன்பத்தை அவன் அனுபவிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு - அதன் மூலம் மக்களைப் பயமுறுத்தி அவர்கள் தீமை புரியாதிருக்கவும் - மீறிச் செய்பவர்களை முறைப்படி தண்டனை மூலம் சீர்திருத்தம் செய்ய ஏற்ற நிர்வாக முறையை அரசாட்சி என்று சொல்லுகின்றோம்.

❀ கூடி வாழுகின்ற முறையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களை அரசாட்சி என்றும் - ஆட்சிச் சட்டங்கள் என்றும் கூறுகிறோம்.

## 9. அரசியல்

❁ பண்பாடே இல்லாதபோது சர்வாதிக்காரர்தான் அரசியல் வாதியாக வரவேண்டி இருக்கிறது. குடியாட்சி நிலைப்பதில்லை. அப்படிப் பார்த்தால் அரசியல் மேல் குற்றம் சொல்வதற்கில்லை. சமுதாயத்தில் உள்ள மக்கள் எந்த அளவிற்கு உயரவேண்டுமோ அந்த அளவுக்கு உயர்ந்தால்தான் சிறப்பாக அரசியல் அமையும்.

❁ நீர் தனது சமநிலையைக் கண்டுபிடித்துக் கொள்வதுபோன்று மக்களின் வாழ்க்கை முறையானது தனக்குரிய அரசியல் முறையைக் கண்டுபிடித்துக் கொள்ளும்.

❁ அரசியலே மனித வாழ்விற்கு நாளுக்கு நாள் பாரமாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை மாறட்டும்.

❁ அரசியல் கட்சிகள் ஆக்கத்துறையில் செயலாற்ற வேண்டுமெனில், மக்கள் நலனையே கருதுகின்ற உத்தமர்கள் அக்கட்சிகளுக்குத் தலைவர்களாக வரவேண்டும்.

## 10. அரசியல்வாதிகள்

- ✪ அரசியல்வாதியின் தன்முனைப்பு - பேராசை - கோபம் - வஞ்சம் போன்ற குணக் குறைபாடுகள் இன்றைய அரசியலில் பலவகைக் குழப்பங்களையும் - லஞ்ச ஊழல்களையும் உருவாக்கி வருகின்றன.
- ✪ இக்காலத்தில் நடைமுறையில் சில அரசு நிர்வாகிகளும் - அரசியல்வாதிகளும் மனித வாழ்க்கைக்கு மதிப்பிட முடியாத சொத்தாக இருப்பதற்குப் பதிலாக சில பகுதிகளில் அவர்களே பெரிய சிக்கல்களாக இருக்கிறார்கள்.
- ✪ குமாஸ்தா உத்தியோகம் பார்ப்பதற்குக்கூடச் சில தகுதிகள் தேவைப்படுகின்றன. அரசியலில் தலைவர்களாக முன்வருபவர் களுக்கு எந்தத் தகுதியையும் ஏற்படுத்தவில்லை.
- ✪ பொருளாசை கொண்டவர்கள் - ஒழுங்கீனர்கள் - கயவர்கள் - கோழைகள் - சமூகநல விரோதிகள் போன்றவர்கள் கட்சித் தலைவர்களாக இருக்கமுடியாத, வரவே முடியாத சூழ்நிலைகள் உருவாக வேண்டும்.

## 11. அரசு அலுவலர்கள்

- ✰ அரசு அலுவலர்களும் - அரசியல்வாதிகள் ஆகியோரிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் நியாயம் நேர்மைக்கும் அவர்களின் நடைமுறைச் செயல்களுக்கும் இடையே ஏமாற்றம் அளிக்கும் அளவில் பெரிய இடைவெளி இருக்கின்றது.

## 12. அமைதி

- ✯ அமைதியைப் பெற பொறுமை, சகிப்புத்தன்மை விட்டுக் கொடுத்தல் இம்மூன்றும் எல்லையின்றித் தேவையாகும்.
- ✯ சொத்துக்களின் எண்ணிக்கையால் மிகமிக அமைதி கெடும்.
- ✯ பிறர் குற்றத்தை பெரிதுபடுத்தாமையும் - பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும்.
- ✯ மனவிரிவு - விளக்கம் - விழிப்பு நிலைகளும் கூர்ந்துணர்தல் - கிரகித்தல் - ஒத்துப்போதல் - பெருந்தன்மை - ஆக்கச் செயல்களில்

ஈடுபாடு ஆகியவைகளை எந்த அளவுக்கு நாம் வளர்த்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்குத்தான் மகிழ்ச்சியும் - நிறைவும் - அமைதியும் பெறலாம்.

- ✰ பெற்ற ஞானத்தின் அளவு - குடும்பத்தில் நிலவும் அமைதியின் அளவுதான்.
- ✰ ஒரே ஒரு நாட்டில் மட்டும் அமைதி இருந்தால் போதாது. எல்லா நாடுகளிலும் அமைதி நிலவ வேண்டும்.
- ✰ மனவளக்கலை குடும்பத்திலிருந்து அமைதி தொடங்கி சமுதாய அமைதியாக விரிய வேண்டும்.
- ✰ வேண்டியதற்கு படி கட்டி வேண்டாததற்கு வடிகட்டும் எண்ணமே உள்மன அமைதிக்கு உரம்.
- ✰ அமைதியைப் பெற பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் இம்மூன்றும் எல்லையின்றித் தேவையாகும்.
- ✰ இன்பமும் அமைதியும் மனத்திற்குள்ளிருந்துதான் வரவேண்டும் என்பதை அறியாதோர் எங்கெல்லாமோ அதை தேடி அலைந்து துன்புறுகிறார்கள்.
- ✰ மனம் அமைதி பெற்றால்தான் உயிராற்றலும் அமைதி பெறும்; உடல் செல்கள் அமைதி பெறும்; இந்நிலையில்தான் உடல் - மனம் - உயிராற்றல் மூன்றும் ஒருங்கிணைந்து பிணக்கின்றிச் செயல்படும்.
- ✰ கடல் நீர் ஆவியாகி, மழையாகி, குளமாகி, குப்பையாகி, ஆறாகி மீண்டும் கடலை அடையும்போதுதான் அமைதி பெறுவதுபோல - இறைநிலையிலிருந்து பரிணாமத்தால் மனிதனானவன், மீண்டும் இறைநிலையை அடையும்போதுதான் அமைதியடைய முடியும்.
- ✰ சிக்கனமும் சிந்தனையும் சீர்திருத்தமும் பேராசை ஒழிந்த நிறைமனமும் சேரும்போது அமைதி நிலவும்.
- ✰ பிறர் குற்றத்தை பெரிதுபடுத்தாமையும் - பொறுத்தலும் மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும்.
- ✰ தெய்வத் தன்மையை அடைய வேண்டுமானால் மனிதன் அமைதி நிலைக்கு வரவேண்டும்! அவனது சிந்தனை உயர வேண்டும்; அறிவு நுண்மை பெறவேண்டும்; உண்மையை உணர வேண்டும்.
- ✰ இன்பமும் இல்லை - துன்பமும் இல்லை என்றால் அதுதான் அமைதி.

- ✯ அமைதியான குடும்பம் என்ற கோயிலுக்கு நான் பூசாரியாய் வருவேன்.
- ✯ பொருள் வளத்தில் நல்லறிவில் உயர்வு பெற்றால் அருள் வளம் வாழ்க்கையிலே அமைதி கிட்டும்.
- ✯ சலனப்படாமல் ஒரு மனிதன் இருக்க வேண்டுமானால் அவனுக்கு அமைதிநிலை வரவேண்டும்.
- ✯ வெளியே உள்ள ஒழுங்கமைப்பும் அழகும் உள்ளத்தை நிறைவாக அமைதியுறச் செய்யும்.

## 13. அருள்

- ✯ தானும் தன் இனமும் தன் நாடும் வாழ நினைத்தல் அன்பு. அண்டசராசரம் வாழ நினைத்தல் அருள் எனப்படும்.

## 14. அருட்காப்பு

- ✧ அருட்பேராற்றல், இரவும் - பகலும், எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாத் தொழில்களிலும், உறுதுணை யாகவும், பாதுகாப்பாகவும், வழிநடத்தியாகவும் அமையுமாக!
- ✧ இந்த அருட்காப்பு என்ற எண்ண வளையத்தை நம்மைச் சுற்றி - நம் இல்லத்தைச் சுற்றி - நாம் பயணம் செய்யும் வாகனத்தைச் சுற்றி மனதாலேயே அமைத்து ஒரு பாதுகாப்பு வளையமாக ஆக்கிக்கொள்ளலாம்.

## 15. அறக்கல்வி

- ✪ அறிவை அறிவால் அறிவதே அறிவு. அப்படி அறிவதற்கான அறிவைத் தருவதுதான் அறக்கல்வி.

## 16. அறம்

- ✻ தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்ற கடமையும் இணைந்த தொகுப்புக் கருத்து 'அறம்' ஆகும்.
- ✻ பிறர் விருப்பம் கூர்ந்துணர்ந்து தன் விருப்பம் பயன்படுத்தல் அறம் என்றும் கடமை என்றும் அன்பு என்றும் அறிந்து கொண்டோம்.

* ஈகை ஒழுக்கத்தோடு இணைத்து ஆற்ற இத்தகைமை அறமாகும்.
* பிறர்க்கோ - தனக்கோ - தற்காலத்திலோ - பிற்காலத்திலோ - அறிவிற்கோ - உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும் - முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும் - பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையும் - தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.
* ஒழுக்கம் - கடமை - ஈகை என்ற மூன்றும் ஒன்றிணைந்த உயர் நெறியே அறம் என்றாகும்.
* விளைவறிந்து விழிப்போடு துன்பம் வராமல் காக்கும் செயல் முறையே அறமாகும்.
* பாவம் தேவையா? பழக்கத்தினாலே செல்கிறோம். அவ்வளவு தான். ஆனால் - சிந்தனைக்கு வந்து முடிவு கட்டிவிட்டால் - இந்தச் செயல் வேண்டாம் என்று முடித்துக் கொள்ளலாம். அதிலிருந்து இயற்கைக்கு ஒத்த வாழ்வு வரும். இப்படிப் பழகிக் கொண்டால் - அந்தப் பழக்கம்தான் எதிர்காலத்தில் நிலைக்கும். அதுதான் பாவம் ஒழிந்த இடம். அதுதான் அறம்.

## 17. அறநெறி

❀ அறநெறி என்பது ஒழுக்கம் - கடமை - ஈகை.

❀ இறைவணக்கம் - அறவழி என்ற இரண்டுந்தான் எல்லா மதங் களிலும் போதிக்கப்டுகின்றன. அவற்றுள் இறைநிலையை மட்டும் எந்தக் காலத்திலும் எந்த மதத்தாலும் உண்மையான முறையில் விளக்கிக் காட்ட முடிந்ததில்லை. இறைநிலையில் உண்மை உணர்வு வரும்போதுதானே அறநெறி யதார்த்தமாக முடியும்?

❀ திருந்திய செயல்களினால் இன்பதுன்பங்களையும் - அதன் அளவுகளையும் மாற்றியமைத்துக் கொள்கின்ற செயல் திறமைகளே அறநெறி.

## 18. அறநெறி மலர

✪ இறையுணர்வு - அறநெறி இரண்டும் எல்லா மதங்களிலுள்ள நோக்கமாகும். படித்தோ - வேதாந்திகளின் சொற்பொழிவைச் செவிமடுத்தோ இறைநிலை மதிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டாலும்

இறைவனே அறிவாக இயங்குகிறான் என்ற உண்மையினை அகத்தவத்தின் மூலம் அறிந்தால்தான் அறநெறி இயல்பாக மலரும்.

## 19. அறவழி

✰ வாதங்கள் வேண்டாம். வாழ்வாங்கு வாழ்ந்த முன்னோர்கள் வேதங்கள் விரித்துள - விளக்கத் தொகுப்புகளனைத்தும் - ஆதங்கம், வறுமை, அறியாமை போக்கி மனிதரெல்லாம் பேதங்கள் அறப்பிழையற வாழும் அறவழியோ.

## 20. அறிவாளி

✯ கணவன் மனைவி இருவரில் முதலில் விட்டுக் கொடுப்பவர் அறிவாளி.

✯ கணவன் - மனைவி இருவரில் யார் அதிகமாக விட்டுக் கொடுக் கிறார்களோ அவர்தான் சூப்பர் அறிவாளி.

## 21. அறவழிபாடு

✯ சமுதாயத்தில் ஒழுக்கம் - கடமை - ஈகை என்ற மூன்றும் இணைந்த அறவழிபாடு தேவை. பிறருக்குத்துன்பம் இல்லாமல் செயலாற்றுவது ஒழுக்கம். நாம் வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பது - கடமை. பிறர் துன்பம் தீர்ப்பது - ஈகை. மனிதன் இந்த மூன்றையும் உணர்ந்து திருந்தி நடப்பதற்கு ஒரு சிரமமும் இல்லையே!

## 22. அறிவுக்கோயில்

✧ மக்கள் நல்ல அறிவாட்சித் தரம் பெற்றதால் உலகில் அரசியல், பொருளாதாரம், மதம் இவை மூன்றும் ஒழுங்குபடும். இந்த மூன்றும் ஒழுங்கு பெற்றால் - மனிதகுலம் அமைதி அடையும். அத்தகைய முறையில் உலகை முழுமையாக மாற்றியமைக்கும் பணி இறைநிலை உணர்வில் இருந்துதான் வரவேண்டுமே தவிர, இடையிலிருந்து இல்லை. வேறு எங்கிருந்தும் இல்லை. அப்பணியைத் தொடங்கவும் நடத்தவும் உதவுவதற்குரிய இடம்தான் ‘அறிவுக் கோயில்’.

## 23. அறிவுடமை

❂ பிறரின் அறியாமையை மன்னிப்பதும் தனது அறியாமையை அகற்றுவதும் அறிவுடைமை.

❂ இயற்கையிலே எந்தக் குறைபாடும் இல்லை. மனிதனின் அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்.

❂ துன்பமற்ற - துன்பம் எழாத வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே அறிவுடைமையாகும்.

## 24. அறியாமை

✻ உடலும் - குடலும் அற்ற இறைவனுக்கு வேறு ஒரு தேவையு மில்லை. பொருட்களைக் கொடுத்து அரூபமான இறைவனை மகிழ்விக்க நினைப்பது அறியாமையே.

## 25. அறிஞர்

❃ அறிவின் இருப்பிடம், இயல்பு - இயக்கம் அறிந்து ஒழுகுவோர் அறிஞர்கள் ஆவர்.

❃ சக்கரம் சுழல்வதால் வண்டி ஓடுவதுபோல, அறிஞர்களின் சிந்தனைச் சக்கரங்களின் சுழற்சிக்கேற்ப, உலக சமுதாய வாழ்வு எனும் வண்டி ஓடுகிறது.

## 26. அறிவாட்சித் தரம்

✪ கருத்தொடரில் தொடர்ந்து வந்த பதிவுகளும் - பிறவி எடுத்த பின்னர் செய்த வினைப்பதிவுகளும் - கூடிய இயற்கையும் செயற்கையும் இணைந்த ஒரு பெருந்தீயே அறிவாட்சித்தரம் ஆகும்.

## 27. அறிவு

✰ கதிரவன் காலத்தே காணாத விண்மீன்போல் புதிர்போன்ற அறிவுநிலை புலன் இயக்குங்கால் தோன்றா.

✰ காமதேனு என்பதுவும் கற்பகம் சிந்தாமணியும் நாம் விளக்கும் காணில் நமதறிவின் மூன்று நிலை.

☆ புலனைந்தின் துணைகொண்டு பூவுலகை அனுபவித்து புலன் தொடர்பற்று ஆராயும் புதுமையே ஆறாம் அறிவாம்.

☆ தெய்வ அறிவே திருந்திய அறிவாம். உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே. செய்யும் வினைகளைச் சீரமைத்திட மரணமில்லை அறும் பிறவித் தொடர்.

☆ இயங்குகின்ற பொருள்கள் தன்மை இடம், பருமன், காலம் இயக்க மென்ற நால்வகையால் போதித்து உணர்ந்து இயங்குகின்ற அறிவிற்கு இவை நாலும் கடந்த இயக்கமற்ற மெய்ப்பொருளே சூனியமாய் உள்ளது.

☆ என்றென்றும் மாறாத - அளப்பரிய - உவமையிலா - இயற்கை வேதம் - அன்றன்றும் வாழ்க்கையிலே நினைந்து நினைந்து - அனுபவிப்பான் அறிவறிந்தோன். பேரறிவு - சிற்றறிவு - புலனறிவு இவை மூன்றும் பிறழாது ஒன்றோடு ஒன்றிணைந்து செயலாகும் சீரமைப்பின் அளவொக்கச் சிந்தைக்கும் உடலுக்கும் சிறப்புண்டாம் இனிமையும் அமைதியும் உள்வாழ்வாம்.

☆ அறியாமை - அலட்சியம் - உணர்ச்சிவயம் மூன்று வகையிலும் அறிவு வறுமை நிலவுகிறது.

☆ எல்லையற்றதை எல்லையுடையதாகப் பார்ப்பது அறிவின் குறைபாடு.

☆ இறைநிலை உயிராக மலர்ந்து அதிலிருந்து அறிவாக செயல் படுகிறது.

☆ உணர்ச்சியை வெல்வது இயல்பு அறிவால் உணர்ச்சியை வெல்வது உயர்வு.

☆ அறிவு என்பது அறியப்படுவது - ஞானம் என்பது உணரப்படுவது.

☆ அறிவை ஏடுகளில் பெறலாம், ஞானத்தை தவத்தால் பெறலாம்.

☆ அறிவு அழிவுக்குத் துணைபோகும். ஞானம் ஆக்கத்திற்கு அச்சாணியாக இருக்கும்.

☆ ஆறாவது அறிவின் கூர்மைதான் சிந்தனை. சிந்தனைதான் அறியாமையை அகற்றி அறிவை முழுமையாக்க வல்லது.

☆ ஆரஞ்சுப் பழத்தில் உள்ள சுளைகளை அழகாக அடுக்கியது யார்? அந்தச் செடியில் இயங்குகின்ற அறிவுதானே.

☆ காயின் புளிப்பை கனியின் இனிப்பாக மாற்றுவது அந்த மரத்தில் இயங்கும் அறிவுதான்.

☆ ஆறாவது அறிவைப் பெற்ற மனிதப் பிறவியினது நோக்கம் இறைநிலையே. மனிதனிடத்தில் அறிவாக விளங்குகின்றது என்ற உண்மையினைத் தெரிந்துகொண்டு நிறைவு மற்றும் அமைதி பெறுவதாகும்.

☆ அனைத்தையும் - கற்பதற்கும் - கற்றபடி வாழ்ந்து பயன் பெறு வதற்கும் மனிதனிடம் போதிய அறிவு அமைந்துள்ளது.

☆ எல்லையற்றதை எல்லையுடையதாகப் பார்ப்பது அறிவின் குறைபாடு.

☆ வெளிச்சத்திலே இருள் நிறைந்திருப்துபோல அறிவிலே தெய்வம் என்ற நிலை இருக்கின்றது.

☆ அறிவிற்கு ஓய்வு அளி. அதுவே உன் ஓய்வாகும். அறிவிற்கு ஓய்வினால் ஆற்றல் பெருகிடும். அறிவிற்கு அடித்தளம் அருள் நிலை வெளி - தெய்வம் அறிவிற்கு வெளி நினைவு ஒன்றேதான் முழு ஓய்வு.

☆ மனிதனின் அறிவு - புலன்களில் இயங்குவது பூவில் மணம் போன்றது.

☆ மணியின் ஓசைபோல பூவின் மணம்போல் நெருப்பிலே வெளிச்சம்போல உயிரின் ஆற்றல் சிறப்பு அறிவாக விளங்கு கின்றது.

☆ இறைநிலையே தனது பரிணாமத்தால் விண்ணாகி - அண்டங் களாகி - உயிரினங்களாகி - மனமாகி - மனிதனிடத்து நுண்ணிய பொருட்களையெல்லாம் உணரவும் - விரிந்தகன்ற எல்லை இல்லாத இறைவெளியாகிய தன்னையே தன்னகத்தே அடக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெறும்போது அறிவாகிறது.

☆ கரு வளரவளர கருப்பையும் அகன்று தேவைக்கேற்ப விரிவு அடைகிறது. இதுபோல அறிவு வளரவளர அது செயல்புரிய ஏற்ற வாய்ப்பும் வசதிகளும் பெருகிக் கொண்டேயிருக்கும்.

☆ அறிவறிந்தோர் அகத்தை மெய்ப்பொருளாய் காண்பர் அறிவை அறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு.

☆ அறிவின் பயணத்தில் ஆங்காங்கு ஓய்வு தேவைபோன்று ஆங்காங்கு ஜீவஇனம் பிறப்பது - வாழ்வது - முடிவது என்பன தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

☆ எந்தப் பொருள் எந்தத் தன்மையுடையதாக இருந்தாலும் சரி. அதைப் பிரித்து அணுவாக்கி - அணுவுக்கு மூலமாக பரநிலை உள்ளது எனக் கண்டு அதை உணர்வதற்குத்தான் அறிவு பயன்பட வேண்டும்.

☆ பொருள்வய அறிவு - (உடல்வயப்பட்ட அறிவு) - உயிர்வய அறிவு என்ற இரண்டிலும் மனிதன் சமமாக தெளிவு பெற வேண்டும்.

☆ அறிவு தனது முழுமை எல்லையை நோக்கித்தான் வளர்ச்சி பெற்றுக்கொண்டு இருக்கிறது.

☆ அறிவு இல்லாத பொருளோ - நிகழ்ச்சியோ இல்லை.

☆ இறைநிலையே மனிதனிடம் அறிவாக விளங்குகின்றது.

☆ அறிவைப் பற்றி முழுமையான விளக்கம் வேண்டுமானால் - காந்த ஆற்றலை அறிவினாலேயே உணர்ந்தாக வேண்டும்.

☆ எல்லா ஜீவன்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் போதிய அளவு அறிவு இருக்கிறது.

☆ மனிதனுடைய அறிவு - ஆதிகாலத்திலிருந்து இன்றுவரையில் வாழ்ந்த முறையாலும் - இடங்களாலும் - உணர்வுகளாலும் - மேன்மேலும் சிறப்புற்றுக்கொண்டே இருக்கிறது.

☆ உலகில் உள்ள தோற்றப் பொருட்கள் அனைத்தையும் - அவை இயங்கும் முறைகள் அனைத்தையும் மனிதன் ஐம்புலன்களால் உணர்ந்து கொள்கிறான். எனினும், பிறப்பு இறப்பு அவற்றுக் கிடையே உள்ள தோற்றங்களின் மூலம் மனித அறிவுக்கு எட்டாமல் இருக்கிறது.

☆ செயல்படாத அறிதுயில் நிலையில் மறைபொருளாகவே நிற்பதுதான் அறிவு.

☆ மெய்ப்பொருள் வரையிலும்கூட விரிந்து - சுருங்குகின்ற ஆற்றல் அறிவுக்கு உண்டு.

☆ வாழ்க்கையில் அறிவானது - தூலப் பொருட்களோடேயே தொடர்பு கொண்டு இருந்ததனால் - மறைபொருளாக உள்ள தெய்வ நிலையை உணரமுடியாத மயக்கத்தில் ஆழ்ந்து துன்பமுறுகிறது.

☆ ஆறாவது அறிவை உள்ளுணர்வு என்று சொல்லப்படுகிற (இன்ஸ்டியூட்டினல் அண்டர்ஸ்டாண்டிங்) என்று கொள்ளலாம்.

ஒரு பொருளிலிருந்தோ - ஒரு மனிதனிடத்திலிருந்தோ - ஒரு புத்தகத்திலிருந்தோ பெறுகின்ற விளக்கங்களைப் போதனை (டியூசன்) என்று சொல்லுகிறோம்.

☆ எல்லாத் தோற்றப் பொருட்களுக்கும் - மூலமாகவும் - முடிவாகவும்- இயக்கச்சக்தியாகவும் உள்ள அரூபமான பேராதார நிலையை அறியத்தக்க யூக உணர்வே அறிவின் ஆறாவது நிலை.

☆ மனிதனால் ஆறாவது அறிவை அறிந்து தெளிவாகப் பயன்கொள்ளும் தகுதி - திறமை இவை ஏற்படும்வரையில் மனிதனுடைய அறிவு ஒளிமங்கியதாகவே இருக்கின்றது.

☆ புலன் மயக்கத்திலிருந்து - புறப்பொருள் பற்றிலிருந்து விடுபட்டு - ஆன்மலயம் பெற்ற அறிவிலே முழுமைபெற்று - அதன் மூலம் பரம்பொருளோடு இணைய வேண்டும் என்பதுதான் ஆறாவது அறிவின் பெருநோக்கம்.

☆ அறிவை உணர்ச்சி வெல்வது இயல்பு. அறிவால் உணர்ச்சியை வெல்வது உயர்வு.

☆ மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிபொருளாக உள்ள தெய்வநிலை.

## 28. அறிவியக்கம்: உடலியக்கம்

☆ உடலியக்கம் அறிவியக்கம் இரண்டையும் பிரித்துப் பேச முடியாது. உடலியக்கம் என்பது நீண்டகாலப் பரிணாமத்தால் விந்துவின் மூலமாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் ஒன்று என அறிவோம். அதுபோன்றே அறிவியக்கம் உடலின் பரிணாம நிலைக் கேற்பத் தொடர்ந்துகொண்டே வரும் ஒரு சிறப்பியக்கமாகும்.

☆ ஒரு விதையில் மரம் எப்படி அடங்கி இருக்கின்றதோ - அதே போல் உடலியக்கத்தில் அறிவியக்கம் அடங்கி இருக்கிறது. உடல் வளர்ச்சி மற்றும் இயக்கத்திற்கு ஏற்றவாறும் அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைத் தொடர்புக்கு ஏற்றவாறும் பழக்கத்திற்கு ஏற்றவாறும் அறிவியக்கம் எழுச்சிபெற்று நடைபெறுகிறது.

## 29. அறிவாட்சித் தரம்

☆ மனிதனின் செயலாலும் மனத்தாலும் அவன் பெறும் தன்மைகள் அனைத்தும் கரு மையத்தில் சுருங்கி அவனுக்கு அறிவாட்சித்

தரமாக அமைகிறது. மேலும் கருத்தொடர் கொண்ட எண்ணி லடங்காத தலைமுறைகள்தோறும் அறிவாட்சித் தரமாக தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது.

## 30. அறுகுணம்

✧ அறிவதனைக் கருவினிலே இணைத்து தவம் ஆற்ற - ஐம்புலன்கள் அமைதி பெறும். அறுகுணமும் சீராகும்.

## 31. அளவுமுறை

❂ உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் என்ற ஐவகையும் அளவு மீறினாலும், முறை மாறினாலும், விளைவாக அந்தந்த செயல்களைச் செய்யும் உறுப்புகள் நோய்வாய்ப்படுவதை அறிந்துகொண்டாலே அனைவரும் எளிதில் செயலுக்கு விளைவு என்ற உண்மையினை உணர்ந்துகொள்ள முடியும்.

❂ நாம் வாழும்போதே வாழ்வு நலமாக - அமைதியாக - மகிழ்ச்சியாக அமைய வேண்டுமே தவிர, நாம் இறந்தபிறகு துறவானால் என்ன - எதுவானால் என்ன? அவ்வாறு வாழும்பொழுதே வாழ்வு திருப்தியாக - மேன்மையாக இருக்கவேண்டும் என்றால் ஒவ்வொரு அனுபோகத்திலேயும் எல்லை கட்டிக் கொள்ள வேண்டும்; அளவு இட்டுக் கொள்ள வேண்டும்.

## 32. அறிவுரை

✻ தவறு செய்யப்பட்ட கையோடு புத்தி சொல்லக்கூடாது. குத்திக் காட்டுவதுபோல் அறிவுரை இருக்கக்கூடாது.

## 33. அறுகுண சீரமைப்பு

❃ பேராசையை நிறைமனமாகவும் - சினத்தை சகிப்புத் தன்மை யாகவும் - கடும் பற்றினை ஈகையாகவும் - முறையற்ற பால் கவர்ச்சியை கற்புநெறியாகவும் - உயர்வுதாழ்வு மனப்பான்மையை நேர்நிறை உணர்வாகவும் - வஞ்சத்தை மன்னிப்பாகவும் மாற்றுவதே அறுகுண சீரமைப்பாகும்.

## 34. அஞ்ஞானம்

✪ கடவுள் ஒன்றே; அதற்கு எண்ணற்ற பெயர்கள் உண்டு என்பது ஞானம். ஒவ்வொரு பெயரும் ஒரு கடவுளென்பது அஞ்ஞானம்.

## 35. அவதாரம்

✰ மனிதன் என்ற தத்துவத்தை ஏதோ சாதாரணமாக எண்ணிவிட வேண்டாம். மனிதனுக்குள்ளே ஒன்றுக்குள் ஒன்றாக நான்கு தத்துவங்கள் அடங்கியுள்ளன. அந்நான்கு தத்துவங்களில் ஒன்று தெய்வமும் ஆகும். இந்த இரகசியத்தை உணர்ந்து - உணர்ந்ததன் காரணமாக அறிவிலும் செயலிலும் சிறந்து விளங்குபனே மாமனிதன் என மற்ற மனிதர்களால் போற்றப் படுகிறான். இந்த மாமனித நிலையே அவதாரம்.

## 36. அன்பு

✯ அன்பைக் கொடுத்துப் பாருங்கள். அன்புக்காக ஏங்காதீர்கள்.

✯ குடும்பத்தில் ஒருவரையொருவர் துல்லியமாகப் புரிந்து கொண்டால் எக்காரணத்தாலும் அன்புப் பிடிப்பு தளராது.

✯ இங்கே வந்து வாழ்கிறான். மனிதன் - அவனே கடவுள்தான். வாழ்பவர்களே கடவுள்தான் என்பதால், வாழும் மக்களிடத்தில் நம் எண்ணம் - சொல் - செயல் மூலம் அன்பு செலுத்துவோமே யானால் - அதுவே கடவுளுக்கு நாம் செய்யக்கூடிய தொண்டு. நம்மிடமிருந்து இதைத் தவிர கடவுள் எதையும் எதிர்பார்க்க வில்லை. கடவுளுக்கு எதுவும் தேவையில்லை.

✯ உருவநிலையில் கொண்ட தொடர்பால் உதிக்கும் இச்சையே பாசம். உளநிலையறிந்து உயர்ந்த அறிவில் உதிக்கும் ஆர்வம் அன்பு.

✯ எந்த இடத்திலும் அறிவாக இருக்கக்கூடிய இறைவனுக்கு நாம் துன்பம் ஏற்படுத்தக் கூடாது என்ற ஒரு எண்ணமும் துன்பப்படக்கூடிய சீவனுக்கு உடனே இறங்கி உதவக்கூடிய திருப்பமும் வந்தது என்றால் அதுதான் அன்பு.

✯ அறிந்தது சிவம்! மலர்ந்தது அன்பு!

- ✯ பக்தியைவிட ஞானம் பெரிது - ஞானத்தைவிட தியானம் பெரிது. தியானத்தைவிட தியாகம் பெரிது - தியாகத்தைவிட அன்பு பெரிது.
- ✯ அழகு மாறிக்கொண்டே இருக்கும். அன்பு ஊறிக்கொண்டே இருக்கும்.
- ✯ மனிதன் என்பதற்கு அடையாளம் அவனிடம் உள்ள அன்புதான்.
- ✯ அன்பும் கருணையும் மனித வாழ்வுக்கு இன்ப ஊற்றுக்கள்.
- ✯ அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாம்.
- ✯ அன்புதான் நமது வாழ்வின் ஊற்று. சிறிது வெறுப்புணர்ச்சி யானாலும் நமது உள்ளத்தை இனிமை கெடச் செய்யும்.
- ✯ அவனை மறந்தால் நான் உண்டு. அறிவு ஆறு குணங்கள் ஆகும். அவனையறிந்தால் நான் இல்லை. அறிவே அவனாய் அன்பாகும்.
- ✯ அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ - மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது.
- ✯ இறைநிலையை தெளிந்த அறிவோடு உயிர்கள்பால் கொள்ளும் நட்புணர்வே அன்பு ஆகும்.
- ✯ அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் க டமையெல்லாம் அன்பின் செயலாகும்.
- ✯ ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பும் கருணையும்தான்.

## 37. அன்புநெறி

- ✯ செல்வந்தர்கள் - விஞ்ஞானக் கல்வி பயில்வோர் - அரசியல் அதிகாரிகள் - சமுதாயநலத் தொண்டர்கள் - எழுத்தாளர்கள் - ஆசிரியர்கள் - தொழில் நிபுணர்கள் மற்றும் சிந்திக்கும் ஆற்றலுடையோர் இவர்கள் தவம் பயின்று தத்துவ விளக்கம் பெறுவார்களேயானால் படிப்படியாய் உலகம் அன்பு நெறிக்குத் திரும்பிவிடும்.

## 38. அன்பும் அருளும்

✧ தானும் தன் குடும்பமும் தன் இனமும் வாழ நினைத்தால் அன்பு. அண்டசராசரமும் வாழ நினைத்தால் அருள்.

## 39. அன்பும் கருணையும்

❂ ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பும் - கருணையும்தான்.

❂ எந்த ஒன்றையும் உடலாலோ - மனதாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டு இருப்பது அன்பு. அதற்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்துக் காப்பது கருணை. ஒரு மாமரம் ஒரு காம்பின் மூலம் தனது பிஞ்சினை விழுந்து விடாமல் பிடித்துக் கொள்கிறது - இது அன்பு. அதோடு பிஞ்சு வளரத் தேவையான ரசாயன நீரை மரம் பாய்ச்சிக்கொண்டு இருக்கிறது - இது கருணை.

❂ இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

❂ மரமானது பூ - பிஞ்சு - காய் - கனியைத் தன்னகத்தே பிடித்து வைத்திருத்தல் அன்பு ஆகும். அவைகளுக்கு வேண்டிய சத்து நீரை (வேர் மூலம் உறிஞ்சி) பரவ விடுதல் கருணையாகும்.

❂ அறுகுணச்சீரமைப்பு பெற்று அடைத்திருக்கும் அழுக்குகளை நீக்கும்போது நம்மிடம் உள்ள அன்பும் கருணையும் பீறிட்டு மேலோங்குகின்றன.

## 40. அன்பும் பாசமும்

✻ நீங்கா நிறை நிலையாக இறைவனை எல்லா இடங்களிலும் - எல்லாப் பொருட்களிடத்திலும் - எல்லா உயிர்களிடத்திலும் உணர்வதும் அதற்கேற்ற விரிந்த மனநிலையில் தொண்டாற்று வதும் அன்பு ஆகும். குறிப்பிட்ட இடத்திலோ - பொருளிலோ உயிரிலோ அதே அன்பு எல்லை கட்டிக்கொள்ளுமானால் அது பாசமாகிவிடும். தவிர்க்க முடியாமல் குறுகிய எல்லையில் தனது தொண்டினைக் கடமையுணர்வோடு கட்டுப்படுத்திக்

கொள்ளலாம். எனினும் மனமும் தொண்டும் விரிவடைய வாய்ப்புக் கிட்டும்போது - பாச நிலையோடு அன்பாகவும் விரிந்து செயலாற்ற வேண்டும்.

## 41. அணு

- ஒவ்வொரு பரமாணுவிலும் மத்தியில் வெட்டவெளி சிறிய அளவில் அமைந்திருக்கிறது.
- கொத்தியக்கத்தில் இணையும் பரமாணுக்களின் எண்ணிக்கைக் கேற்ப அணுக்களின் மூலக மதிப்பு கணிக்கப் பெறுகின்றது.
- வெளியின் எழுச்சி நிலையே ஆற்றல். பரமாணு. பரமாணுதான் உயிர். மெய் அசைந்தால் உயிர். உயிர் என்பதும் ஆற்றல் என்பதும் ஒன்றுதான்.
- அணு என்றால் நுண்ணிய இயக்கம். பரமாணு என்றால் அதை விட நுண்ணியது வேறு ஒன்றும் இல்லை என்று அந்த வார்த்தையை விளக்குகிறது.
- மெய்ப்பொருள் தனக்குள்ளாகவே அடங்கிய ஓர் ஆற்றலைப் பெற்றது. அதனால் ஒரு நுண்ணிய அளவிலே வேகத்தைப் பெற்று அது இயங்க ஆரம்பிக்கின்றபோது அதைத்தான் சக்தி என்றும் பரமாணு என்றும் கூறுகிறோம்.
- அணு முதல் அண்டங்கள் - உடல்கள் யாவும் அணுக்களின் கூட்டாக இருப்பதாலும் - அணு என்பது மெய்ப்பொருளின் அசைவு நிலையாதலாலும் நாம் காணும் தோற்றங்கள் அனைத்தும் மெய்ப்பொருளின் நிகழ்ச்சி நிலைகள் என்று தெளிவாக விளங்குகிறது.
- இரண்டு அணுக்களினுடைய வேக வித்தியாசத்தினால் ஒன்றை யொன்று சுற்றிக்கொண்டேதான் இருக்க வேண்டும். இங்கேதான் அணு உற்பத்தியாகின்றது. ஹைடிரோஜன் என்று சொல்லக்கூடிய இரண்டு பரமாணுக்கள் சேர்ந்த அணு உற்பத்தியாகிறது.
- அதாவது பரமாகிய அணு. அல்லது அணுவாக இருக்கும் பரம். அணுவும் பரமேதான்; ஆனால் இயக்கத்தில் இருக்கும் பரம் அதன் இயக்கம் நின்றுபோனால் மீண்டும் அது இயக்கமற்ற பரமாகிவிடும்.

## 42. அணு ஆயுதங்கள்

✪ அணு ஆயுதங்களைப் பெரிய வல்லரசுகளால்தான் செய்ய முடியும் என்றிருந்தது அந்தக் காலத்தில். இன்றைக்கு அப்படியில்லை. சாதாரணமாக ஒரு பள்ளிக்கூட ஆராய்ச்சியாளன்கூட செய்து விடுவான். அந்த அளவில் விஞ்ஞானம் இறங்கிப் போய்விட்டது.

## 43. அம்மாவாசை

☆ அம்மாவாசை அன்று சூரியன், சந்திரன், பூமி மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வருவதால் பூமியின் ஆகர்ஷண சக்தி, அன்று மற்ற நாட்களைவிட அதிகமாக இருக்கும். அந்த நாட்களில் விஷக்கடி நோய் உள்ளவர்களுக்கு அரிப்பு அதிகமாகும். மூளை நோய் உள்ளவர்களைக் கட்டி வைக்கவேண்டிய அளவுக்கு அதிகப்படும். மரணத்தருவாயில் உள்ளவர்களுக்கு பூமியின் ஆற்றல் காரணமாக உயிர் பிரிந்துவிடும். அந்த நாளை சிற்றின்பத்திற்கு செலவு செய்வதோ - குழந்தைப்பேறு உண்டாவதோ நன்மையாக அமையாது. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை உருவாகக்கூடும். ஏனெனில் நிலவு பூரணமாக ஒளியற்ற நாளுமாகும்.

☆ பூரண சந்திர நாளில் பூமி சூரியனுக்கும் - சந்திரனுக்கும் இடையில் வருகிறது. அந்நாள்தான் பௌர்ணமி. அந்நாளிலும் மனித உடலில் அதிகமான சக்தி வந்து - விந்துநாதத்தில் ஒரு பூரிப்பை ஏற்படுத்துகிறது. அந்நாளில் ஒரு குழந்தை உண்டானாலும் மனவளர்ச்சியில்லாத குழந்தையாக உருவாகக்கூடும். எனவே அம்மாவாசை - பௌர்ணமி போன்ற நாட்களைப் புனித நாட்களாகவும், விரத நாட்களாகவும் அனுஷ்டித்து இறைவனிடம் மனதை செலுத்தச் சொன்னார்கள்.

☆ அம்மாவாசை நாட்களில் ஏன் தர்ப்பணம் செய்ய வேண்டு மென்றால், பூமியின் ஆகர்ஷண சக்தி அந்நாட்களில் அதிகரிக்கும். நம் ஒவ்வொருவரிடத்தும் இறந்துவிட்ட பெரியவர்களின் ஆற்றல் உள்ளடங்கி இருப்பதால் அந்நாட்களில் அவர்களை நினைக்கவும் - நம் சக்தியை வீணாகச் செலவிடாது இருக்கவும் - அந்நாளை நினைவு நாளாக வைத்து பெரியவர்களுக்கு தர்ப்பணம் செய்யும் விரத நாளாகவும் வைத்தார்கள்.

## 44. அனுபவம்

- ✯ அனுபவம் என்பது நாமே நம் புலன்களைக் கொண்டும் - இன்பதுன்பங்களை அனுபவித்தும் வாழ்க்கையில் நேர்முகமாக அறியப்படும் உண்மைகளாகும்.
- ✯ அறிவே குணங்களாய் அனுபவமே ஒழுக்கமாய் மாறியது அறிவீர்.

## 45. அசேதனப் பொருள்கள்

- ✧ அசேதனப் பொருளாக உள்ள எந்தப் பொருளிலாவது அறிவு இருக்கிறதா என்ற கேள்வி எழும். அறிவு என்பது அறிந்தால் தான் அறிவு அல்ல. அறிவுக்கு முன்னதாக இருந்த நிலை என்று பார்த்தால் இயற்கைநிலை. பரமாணுகூட இத்தனை முறை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள வேண்டும். இவ்வளவுதான் அதற்குச் சுற்றளவு என்று இருக்கிறது. எல்லாப் பொருள்களிலும் அமைப்பு - துல்லியம் - இயக்க ஒழுங்கு என்பது உண்டு.
- ✧ மயில்துத்தம் பார்ப்பதற்கு செயலற்ற ஒன்றாகத் தோன்றுகிறது. சிறிதளவு எடுத்து நாக்கிலே போட்டால் முதலில் நாக்கை அரிக்க ஆரம்பிக்கும். கொஞ்சம் உள்ளே போனால் குமட்டல் வரும். பின்னர் உடலுக்கு விஷமாக மாறும். ஒன்றோடு ஒன்று சேர்ந்தால் சேர்ந்தவுடன் அங்கு இருக்கக்கூடிய அறிவு வந்து விடுகிறது. ஒன்றோடு ஒன்று சேரும்போது ஒரு விளைவைத் தருகிறது அல்லவா? அதுதான் அறிவு.

## 46. ஆகர்ஷணம்

- ❂ அணு நிலைக்குப் பின்னர் உண்டானது பிரதிகிருஷ்ணம் - அதற்கு முன்னர் இருந்ததே ஆகர்ஷணம்.

## 47. ஆக்கினைத் தவம்

- ✻ எளியமுறைக் குண்டலினி யோகத்தில் முதற்படி ஆக்கினைத் தவம். புருவ மத்தியில் உயிர் ஆற்றலை மனம் கவனிப்பதே ஆக்கினை எனப்படுகிறது. இதுவரை உயிர் மூலாதாரத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இப்போது புருவ மத்திக்கு மாற்றப் படுகிறது. இம்மாற்றமே ஆன்மீக உயர்வுக்குத் திருப்புமுனை.

* மெய்ஞ்ஞானம் என்ற அருட்கோயிலுக்குள் புகும் வாயில் ஆக்கினைச் சக்கர யோகமேயாகும். இதனால் உடல்நலம் - மனநலம் ஓங்கும். முகம் அழகு பெறும்.

* காசி - வாரணாசி. வாரன் என்றால் புருவம். நாசி என்றால் மூக்கு. இரண்டுக்கும் இடையில் உள்ளது ஆக்கினை. ஆக்கினையில் தவம் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்றார்கள்.

## 48. ஆகாசம்

✪ சுத்தவெளியின் அசைவாக உள்ளது பரமாணு: ஆகாசம்.

✪ ஆகாசம் என்ற ஒரு சக்தி பிரபஞ்சம் முழுவதிலும் நிரம்பி இருக்கின்றது. அதனுடைய கூட்டுத்தான் காற்றாக - நீராக - நிலமாக இருக்கிறது. இதைத்தான் பஞ்சபூதங்கள் என்கிறோம்.

✪ ஆகாசம்தான் உணர்ச்சி நிலை ஆக இருக்கிறது என்பதை விஞ்ஞானிகள் உணர்ந்தாக வேண்டும். இந்தக் குறைபாடுதான் மெய்ஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் உள்ள குறைபாடு.

✪ ஆகாசத்தின் செறிவு மிகுந்த நிலை காற்று - செறிவு இன்னும் மிகுந்த நிலை வெப்பம் - செறிவு மேலும் அதிகரிக்க நீராகிறது. ஆகாசத்தில் உச்சபட்சமான திரட்சி நிலையே நிலம் அல்லது மண்.

✪ காணாத மெய்ப்பொருள் நிலைக்கும் - காணும் உலகுக்கும் இடையே ஒரு முக்கியப் பொருளாக உள்ளது ‘விண்’ அல்லது ‘ஆகாசம்’.

## 49. ஆதாயம்

❀ பிறர்க்கு தீங்கு செய்யாமலும் - பிறர்க்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனம் இரண்டும் இருந்தால் உயிருக்கு அதைவிட ஆதாயம் வேறெதுவுமில்லை.

## 50. ஆச்சாரம்

☆ நம் மொழியில் ‘கலாச்சாரம்’ என்ற ஒரு வார்த்தை இருக்கிறதே - அது ‘கலை’ ‘ஆச்சாரம்’ என்ற இரண்டு சொற்கள் இணைந்து

உருவான கூட்டுச் சொல். இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அறிவின் நுட்பத்தினாலே - கைத்திறனாலேயே உருமாற்றி - அழகுபடுத்தி நாம் துய்க்கிறோம் பாருங்கள். அதுதான் கலை. மனிதனின் வாழ்வே கலைதான். இந்தக் கலையின் காரணமாக விளைவு தனக்கோ - பிறர்க்கோ - தற்காலத்திலோ - பிற்காலத் திலோ - அறிவுக்கோ - உடல் உணர்ச்சிகளுக்கோ துன்பம் எழாது விழிப்போடு இருந்துகொண்டு, அளவோடும் முறையோடும் கலையை நாம் பயன்படுத்தி வந்தோமானால் அந்த நெறியின் பெயரே 'ஆச்சாரம்'.

## 51. ஆசிரியர்

- கல்விக்கு நாயகனாய் மக்கட் பண்பைக் காத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர்.
- வாழ வழிகாட்டிப் பயிற்சியூட்டி வாழவைக்கும் சிறந்த செயல் கல்வியாகும். வாழ்வினையே கல்வி போதனைக்கே நல்கி வாழும் உயர்நிலை பெற்றோர் ஆசான் ஆவார்.
- காந்தம் மின்சாரம் ஒளி ஒலி சுவை மணம் கருத்தான அறிவோடு இன்ப துன்ப இயல்புகளைச் சாந்தமாய்ச் சிந்தித்துச் சரியாய்ப் புரிந்துகொண்டவர் ஆசிரியர்.
- உடலுக்கும் அறிவிற்கும் ஒழுக்கம் காட்டி உயர்ந்த வாழ்வின் வளத்தைக் காப்பவர் ஆசிரியர்.
- வாழ்வினையே கல்வி போதனைக்கே நல்கி வாழும் உயர்நிலை பெற்றவர் ஆசிரியர்.

## 52. ஆசை

- மண்மீது பெண் துணையால் பொன் கொண்டே வாழுகின்றோம். மாற்றுவதேன் மூவாசை? கொள்வோம் மதியுடனே பயன்.
- ஆசையை அடியோடு ஒழிப்பது என்பது இயலாத செயலாகும். அதற்குத் தேவையும் இல்லை. ஆகையால் சீரமைக்க வேண்டும்.
- ஆசை என்பது ஒரு எண்ணம். ஆசை என்ற எண்ணத்தை விருப்பம் - அவா - பற்று - இச்சை - வேட்கை - காமம் - காமியம் - வேண்டுதல் எனப் பலவாறாக அழைக்கிறார்கள்.

- மனிதன் உயிர் வாழ்வதால் பசி, தாகம், உடல் வெப்ப ஏற்றத் தாழ்வு, கழிவுப் பொருட்களின் உந்துவேகம் போன்ற இயற்கைத் துன்பங்கள் ஏற்படுகின்றன. உயிர் வாழ்தல் என்ற காரணம்தான் ஆசைக்கு மூலகாரணமாகிறது. இவற்றின் காரணமாகத் தேவையும் ஆசையும் ஏற்படுகின்றன.

- ஆசையின் மறுமலர்ச்சியே - பேராசை - சினம் - கடும் பற்று - முறையற்ற பால்கவர்ச்சி - உயர்வுதாழ்வு மனப்பான்மை - வஞ்சம் என்ற ஆறு தீயகுணங்கள்.

- ஆசை சீரமைத்தல் பயிற்சி செய்யுங்கள். உடல்நலம், மனவளம், பொருள்வளம், நற்புகழ், நிறைவு இவை பெருகும். அமைதி யுண்டாகும்.

- ஆசை பேராசையானால் கடும் பற்று ஆகிறது. அதனால் விளைவது துன்பமே.

- ஆசை எழக் காரணம், இயற்கைத் தேவைகளால் எழும் ஆசை. புலன்மயக்கத்தால் எழும் ஆசை.

- ஆசையை அடக்கினால் அது பிதுக்கிக்கொண்டு வேறுவேறு கஷ்டங்களாக உருவாகும். ஆகவே ஆசையை ஆராயுங்கள்; பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும். ஆசை நிறைமனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாக சாத்தியமாகி வாழ்வின் இலட்சியமே கைக்கு வந்த மாதிரி.

- ஆசையை சீரமையுங்கள். ஒரு ஆசை தோன்றினால் 1. தேவை தானா? 2. பூர்த்தி செய்ய வாய்ப்பு வசதி உண்டா? 3. பின்விளைவு என்ன? 4. உடல் - மன - பொருளாதார வலிமை ஏற்றதாக உள்ளனவா? 5. முடிவு என்ற கோணத்தில் ஒவ்வொரு ஆசையையும் சீரமையுங்கள்.

- ஆசை சீரமைக்கப்பட்டபின் நிறைமனமாவதால் மனம் கலகலப்பாகி - தன்னம்பிக்கை - தைரியம் - உற்சாகம் - வெற்றி கிட்டுகின்றன. மனம் விரிந்து பொறுமை - அன்பு - ஈகை போன்ற நற்குணங்கள் வெளிப்படுகின்றன.

- ஆசை முறைகெட்டுப்போனால் பேராசை. முறைப்படுத்தப் பட்ட ஆசை நிறைமனம்.

- கடல் அலையை கல்லை எறிந்து அடக்க முடியாது. ஆசையை நிறைவேற்றி மனதை அடக்க முடியாது. ஒரு ஆசையை நிறைவேற்றினால் மற்றொரு ஆசை முளைக்கும்.

- எல்லாம்வல்ல பரம்பொருள் அல்லவா நம் உள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது? அது எங்கே இருந்தாலும் விரிவடைந்து கொண்டே இருக்கின்ற தன்மையது. அப்படி விரிவடைவதைத் தடைப்படுத்தும்பொழுது உருவாவதே ஆசை.
- ஆன்மீகத் துறையினிலே முன்னேறும் அளவிற்கு அமைதியும் இன்பமும் உண்டாகும் மனிதனுக்கு.

## 53. ஆசை ஒழுங்கு

- ஆசையை ஒழிக்கச் சொன்ன பெரியவர்கள் அந்த ஆசை ஒழிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு திட்டத்தைத் தரவில்லை. நான் ஆசையை முறைப்படுத்திக் கொள்வதற்கு ஒரு நடைமுறைப் பயிற்சித் திட்டத்தைத் தருகிறேன். விருப்பமும் முயற்சியும் உடையவர்கள் நிச்சயம் வெற்றி பெறலாம். அதுதான் ஆசை ஒழுங்கு என்ற தற்சோதனைப் பயிற்சி.

## 54. ஆட்சி

- வாழத்தெரியாதோர் பெரும்பாலோர் வாழும் நாட்டில் ஆளத் தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்.
- ஞானமும் - அரசியலும் ஒன்றுபட்டால்தான் அறக்காவல் நிலையமாக ஆட்சி சிறந்தோங்கும்.
- எந்த ஆட்சியினாலும் - அதனால் பியூன் முதல் பிரசிடெண்ட் வரையில் உயிருக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளதா?
- ஆட்சி நல்ல முறையிலே அமைய வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் அறிவிலே திறம் பெற வேண்டும்.

## 55. ஆட்சித் தலைவர்கள்

- இறைநிலையை உணர்ந்து அறநெறி நின்று வாழும் அனுபவம் பெற்ற பெரியோர்கள் மதங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். மனித உடல் - இன இயக்கம் ஆகியவற்றின் நியதிகளை உணர்ந்து, மக்களிடம் அன்பும் கருணையும் உடையவர்கள் ஆட்சித் தலைவர்களாக வரவேண்டும்.

## 56. ஆதி

- அறிவே உருவமாய் ஆதியே அறிவாய் மாறியது அறிவீர்.
- உனக்குள்ளே இருக்கக்கூடிய அறிவினைத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால், அதற்கும் அப்பால் ஆதியாக இருக்கக் கூடிய ஐம்புலன்களால் உணரமுடியாத இறைவனை எப்படி அறிய முடியும்?

## 57. ஆதிநிலை

- இன்று நாம் பிரபஞ்சமாகக் காணும் பல்வேறு பொருட்கள் இயக்கங்கள் - நிகழ்ச்சிகள் என்ற அனைத்தும் பரிணாமமடையாத முன்னம் இருந்த இயற்கையின் நிலையே ஆதிநிலை என்று பேசப்படுகிறது.
- ஆதிநிலை என்பது சுத்தவெளி. அதனுடைய உள்ளாற்றலாக உள்ள தன்மைகளில் முக்கியமானவை விரைவும் - அறிவும் ஆகும்.

## 58. ஆயுள்

- நாம் ஏற்கனவே செய்ததன் விளைவாகவே இன்றைய நிலை என்கிறபொழுது இன்றுமுதல் நாம் செய்வதன் விளைவாக எதிர்காலம் அமையும். தவத்தினாலோ அல்லது நீங்கள் உணர்ந்த ஒரு சிறப்பான பயிற்சியினாலோ வேறு தன்மை யினாலோ உங்கள் ஆயுளை நீங்களே மாற்றிக் கொள்ளலாம்.

## 59. ஆலயம்

- ஆலயம் - ஆன்மா - லயம் - ஆன்மாவை லயமாக்கும் இடம் ஆலயம்.
- ஐம்புலன்களுக்கும் உணர்வு அளிக்க கண்களுக்கு வெளிச்சம் - காதுகளுக்கு மணி ஒலி - மூக்கிற்கு சாம்பிராணிப் புகை - நாவிற்கு பிரசாதம் - இவை ஆலயங்களில் அளிக்கப்பட்டது. மேலும் ஆலயங்களுக்கு வருபவர்களின் தலையில் சடாரி என்று கவசத்தை வைத்து துரியத்தை தூண்டிவிட்டார்கள்.
- சிவாலயமாக இருப்பின் விபூதி அளித்தார்கள். அக்காலத்தில் விபூதி அணிவதில் அதிக மருத்துவக்குணம் இருந்தது.

- ✧ விஷ்ணு ஆலயத்தில் செப்புப் பாத்திரத்தில் நீர் எடுத்து இரவில் துளசியைப் போட்டு ஊறவைத்து, காலையில் பக்தர் களுக்கு துளசித் தீர்த்தம் பிரசாதமாக அளிக்கப்பட்டது. செப்புப் பாத்திரம் - துளசி மருத்துவ குணம் நிறைந்ததாக அமைகிறது.
- ✧ ஹோமமம் வளர்க்கப்படும்போது புகை அந்த ஊரின் எல்லாப் பகுதிகளிலும் பரவி - நல்ல ஆற்றலை அளித்து வேண்டாத அலைகளை அழித்து விடுகிறது. காரணம் ஹோமத்தில் போடும் அரசு - நாயுருவி - பசுமாட்டு சாண வரட்டி - தர்ப்பனை - வன்னி - பசுநெய் ஆகிய குச்சிகள் எரியும்போது அதன் புகை மருத்துவ குணம் உடையதாகிறது.
- ✧ பொட்டு வைப்பதுகூட ஆக்கினையைத் தூண்டுவதற்கே. நாமம் போடுவது ஆக்கினை - துரியம் இரண்டையும் தூண்டு வதற்கே. முன்னோர்கள் பக்திமார்க்கத்தின் மூலம் ஞான மார்க்கத்தை அளித்தார்கள்.

## 60. ஆராய்ச்சி

- ✧ ஆராய்ச்சியில்லாத நம்பிக்கை, தாழ்ப்பாள் இல்லாத கதவு போல ஆகும். இலட்சியம் இல்லாத ஆராய்ச்சி கதவு இல்லாத வீடு போல ஆகும்.
- ✧ இதுவரை உலகில் படிக்காதவன் சொன்னதைத்தான் படித்தவன் ஆராய்ச்சி செய்கிறான்.
- ✧ இயற்கை இரகசியங்களை உணர ஆராய்ச்சி மேற்கொண்ட போது, எல்லா உயிரினங்களுடைய இயக்கங்களுக்கும் குணாதிச யங்களுக்கும் ஆதாரமான பேராற்றல் எது என சிந்திக்கத் தொடங்கினேன்.
- ✧ பிரபஞ்சத்தின் எல்லா இயக்கங்களுக்கிடையிலேயும், இயக்கங் களுக்கு உள்ளேயும், அவ்வியக்கங்களைச் சுற்றிலும் விளங்குகின்ற பேராற்றலே காந்தமாகும்.

## 61. ஆற்றல்

- ✿ இடம் - பொருள் - இயக்கம் மூன்றும் ஒரே ஆற்றலாகும்.
- ✿ மனித வாழ்வில் ஏற்படுகின்ற அற்புத நிகழ்ச்சிகளுக்குக் காரண மான ஆற்றல் ஒன்று இருக்கத்தானே வேண்டும்?

- மனதுக்கு உட்புறமாகச் சென்று ஆராய வேண்டும் என்ற கருத்தில்தான் இயற்கை ஆற்றலுக்குக் கடவுள் என்று மனிதன் பெயரிட்டுக் கொண்டான்.
- கடவுள் என்ற ஓர் ஆற்றலைத் தேடுவதில் அறிஞர்கள் எல்லாருடைய அறிவும் ஒரேவிதமான கூர்மையில் - தெளிவில் அமையவில்லை.
- ஒரே உண்மைப் பேராற்றலானது பல கடவுள்களாக மனிதனுடைய கருத்துக்குப் பிறந்து அமைந்துவிட்டது.

## 62. ஆறாவது அறிவு

- இதுவரையில் எல்லாவற்றையும் பார்த்து ரசித்து வாழ்ந்தவன் தனது மூலம் என்ன என்று தன்னையே திரும்பிப் பார்க்கிற நிலையே அறிவின் உயர்ந்த நிலை - அறிவையே அறிந்து கொள்ளக் கூடிய அறிவின் உயர்ந்த நிலை ஆறாவது அறிவு.
- கண்ணால் பார்ப்பதற்கு அப்பால் - எல்லாவற்றுக்கும் - மூல காரணமாக உள்ள பொருளை அனுமானமாக உணர்ந்து கொண்டு அதை ஒட்டி - எல்லாப் பொருட்களின் இயக்கத்தையும் ஆராய்ச்சி செய்து அதை நிர்ணயிக்கக்கூடிய அறிவுதான் ஆறாவது அறிவு.

## 63. ஆறு தீயகுணங்கள்

- தன்முனைப்பிலிருந்து வந்த இந்தத் ‘தான்’ ‘தனது’ என்ற இரண்டு எண்ண எழுச்சிகள் ஒரு விந்தையான தம்பதிகள். இத்தம்பதிகளுக்குப் பிறக்கின்ற அவலக் குழந்தைகள் ஆறு. அதாவது - தன்முனைப்பிலிருந்து ஆறு தீயகுணங்கள் பிறக்கின்றன. அவை: பேராசை - சினம் - கடும் பற்று - முறையற்ற பால் கவர்ச்சி - உயர்வுதாழ்வு மனப்பான்மை - வஞ்சம் என்பனவாகும்.

## 64. ஆறுமுகம்

- ஆறுமுகம் என்பது - அழுத்தம் - ஒலி - ஒளி - சுவை - மனம் - மணம் என்பதாகும்.

## 65. ஆயுதங்கள்

- அமைதி வந்துவிட்டால் - ஆயுதங்களை எல்லாம் விற்பது எப்படி?

## 66. ஆயுள்

- அதிகமான அகங்காரம் - கோபம் - சுயநலம் - தர்மம் செய்யாமல் இருப்பது - துரோகம் செய்வது போன்றவற்றை ஒதுக்கினால் மனிதனின் ஆயுளும் அதிகரிக்கும்.

## 67. ஆளுமைத்திறன்

- பல்லாயிரம் தலைமுறைகளாகத் தொடர்ந்துவரும் கருத்தொடர் மூலம் ஒவ்வொருவருடைய ஆளுமை வளம் அமைந்திருக்கிறது.
- எண்ணம் - சொல் - செயலால் எல்லோருக்கும் நன்மை தர எண்ணும்படி செய். செய்யும்படி எண்ணு.
- உங்களைப் பற்றி நீங்கள் முதலில் கண்ணியமாக நினையுங்கள்.
- ஆயிரம் விசயங்களைப் பேசுவதைவிட ஒன்றில் முழுமையாய் இரு.

## 68. ஆளுமைப்பேறு

- அவாமுதல் ஆறுகுண ஆளுமைப்பேறுடையார்கள் - சிவாவென்று பலநூறு செபித்தாலும் அருளுடையார் - அவாமுதல் ஆறுகுண ஆளுமைப் பேறடைந்தோர்கள் - சிவா என்று அக்கணமே சேர்ந்திருப்பர் தெய்வமொடு.

## 69. ஆளுமைவளம்

- பல்லாயிரம் தலைமுறைகளாகத் தொடர்ந்து வரும் கருத்தொடர் மூலம் ஒவ்வொருவருடைய ஆளுமைவளம் அமைந்திருக்கிறது.
- எண்ணம் - சொல் - செயலால் எவருக்கும் எப்பொழுதும் நன்மையே விளைவிக்க நாட்டமாயிரு.

## 70. ஆன்மா

- எப்படி அறிவு - வேகம் இரண்டையும் சுத்தவெளியிலிருந்து பிரிக்க முடியாதோ - அதேபோல் கரு மையம் - ஆன்மா இரண்டையும் பிரிக்க முடியாது.

## 71. ஆன்ம சாந்தி தவம்

❖ ஆன்ம சாந்தி தவம் செய்யும்போது - ஆக்கினையில் தவம் ஆரம்பிக்கும்போதே இந்த ஆன்மாவிற்குச் சாந்தி அளிப்பதற்காக இத்தவத் தவத்தைச் செய்யப் போகிறோம் என்று எண்ணிக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். துவாதசாங்கம் சென்றபின் - அந்த ஆன்மாவை நம்மோடு இணைத்துக் கொள்ள வேண்டும். சக்தி களத் தவம் செய்ய ஆரம்பித்தவுடன் அந்த ஆன்மாவைச் சக்திக் களத்தில் இணைத்துவிட்டுவிட வேண்டும். அதாவது - அந்த ஆன்மா சக்தி களத்திலே கலந்து - கரைந்து - அங்கேயே நிலைபெறுவதாகச் சங்கற்பங்கள் செய்ய வேண்டும்.

❖ ஆன்ம சாந்தி தவத்தை - இறந்தவர் உடலைப் புதைக்கும் முன்பாக - அந்த உடல் அருகிலேயே சிறிது தூரம் தள்ளி இருந்துகொண்டு தவம் இயற்றுவது மிகவும் சிறந்தது. அந்தச் சந்தர்ப்பம் தவறிப்போனால் - உடல் அடக்கத்திற்குப்பின் - எப்பொழுது வேண்டுமானாலும் ஆன்ம சாந்தி தவம் செய்து கொள்ளலாம்.

❖ ஆன்ம சாந்தி தவத்தை - துரியாதீதத்தில் வல்லமையும் தேர்ச்சியும் பெற்றவர்கள் நடத்தலாம். ஓர் ஆறு பேராவது சேர்ந்து தவம் செய்ய வேண்டும். இறந்தவர்களுக்குத் தொடர்புடையவர்கள் அருகில் இருப்பது நல்லது. அவர்களும் இணைந்து தவம் செய்தால் இன்னும் நல்லது.

## 72. ஆன்ம ஞானம்

❋ இயற்கை அமைப்பின் பூரண விளக்கத்தால் அறிவும் இயற்கையும் ஒன்றாகவே இருக்கின்ற உண்மையை ஒருவர் அறிந்து கொள்ளும் போது - தானே இயற்கையாக - எல்லாமாக இருப்பது அகக் காட்சியாகி விடுகின்றது. இந்த விளக்கம்தான் ஆன்மஞானம் எனப்படுகின்றது.

## 73. ஆன்ம நிலைகள்

✪ உணர்ச்சிவயப்படும் ஆன்மநிலைகளே பேராசை - சினம் - கடும் பற்று - முறையற்ற பால்கவர்ச்சி - உயர்வுதாழ்வு மனப் பான்மை - வஞ்சம் என்ற ஆறு வேண்டாக் குணங்களாகும்.

## 74. ஆன்மீகம்

- மெய்ப்பொருள் - உயிர் - வினைப்பயன் இம்மூன்று மறைபொருள் உண்மைகளையும் மக்கள் உணர்ந்தால்தான் ஆன்மீகம் தழைக்க முடியும்.
- ஆன்மீகத்துறையிலே முன்னேற்றம் உண்டாகும். அளவிற்கு அமைதியும் இன்பமும் உண்டாகும் மனிதனுக்கு.

## 75. ஆன்மீக அறிவு

- ஆன்மீக வெளிச்சம் குறைவாக இருக்கும் தனிமனிதனோ - குடும்பமோ - ஊரோ - நாடோ - சமுதாயம் முழுமையுமோவாழ்வில் வளமும் நலமும் காக்க முடியாது.
- அரசியல் தலைவர்கள் - போட்டி - பிணக்கு - போர் - அச்சம் போன்ற பலகோண துயரழுத்தங்களால் அறிவின் நிலைகுலைந்து உயர்ச்சி வேகமென்ற வெள்ளத்தில் நீந்திக் கரையேற இயலாமல் மிதந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையிலிருந்து மனித குலம் நல்லதோர் திருப்பம் பெற வேண்டுமானால் அச்சம் நீங்கி - எதிர்கால வாழ்வின் உறுதி என்ற ஒளி பெற்று அமைதி காண வேண்டுமானால் - ஆன்மீக அறிவு ஒன்றுதான் வழிகாட்டி உதவ முடியும்.

## 76. ஆன்மீக வாழ்வு

- நம்மிடத்தில் என்னென்ன களங்கங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்து - படிப்படியாக அவற்றை மாற்றி - நம்மைத் திருத்திக் கொண்டு உயர்ந்த நிலையை அடைய வேண்டும். இந்த உயர்தலும் அப்படி உணர்ந்த வழியே திரும்ப உயர்ந்து அதுவாகவே மாறு வதும் தான் சரியான ஆன்மீக வாழ்வு. இதற்கு அகத்தாய்வு அவசியம். இந்த முறையில் தானாகவே ஆன்மாவை உணரமுடியும். அதுதான் ஆன்மீக வாழ்வின் இலட்சியம்.

## 77. ஆன்மீக விழிப்புணர்ச்சி

- இக்காலத்தில் மனித வாழ்க்கை முறையைப் பற்றி நாம் உண்மை யாகச் சிந்திப்போம். பெரும் மதிப்பு வாய்ந்த ஆற்றலையும்

நேரத்தையும் வீணாக்கித் துன்பத்தையும் அழிவையும் விளை விக்கக்கூடிய பல செயல்கள் இவ்வுலகில் ஏன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றுவதற்கு இப்போது உலக விரிவான ஓர் ஆன்மீக விழிப்புணர்ச்சி உண்டாக்கப்பட வேண்டும்.

## 78. ஆன்மீக மேம்பாடு

- அறிவை (தெய்வத்தை) அறிந்து அந்தத் தெளிவிலே வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுதான் ஆன்மீகம். அதில் மேம்பாடு வந்து விட்டது என்றால் - அறிவு மேம்பாடு வந்திருக்கும். இறை இன்பத்தை அடைந்து, மனம் ஒரு பரவச நிலையிலே இருக்கும். வாழ்க்கையில் இன்பமும், மகிழ்ச்சியும் நிறைவும் அதிகரித் திருக்கும். இத்தகு மேம்பாடுகளைப் பிறரும் அறியச் செய்ய வேண்டும். அதற்குப் பாடுபட வேண்டும் என்ற துடிப்பும் - செயலார்வமும், செயல்திறமும் ஓங்கிவரும். இவைதான் ஆன்மீக மேம்பாட்டின் அடையாளங்கள்.

## 79. ஆண்கள்

- அன்பு - பரிவு பிறர்க்காகத் தன்னையே தியாகம் செய்தல் போன்ற மனம் சார்ந்த போற்றுதற்குரிய மதிப்புமிக்க பண்புகள் ஆண்களைவிட பெண்களிடமே அதிகமாக உள்ளன.
- ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மையின் பெருமையை உணர்ந்து - பெண்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பாகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.
- ஆண் - பெண் இருவர்களில் பெண்மையின் மதிப்பை உணர வேண்டிய பொறுப்பு ஆண்களுக்கே இக்காலத்தில் அதிகம். பெண்ணினத்தின் பெருமையை உணர்த்துவதற்கு சில உண்மை களையும் - இயற்கை நியதிகளையும் நன்றாக உணர வேண்டும். எச்சமுதாயமானாலும் ஆண்கள் பாதி - பெண்கள் பாதி என்று கொள்ள வேண்டும்.
- ஆண்பெண் சமம்.
- குழந்தைப்பேறுக்கு உரிய ஆண் - பெண் இருவருமே சமஉரிமை, அறிவிலே திறமை, நுட்பம் இவை நிறைந்தவர்களாகத்தான்

இருக்க வேண்டும். ஆண்களுக்கு மாத்திரம் கல்வி வசதி, செல்வ வசதி, இன்னும் அதிகார வசதி எல்லாமே வைத்துக்கொண்டு அவை மறுக்கப்பட்டால் என்ன ஆகும்?

## 80. ஆண் பெண்

* ஆண் - பெண் என்பது அணுவிலும் இல்லை - ஓரறிவு உயிரிடத்தும் இல்லை. ஈரறிவு பெற்ற புழுவிலும் ஆண் - பெண் என்பது இல்லை. மூன்றாவது அறிவுள்ள உயிர்களில்தான் ஆண் - பெண் என்ற வேறுபாடு உருவாகிறது.
* ஆண் - பெண் என்பது பிறவிக்காக வேண்டித்தான் கருப்பை - பால் உறுப்புகள் முதலியன வந்துள்ளனவே தவிர வேறில்லை.
* ஆண் - பெண் என்ற வேறுபாடு அணுவுக்கு இல்லை. இயற்கையில் ஜீவகாந்த ஈர்ப்பின் காரணமாக உடல்கள் இரண்டு இணைந்து நின்றபோது அழுத்தம் அதிகம் பெற்ற உடலுக்கு ஆண் உறுப்பும் - அழுத்தம் குறைந்த உடலில் பெண் உறுப்பும் - தோன்றி பரிணாமத்தில் வந்துள்ளன. இதுவே தொடர்நிகழ்ச்சியாக ஆண் - பெண் என இரண்டு உருவ அமைப்புகளாக வந்து கொண்டிருக்கிறது.

## 81. ஆஸ்திகமும் நாஸ்திகமும்

* பூரண விளக்கம் பெற்றவனே நாஸ்திகன். அவன் பரப்புவதே ஆஸ்திகம் ஆகும். நாஸ்திகம் என்பது உண்மையை உணர்ந்த நிலை. ஆஸ்திகம் என்பது உண்மையை உணர மனிதனை நம்பிக்கை மூலம் பக்குவப்படுத்தும் வழி. நாஸ்திகம் பரப்பக் கூடியது அல்ல. உணரக்கூடியது. ஆஸ்திகமே பரப்பக் கூடியது. அதன் முடிவில் காயே பழமாவதுபோல அதுவே நாஸ்திகமாக மாறிவிடும்.

## 82. இச்சை

* இச்சை எழும்போதே காரணம் கண்டிடு - இச்சை முடிந்திடச் சூழ்நிலை பார்த்திடு.
* இச்சை முடிந்தால் எழும் விளைவை யூகி - இச்சை முறையாய் இயங்கும் அமைதியில் பிறந்ததுபோல இறந்திடும் இச்சை.

## 83. இசை

✰ நல்ல இசை உடலுக்கு நலம் பயக்கும். நோய்கள் கெடும். நாடி நரம்புகளின் நலிபோக்கி முறுக்கேற்றும். சொல்ல உயர்கருத்தும் சொற்றொடரும் கொண்ட இசை; சூட்சுமம் உயிருக்குச் சமம். அறிவுக்கும் இன்பம்.

## 84. இறவாமை

✧ தனக்குத் தெரியாமல் இந்த உடலைவிட்டு உயிர் போச்சு என்று இல்லாமல் உயிரை அறிந்து - உயிரை நிலைக்க வைத்து - வேண்டியபேர் வேண்டியவாறு இந்த உடலை முடித்துக் கொள்ளும் அளவுக்கு இருப்பது.

## 85. இறைநிலை

- இறைநிலை என்பது சுத்தவெளி. அது கும்மிருட்டு. எல்லை யற்றது. எங்கும் நிரம்பியுள்ளது. பேராற்றல் உடையது. பேரறிவு உடையது. நுண்ணதிர்வு உடையது. அதன் பேராற்றல் என்பது தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல்.
- இறைநிலை கனிமங்களில் உறங்குகிறது. தாவரங்களில் விழித் தெழுகிறது.
- இறைநிலை விலங்குகளில் நடக்கிறது. மனிதர்களில் சிந்திக்கிறது.
- காட்டான் - தான் யார் என்பதை காட்ட மாட்டான். மறை பொருள் இறைநிலை.
- இறை என்பது வார்த்தை அல்ல அது உயர்வு.
- தூய வெளி - சுத்த வெளி - வெட்ட வெளி எல்லாமே ஒன்று; இறைநிலை.
- செயல்புரிபவன் மனிதன் - செயல்களின் விளைவாக வெளிப் படுவது இறைநிலை ஆகும்.
- இறைநிலையானது எல்லாப் பொருளிலும் ஊடுருவி இயங்க வல்லது. தனக்குள்ளாக எப்பொருளும் ஊடுருவிப் போகவிடக் கூடியது அது.

- எங்கும் நிறைந்த இறைநிலையின் தன்னிறுக்க ஆற்றலால் - சூழ்ந்தழுத்தும் பேராற்றலால் இறைத்துகள்கள் கூட்டம் கூட்டமாக இணையும்படியாக நேரிடுகிறது.
- பேரியக்க மண்டலமானது இறைநிலை எடுத்துக்கொண்ட தோற்றமே என்று விளங்கிக் கொள்ள வேண்டும்.
- இறைநிலையை விஞ்ஞான அறிவின் மூலம் மக்கள் விளங்கிக் கொள்ளுகின்ற காலம் வந்துவிட்டது. இல்லையானால் தெய்வம் - உயிர் - அறிவு - சீவகாந்தம் இவற்றை மக்கள் அறிய வழியே இல்லை.
- எல்லையற்றதாக எங்கும் விரிந்து நிரம்பிய ஒரு தத்துவமான சுத்தவெளியே இறைநிலையாகும். இதனைத்தான் விஞ்ஞானிகள் கிராவிட்டி என்று வார்த்தை மூலமாக விளக்குகிறார்கள்.
- இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் - எல்லாப் பொருள்களிலும் இருக்கிறான் என்றபோது - அவனுக்குத் துன்பமில்லாது எப்படி நான் வாழவேண்டும் என்று தெரிந்துகொள்வதற்கு இறைநிலை உணர்வு வேண்டும்.
- இறைநிலையைத் தெரிந்துகொள்வது ஒன்றும் சிரமமில்லை. நமது மனத்தடியிலேயே நமக்குள்ளாக இருந்துகொண்டு - எல்லா இயக்கங்களையும் நடத்திக்கொண்டு வருவது இறைவன்தானே?
- இறைநிலையை உணர்ந்துகொண்டதால் நாம் ஒருவரையும் துன்பப்படுத்தி வாழமாட்டோம். கூடுமான வரையில் துன்பமே அளிக்காமல் நாம் ஒத்தும் உதவியும் வாழலாம். இந்த மனநிலைக்கு இறைநிலை உணர்வு வேண்டும். அறநெறி தானாகவே கிட்டும்.
- எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது அறிவு என்ற இறை நிலைதான். இந்த உடலில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய விண் இருக்கிறதே அந்த விண்ணிற்கு மையத்தில் இறைநிலை இருக்கிறது என்பதை தெரிந்துகொண்டோம் அல்லவா? அதுதான் இறைநிலை.
- இறைநிலையிலிருந்து அதன் தன்மைகளான வற்றாயிருப்பு - பேராற்றல் - பேரறிவு - காலம் எனும் நான்கும் தொடர்ந்தே வந்து கொண்டிருக்கின்றன.
- எந்தப் பொருள் எந்த அளவினதான வளர்ச்சியிலிருந்தாலும் - அதற்கேற்றவாறு இயக்கச் சிறப்பை அளித்துக் கொண்டிருப்பது இறைநிலைதானே?

- அணுக்கள் கூடி எல்லாமாக இருக்கிறது என்பதால் - நாம் பார்க்கிற பொருட்களெல்லாம் இறைநிலையைத் தவிர வேறென்ன? உருவத்தால், செயலால் பெயர் கொடுத்திருக்கிறோம். அவ்வளவுதான்.
- ஒரு பிறவிக்கும் மறுபிறவிக்கும் இடையே உள்ள காலமானது இறைநிலையால் மறைபொருளாக்கப்பட்டிருக்கிறது.
- புரம் என்றால் மெய்ப்பொருள் என்றும் பொருள்படும். ஆகவே இறைநிலையே பரமாணுவாக இருக்கிறது என்றும் கொள்ளலாம்.
- இறைநிலையே அறிவாக இருக்கிறது. அவ்விறை நிலையின் நுண்பகுதியின் சுழலியக்கமே விண் எனும் உயிர்த்துகளாக விளங்குகிறது. உயிர்த்துகளின் சுழலிலிருந்து எழும் விரிவலையே இருப்பு நிலையோடு இணைந்து காந்தமென்னும் பேராற்றலுள்ள தெய்வீகப் பொருளாக இருக்கின்றது.
- எல்லா தோற்றங்களுக்கும் ‘பிறப்பு நிலை’ ஒன்றேதான். அதுதான் இறைநிலையாகும்.
- இறைநிலையின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் அடர்த்தி மிகும்போது - சிறு அளவில் தேக்கமுற்று - பிறகு தொடர்கையில் - விட்டுவிட்டு ஏற்படும் அழுத்தம் அதிர்வாக மாறுகிறது.
- இறைநிலையிலிருந்து நேராக விண்துகள் உற்பத்தியாகி விட வில்லை - பரமாணு என்ற துகள்களிலிருந்து - அவற்றின் கூட்டாக அணு (விண்துகள்) வந்தது.
- இறைநிலையானது அறிவாக இருக்கிறது. அதனுடைய அலை தான் மனமாகவும் இருக்கிறது.
- இறைநிலையானது அப்படியே - அது இருக்கின்ற முறையிலேயே - காந்தமாக இயங்குவதில்லை.
- இறைநிலையின் சூழ்ந்தழுத்தும் ஆற்றலுடைய துகள்களும் - அதை எதிர்த்துப் போராடுகின்ற துகள்களும் - அணுவில் இருந்து காந்த ஆற்றல் பெற்ற துகள்களும் ஒன்றுகூடி காந்தமாக பரிணாமம் அடைந்துள்ளன.
- இறைநிலைக்கு - சுத்தவெளியே அதனுடைய உடல் என்று நீங்கள் கொண்டால் - அந்தச் சுத்தவெளியின் அதிர்வுதான் உயிர்.
- மனதுக்கு உட்பொருளாக இருப்பது இறைநிலைதான். மன அலை அசைந்து கொண்டிருக்கும்வரை - இறைநிலையைத் தெரிந்து கொள்ள முடியாது. அதனால் அந்த மன அலையை நிறுத்த வேண்டும்.

- இறைநிலையானது - 'இப்போது இன்னது எண்ணலாம்' என்று ஓர் உள்ளுணர்வைக் கொடுக்கிறது. ஆகவே இறையாற்றலினால் கூட ஓர் எண்ணம் வரலாம்.
- இறைநிலையிலிருந்து விண் விண்டுபோனதால், அதாவது, பிரிந்து போனதால் - பிரிந்ததை - விண்டதை விண் என்று சொல்கிறோம்.
- இறைநிலை இல்லாத பொருளோ, அது இல்லாத இடமோ பிரபஞ்சத்தில் உண்டா? இல்லை.

## 86. இறைநிலையறிவு

- இறைநிலையறிவு ஒரு மாபெரும் மறைபொருள் விளக்கம். அகத்தவத்தின் மூலம் மன அலைச்சுழல் விரைவாக குறைந்து இறையுணர்வு பெற வேண்டும்.

## 87. இறைநிலை உணர்ந்தவர்கள்

- ஒரு தாய் குழந்தையை ஏனையில் (தொட்டிலில்) போட்டு விட்டு கடைக்குப் போனாள். நடந்து போகும்போதும் சரி - கடைக்குப் போய் பொருட்களைப் பேசி வியாபாரம் வாங்கின போதும் சரி; அந்தக் குழந்தையை மறக்காமலேயே எல்லா வேலைகளையும் செய்துகொண்டு இருக்கிறாள். அதுபோல இறைநிலையை உணர்ந்தவர்களுடைய மனமானது இறை நிலையை ஒட்டித்தான் இருக்கும். மோனமாக இருப்பதுதான் அது.

## 88. இறையாற்றல்

- இறையாற்றல் என்பது சாதாரணமானது இல்லை. அது எல்லாத் துறையிலும் வற்றா இருப்பாக இருக்கிறது. பேராற்றலாக - பேரறிவாக இருக்கிறது. பேராற்றல் என்றால் - அது இந்தப் பிரபஞ்சத்தையே தாங்கிக் கொண்டிருக்கிறது.
- ஒரு வினாடி பூமி நின்றால் என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். தண்ணீரெல்லாம் தரைமேல் வந்துவிடும். அப்படி ஆகாமல் பார்த்துக் கொள்வது சூழ்ந்தழுத்தும் பேராற்றலாக உள்ள இறையாற்றல்தான்.

* கண்மூலமாகப் பார்த்த எந்தப் பதிவும் மூளை மூலமாக ஜீவ காந்தத்துக்குப் போக - கருமையம் அதனை அங்கு இருந்து ஈர்த்துச் சுருக்கி - அழுத்தி வைத்து விடுகிறது. அதுதான் இறையாற்றல்.

* இறையாற்றலே எல்லாமாகி இருப்பதனால் - மனிதனிடம் உயர்ந்திருக்கக்கூடிய ஆறாவது அறிவானது 'தன்னை அறிய வேண்டும்' என்று எழுகிறது.

* உடல் மாத்திரம் வைத்துக்கொண்டு நான்தான் செய்தேன் என்று நினைக்கும்போது, தன்முனைப்பு. அதுதான் மாயை. எல்லா வற்றையுமே நடத்துவது இறையாற்றல்தான்.

* எல்லா இடங்களிலும், பொருட்களிலும், உலகங்களிலும், உயிரினங்களிலும் இறையாற்றல் நீக்கமற நிறைந்திருக்கிறது.

## 89. இறையுணர்வு

✪ செயலின் விளைவாகச் சிவனைக் காணும் வழியே சிறந்த இறையுணர்வு ஆகும்.

✪ இறையுணர்வு என்பதைச் சரியாகப் பெற்றுவிட்டோமானால் - நமது வாழ்க்கையே அறநெறியாக அமையும்.

✪ ஆணவம் - கன்மம் - மாயை என்னும் மூன்று களங்கங்கள்தான் பிறவித் தொடர் நீண்டுகொண்டே போவதற்குக் காரணம் என்பது தத்துவ உலகில் கூறப்படும் விளக்கமாகும். இதில் ஆணவம் என்பதைத் தன்முனைப்பு என்று தமிழ்ப்படுத்தலாம். அத்தகைய தன்முனைப்பானது ஆறாவது அறிவைப் பெற்ற மனிதனிடம் இருக்கலாமா? தன்முனைப்பும் ஆறாவது அறிவும் ஒன்றுக் கொன்று எதிரானவையன்றோ! இறையுணர்வு ஒன்றால்தான் தன்முனைப்பை நீக்க முடியும்.

✪ இறையுணர்வு அறிவினால் தன்முனைப்பும் தொடர்ந்து வரும் தீயவினைப் பதிவுகளும் நீங்கிப் பிறவிப் பயனான பேரின்பம் கிட்டும்.

✪ இயற்கையை உணர்ந்து கொள்கின்ற பேற்றினை இறையுணர்வு என்று கூறுகிறோம்.

## 90. இறைநீதி

- காந்த ஆற்றலே இயக்க ஒழுங்காகச் செயல் புரிகிறது. இருப்பாக இருக்கி சுருக்கி அலையாக்குவதும் ஏற்ற காலம் வரும்போது விரித்துக் காட்டுவதும்தான் இறைநீதி.
- யார் ஒருவர் இறையாற்றலை அலட்சியம் செய்து, அதன் இயக்க நியதிகளுக்கு எதிர்ப்பாகச் செயலாற்றினாலும், அந்த அளவு அவருக்கு வீழ்ச்சியும், துன்பமும், சிக்கலும் ஏற்படும். அவர் செயல்பதிவுகளுக்குத் தக்கவாறு சமுதாயத்தில் பொருத்தமான இடத்தில் அருகிலோ, தொலைவிலோ, மேலாகவோ, கீழாகவோ, தக்கபடி நிறுத்திவைக்கும். எனவே அவரவர் செய்யும் செயல்களின் விளைவுகளே - அவரைத் தக்க இடத்தில் வைக்கின்றதே தவிர - பிறர் ஏதேனும் செய்து ஒருவரை உயர்த்துவதோ - தாழ்த்துவதோ இல்லை. இந்த இறைநீதியை உணர்ந்து ஒழுகி வாழும் மனிதன் தனது வாழ்வில் - அறிவில் - சமுதாய மதிப்பில் என்றும் உயர்ந்து கொண்டே இருப்பான். ஒருங்கிணைந்த வான்மண்டல இயக்கப் பேராற்றலை ஆராய்ந்தறியும்போது - மனித மனதுக்கு எவ்வளவோ உண்மை இரகசியங்கள் கிடைக்கும்.
- இருப்புநிலை எழுச்சி பெற்று எல்லாத் தோற்றங்களாகவும் மாற்றங்களாகவும் உள்ள பேராற்றல் - பேரறிவு கூடிய இயக்க நியதி (சூழ்நிலைக்கேற்ற மாற்றம், தேவைக்கேற்ற மலர்ச்சி) இதுவே இறைநீதி.)
- எந்த இடத்தில் இறைநீதிக்கு மனிதனுடைய செயல் முரண்படு கிறதோ, அந்த இடத்தில் தோன்றுவதுதான் சிக்கல் - துன்பம்.
- சிறிதளவும் தவறாமலும் - பிழையில்லாமலும் - அன்பும் கருணையுமே இயல்பாக அமைந்துள்ள இறைநிலையானது சீவன்களிலிருந்து எழும் செயல்களுக்குத் தக்கபடி அளிக்கின்ற விளைவுதான் கூர்தலறம் என்று மொழிவழியே தமிழில் கூறப்படுகின்றது. இதுவேதான் இறைநீதியாகும்.

## 91. இறைவெளி

- ☆ இயக்கமே - வேகமே - இல்லாத இடம் இறைவெளிதான். விண்ணில் நடுவில் இருக்கும் இறைவெளிக்கும் விண்ணின் எல்லாப் பக்கமும் இருக்கும் இறைவெளிக்கும் தொடர்பு இருக்கிறது.

☆ இறைவெளி எல்லாம்வல்ல பூரணப் பொருள். பேராற்றலானது. பேரறிவானது. காலமாகவும் அது உள்ளது.

☆ வற்றாயிருப்பு - பேராற்றல் - பேரறிவு - காலம் எனும் நான்கு வளங்களையும் கொண்டதுதான் இறைவெளி. இதுவே தெய்வம்.

☆ பேராற்றல் - பேரறிவு - காலம் என்ற நான்கும் இறைவெளியின் தன்மைகளாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததாக அமைந்துள்ளன.

☆ இறைவெளியே தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றல். இதுவே பேரியக்க மண்டல உற்பத்திக்கு மூலப்பொருள். இதனையே - வற்றாயிருப்பு பேராற்றலுடன் பேரறிவு வளம் மூன்றும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம் என மதித்துப் போற்றுகிறோம்.

## 92. இறைத்துகள்

✧ சுத்தவெளி தன்னிறுக்கத்தாலும் - நுண்ணதிர்வாலும் நொறுங்கி இறைத்துகள்கள் ஆயிற்று. இறைத்துகள்கள் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதையே காந்தம் என்று அழைக் கிறோம். இறைத்துகள் இறைநிலையின் நுண்பகுதி.

✧ சுத்தவெளி தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலாலும் - நுண்ண திர்வாலும் நொறுங்கி அதுவே தூசாகத் தன்மாற்றம் அடைந்தது. அந்தத் தூசுதான் இறைத்துகள்கள். அத்துகள்களை இறைநிலையே சூழ்ந்தழுத்துவதால் அவை ஒவ்வொன்றும் சுழல்கின்றன. அவை தற்சுழற்சியால் அலை நிலையாக விளங்குகிறது. பாய்மப் பொருளாக இயங்குகிறது. தற்சுழற்சியே காந்த நிலையாகும். இறைத்துகள் என்பது இறைவெளியின் நுண்பகுதி.

✧ மன அலைச் சுழல் விரைவைக் குறைத்து நுண்மையான அலைக்கு மனதைக் கொண்டுவருகின்ற உளப்பயிற்சி முறையால் இறைத்து களைவிட நுணுகி நின்று அந்த நிலையிலிருந்தே இறைத்துகளை உணர்ந்து கொள்ளலாம்.

✧ பல்லாயிரம் இறைத்துகள் இணைந்த ஒரு கூட்டு இயக்கமே விண்துகள். அது எல்லாத் தோற்றங்களுக்கும் நுண்ணலகு.

## 93. இறைநிலைத் தவம்

- இறைநிலைத் தவத்தில் மனத்தை விரித்து எல்லையற்ற பரவெளியோடு - இறைநிலையோடு இணைத்துக் கொண்டு தவம் செய்கிறோம். இப்பரவெளியோடு மனம் விரிந்து அடிக்கடி பழக - மனம் தன் மூலமான இறைநிலையோடு ஒன்றி இருக்க முடிகின்றது. இறைநிலையிலிருந்து இறைத்துகள் - விண் - பஞ்சபூதங்கள் - உயிரினங்கள் - கடைசியாக மனிதனாக இறைநிலையே வந்த தன்மாற்றத்தை - வரலாற்றை உணர்வாகப் பெறுவதுதான் இறைநிலைத் தவம்.
- இறைநிலைத் தவம் செய்வதால் மனம் ஒன்றி இணைந்து விடுகிறது. முழுமைப்பேறு அடைகிறது. பிற உயிரின்மீது அன்பும் கருணையும் உண்டாகிறது.

## 94. இறைவழிபாடு

- அன்பையும் கருணையையும் மனிதனானவன் உணர்ந்து தன் வாழ்விலும் செயலிலும் பின்பற்றி வாழ்வதே இறைவழி பாடாகும்.
- இறையாற்றலுக்கு முரண்படாது வாழணும் என்ற அளவிலே நம் வாழ்க்கையிலே அளவு முறை வைத்துக் கொண்டோமென்றால் அதுதான் இறைவழி வாழ்வு. அதன் வழியே வாழ்வது என்று பொருள். வேறு வழியில் பிறழ்ந்து போகாமல் இறைவழி வாழ்வதுதான் இறைவழிபாடு என்பது!
- இறை வழிபாடு என்றால் இறையாற்றலைத் தெரிந்து கொண்டு - அதன் இயக்கம் - கருணை - செயல் இவற்றிற்கு முரண்படாமல் செயலாற்றி வாழ்வது. அதாவது - இறைவன் வழியே என்னுடைய செயல் நடைபெற வேண்டும் என்பதுதான் இறைவழிபாடு.
- மனிதகுல வாழ்விற்கு இறைவழிபாடு எனும் பேரொழுக்கம் இன்றியமையாத ஒன்று. இறைவழிபாடானது மனிதனுடைய அறிவாட்சித்தர மேம்பாட்டின் எடுத்துக்காட்டாகும்.

## 95. இறையருள்

- மனிதர் உளத்தில் கருத்தாகி கவிகளாகி நீரோடைபோல ஓடி அன்பர்கள் உள்ளத்தை நிரப்புவது இறையருள்.

❖ ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் இறையருள் வீற்றிருக்கிறது. ஆகவே யாருக்குமே நாம் துன்பம் அளிக்கக்கூடாது.

## 96. இருப்பும் இறைநிலையும்

✻ இரும்பே கரண்டியாயிருக்கிறது. இரும்பு என்றாலும் - கரண்டி என்றாலும் ஒரே பொருளையே குறிக்கும். அதுபோல் - தெய்வமே எல்லாமுமாக இருக்கிறது. மனித வடிவாக இருப்பதும் அதுவே. மனிதன் என்றாலும் - தெய்வம் என்றாலும் ஒன்றே. கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடும். கரண்டி என்ற பெயரும் மறைந்துவிடும். இதுபோல்தான் எல்லா உயிர்களுக்குள்ளும் இறைநிலை என்ற பிரம்மம்தான் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

## 97. இயக்க விளைவு

✪ பேரியக்க மண்டலத்தில் நடைபெறுகின்ற எந்த இயக்கமும், செயல்களும் ஒவ்வொரு ஜடப்பொருளையும், உயிர்பொருளான ஜீவன்களையும் ஊடுருவி நின்று, அவ்வப்போது இயக்க விளைவுகளாக ஏற்படும்.

## 98. இயற்கை

❁ இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

❁ மனிதனுக்கு பிறப்பு வளர்ச்சி முதிர்வு என்பது இயற்கை நியதி. இயற்கை விதியறிந்து ஏற்றி மதித்து ஆற்றும் முயற்சிக்கு வெற்றி பெற முழு அமைதி என்றும் இன்பம்.

❁ **இயற்கை என்ற போராட்டக்காரனுக்கு என்றும் எல்லாச் சீவன்களுமே கூத்தாடும் காய்கள். பெயர்த்து இடம் மாற்றி வைப்பான், பிய்த்தெறிவான், அருள்வான், பிழையென்று தீர்ப்பளிக்கப் பிறந்தோர் யார் பேருலகில்?**

❁ இயற்கை என்று சொல்லுகின்ற இறுக்க சக்தி தத்துவத்தை - இதுவரையில் அறிந்தோர்கள் இப்புவியில் எத்தனைபேர்? சிந்தனையால் இறுக்க சக்தி சிறப்பு விளக்கம் பெற்றால் - சந்திரலோகத்தில் வாழ் சபலபுத்தி மாறிவிடும்.

- விளைவு இலா வினை இல்லை வினையினூடே விளைவு பல தொக்கி நிற்கும் இயற்கை நீதி.

- இயற்கை வீதியறிந்து ஏற்றி மதித்து ஆற்றும் முயற்சிக்கு வெற்றி பெற - முழு அமைதி என்றும் இன்பம்.

- இயற்கையில் எல்லா வளங்களும் நிறைவாக அமைந்திருக்கின்றன. ஆனால் தகுதியான முறையிலே மனிதன் சிந்தித்து அவற்றை வாழ்வின் வளங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அறிவுதான் குறைவாக உள்ளது.

- இயற்கையை இருப்பு நிலையென்றும் - இயக்க நிலையென்றும் - சிறப்பு நிலையென்றும் மூன்றாகப் பிரித்துக் கொள்வோம்.

- மண்ணே பானையாய் இருப்பதுபோலவே எண்ணமாய் இருப்பது இயற்கையே ஆகும்.

- இயற்கை என்பது ஒரு தெய்வீகப் பெருநிதி. உயிரினங்கள் தோன்றவும் வளரவும் மகிழ்ச்சியோடு வாழவும் தேவையான அனைத்தும் இயற்கையில் அமைந்திருக்கின்றன.

- ஆறாவது அறிவு பெற்ற மனித இனம் அறிவிலும் செயலிலும் சிறந்து புலனின்பமும் - பேரின்பமும் துய்த்து வாழ்வில் நிறைவும் அமைதியும் பெற எல்லா வளங்களும் நிறைந்த கருவூலம் இயற்கை.

- இயற்கையில் எல்லாம் சரியாகவே அமைந்து - அனைத்துமே முறையாக நடந்து வருகின்றன.

- யாரொருவர் இயற்கை ஒழுங்கமைப்பை மீறியும், அதற்கு மாறாகவும், அதை அலட்சியப்படுத்தியும் வாழ முனைகிறார்களோ - அவர்கள் துன்பங்களுக்கும் - தொல்லைகட்கும், பிரச்சனைகளுக்கும் உள்ளாகிறார்கள்.

- இயற்கையென்ற ஒன்றே - மூலத்தில் பிரம்மமாகவும், பின்னர் அடைந்த பரிணாமச் சிறப்புகள், அனைத்தும் இணைந்து முடிவாக அறிவு என்ற ஆற்றலாகவும் இருக்கிறது.

- **ஒருவர் இன்னொருவருக்குத் தீமை செய்கிறார் – அல்லது துன்பம் அளிக்கின்றார் என்றால் – இயற்கை ஒருவர் வினைப்பதிவை வெளிக்கொணர இன்னொருவரைக் கருவியாக உபயோகிக்கின்றது என்றுதான் பொருள்.**

## 99. இயற்கை விதி

☆ ***தப்புக் கணக்கிட்டுத்தான் ஒன்றை எதிர்பார்த்தால் ஒப்புமோ இயற்கை விதி.***

## 100. இயற்கை நியதி

✧ *விந்துவின் மூலம்தான் பிறவி உண்டாகின்றது. பெற்றோர்கள் வினைத்தொடரே பிள்ளைகள். அந்த வினைகள் கழிந்தபின் கரு மையத்தில் தங்கி உடலிலே நோயாக வருகிறது. குழந்தை களுடைய துன்பம் குழந்தைகளுடைய காமத்தால் விளைவது அல்ல. ஆனாலும் குழந்தைகள் இதிலிருந்து தப்பிக்கவோ - தனித்தியங்கவோ இயலாது. இதுதான் உண்மையான இயற்கை நியதி ஆகும்.*

✧ *வாலிபப் பருவத்தினர்தான் உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும். அதைக் குழந்தைகளும் முதியோர்களும்கூடித் துய்த்துக் குறையின்றி வாழ வேண்டும். இது இயற்கை நியதி. இந்த நியதியே குடும்பத்தை உருவாக்குகிறது. அவ்வாறு உருவாகிய குடும்பம் சிறக்க இயற்கை நியதிகளை அனுசரிக்க வேண்டும்.*

✧ *மனிதனுக்குப் பிறப்பு - வளர்ச்சி - முதிர்வு என்பது இயற்கை நியதி.*

✧ *எந்தச் செயலானாலும் இடம் - காலம் - தொடர்பு கொள்ளும் பொருள் - நோக்கம் - திறமை இவற்றுக்கேற்ப விளைவு உண்டு. இதுதான் இயற்கை நீதி.*

✧ *என்றோ ஒரு காரியம் தவறாகச் செய்தாலும் அந்தத் தவறைப் பாவப் பதிவாகப் பதிந்து - காலத்தால் அதற்குரிய துன்பத்தை ஒவ்வொருவரும் அடையத்தான் வேண்டும். இது இயற்கை நியதி.*

✧ *ஒவ்வொருவரிடத்தும் வினைப்பயன் பதிவுகள் உள்ளன. அப்பதிவுகளை வெளியாக்கித் தூய்மைப்படுத்த வேண்டியது இயற்கையின் நியதி.*

## 101. இயல்பூக்கம்

✿ *இருப்புநிலை எழுச்சி பெற்ற எல்லாத் தோற்றங்களாகவும் மாற்றங்களாகவும் உள்ள பேராற்றல் பேரறிவுகூடிய இயக்க நியதி.*

- எப்பொருளை எச்செயலை எக்குணத்தை எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைத்ததால் அப்பொருளின் தன்மையாய் நினைப் போர் ஆற்றல் அறிவினிலும் உடலினும் மாற்றங்காணும் இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்.

## 102. இரத்த அழுத்தம்

- இரத்த அழுத்தம் மிக அதிகமாக இருப்பவர்கள் - உடல் தளர்த்தல் பயிற்சியைத் தவிர மற்ற எல்லாப் பயிற்சிகளையும் நிறுத்தி விட வேண்டும். வேறுமுறை ஒன்றும் இல்லை.
- குடும்பம் மற்றும் வெளியிடங்களில் அதிகமாக உணர்ச்சி வயப்பட்டும் - சினம் அடைந்தும் நரம்புகளெல்லாம் கெட்டுப் போயிருக்கும். அதனால் இரத்த அழுத்தம் அதிகமாகும். இதனைத் தவிர்க்க - நாம் பிறரிடம் கோபப்படாமலும் அதிகம் உணர்ச்சி வயப்படாமலும் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

## 103. இரண்டொழுக்கப் பண்பாடு

- நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் - மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்.
- துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

## 104. இராணுவம்

- இராணுவச் செலவைப் பெரும் அளவில் குறைத்துவிட வேண்டும். இதனால் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் பெரும் அளவில் குறைந்துவிடும்.

## 105. இல்லறம்

- பொருளீட்டிக் காக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு இடம் வேண்டும். திருமணம் செய்துகொண்டு இருவரும் வாழ்ந்தால் தான் இல்லறம் என்பார்கள். அது தவறான கருத்து. பொருளீட்டிக் காத்து அளவுமுறையோடு துய்த்தது அறம் செய்தல் இல்லறமாகும்.

- ✪ மெய்யுணர்வு பெற்று மேலாம் பதமடைந்து - ஐயுணர்வைச் சீரமைத்து அறம் கண்ட அருட்செல்வா! - செய்யுள் கடமை என்ன சிறப்பாய் இல்லறம் ஆற்று - உய்ய நினைப்போரெல்லாம் உன் வழியைப் பின்பற்ற.
- ✪ இல்லம் கொண்டு பொருள்கள் ஈட்டிக் காத்துத் துணையாம் நல்லாளோடு இன்புற்று நாட்டுக் கீகை புரிந்து பல்லுயிரும் இன்புற அமையும் பரந்ததோர் நினைவில் வாழும் நல்வாழ்வு இல்லறமாய் நாநிலமும் ஏற்கும் நெறி.
- ✪ இல்லறம் என்பது ஏதோ சம்சாரம் என்பது மட்டுமல்ல. இல்லம் கொண்டு பொருள் ஈட்டிக் காத்துத் தானும் உண்டு, பிறர்க்கும் அளித்துத் தொண்டாற்றுவதுதான் இல்லறம்.
- ✪ நம் தேவையை நிறைவு செய்ய, அனுபவிக்க கொடுத்துக் கொண்டே உள்ளது. அதற்கு ஈடாகத் திருப்பி நமது தொண்டினை, கடமையைச் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து செயலாற்ற இல்லறம் என்பது அவசியமாகிறது.
- ✪ இனிமை என்பதே இல்லறத்தில்தான் உண்டு. துறவறத்தில் அல்ல!
- ✪ அகத்தவத்தால் இல்லறத்தை அன்பகமாய் மாற்றிடலாம்.
- ✪ இல்லற வாழ்வானது காலத்திற்குக் காலம் மக்கள் பண்பாட்டின் உயர்வுக்கும் சிறப்புக்கும் ஏற்ப மாறிக்கொண்டே வருகிறது.
- ✪ மனவளக் கலையாகிய ராஜயோகமும் - மெய்ப்பொருள் உணர்வு எனும் ஞானயோகமும் இல்லறத்தார்களிடையே அவர்கள் வாழ்வோடு வாழ்ந்து இணையும் வாய்ப்பு இக்காலத்தில் உருவாக வேண்டும்.

## 106. இளமை நோன்பு

- ❀ பிரம்மத்தை உணர்ந்துகொண்டு அதன் இயக்க நியதிகளுக்கு முரண்படாமல் ஒத்து வாழ்வதை பிரம்மச்சரியம் என்றார்கள். இதனை இளமை நோன்பு என்று நாம் சொல்கிறோம். அத்தகைய வாழ்வுக்கு எழுத்தறிவு, தொழிலறிவு, இயற்கைத் தத்துவ அறிவு, ஒழுக்க பழக்கங்கள் இவைகளெல்லாம் வேண்டும். இந்த நான்கையும் ஒரு தொகுப்பாக்கி அதனைத்தான் கல்வி என்று கொள்ளவேண்டும். அந்தக் கல்வியைக் கற்றுக்கொள்ளத் தனியாக ஒதுக்கி வைத்த காலம் இளமை நோன்பு.

- சூடிக்கொடுத்த நாச்சியார் எனப் புகழ்பெற்ற கி.பி.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்க் கவிஞரும் தத்துவ ஞானியுமாகிய ஆண்டாளம்மையார் இயற்றிய திருப்பாவை என்ற நூலிலே 'பாவை நோன்பு' என்ற வழிபாட்டு முறைக்கான விளக்கம் உள்ளது. பெண் குழந்தைகளுக்கு மாத்திரம் என்றபோது அது 'பாவை நோன்பு' என இருந்தது. அதை ஆண்களுக்கும் சேர்த்துச் சொல்லும்போது அதை 'இளமை நோன்பு' என்று பொதுவாகச் சொல்லாம்.

## 107. இழிநிலை

- உலக இழிநிலைக்கு இரண்டே பேர்தான் காரணம். ஒருவர் அரசியல்வாதி. மற்றொருவர் ஆசை கொண்ட வியாபாரி. இவர்கள் இரண்டு பேரும் என்ன செய்கிறார்கள்? விஞ்ஞானிகளின் குடுமியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 108. இலக்கியம்

- வீட்டைப்பற்றி நினைக்கும்போது அந்த சூழ்நிலைக்கேற்ப பதிவுகள்தான் எண்ணமாக வரும். ஆனால் இராமாயணத்தையோ - மகாபாரதத்தையோ நினைக்கும்போது அதற்கேற்ப உயர்ந்த குணங்கள் வரும். அதனால்தான் சாதாரண மக்களைவிட இலக்கியங்களைப் படித்தவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

## 109. இந்தியா

- இந்தியாவின் ஆன்மாவே ஆன்மீகம்தான்.

## 110. இன்சொல்

- இணக்கத்தை வற்புறுத்தும்போதும் - பிணக்கைத் தீர்க்கும் போதும் இன்சொல்லையே உள்ளமும் உதடும் உபயோகப் படுத்த வேண்டும். இன்சொல்லினால் கெடுதல் ஒழிய நன்மைகள் பல பெறலாம்.

## 111. இன்பம்

❖ பிறரை மேய்ப்பதும் - அடக்கி ஆள்வதும் நம் இன்பத்துக்கு கெடுதி. இன்பத்தில் மகிழாதே - துன்பத்தில் துவளாதே.

❖ இன்பமே இயற்கையில் எதிலும் - எங்கும்.

❖ இன்பத்தை தேட வேண்டாம் - வந்தால் பெற்றுக்கொள்.

❖ யாருக்கும் துன்பமளிக்காமலும் - இயன்றவரை பிறர் துன்பம் போக்கி வாழ்வதே இன்பமான எதிர்காலத்திற்கு வழி.

❖ பொங்குக பொங்குக! பூரித்து உள்ளமெலாம் எங்கும் நிறைந்த நம் ஏகாந்த நிலையறிந்து.

❖ துன்பம் குறைந்திட இன்பம் நிலைத்திடும். இன்பம் பெருக்கிடத் துன்பம் விளைந்திடும்.

❖ இன்பமே அளவுமுறை மீற மாற துன்பமாய் மாறிவிடும். இயற்கை உண்மை இன்பமாய் துய்க்கவெனில் தோன்றுகின்ற துன்பத்தை ஒழுக்கமுடன் தீர்த்தால் போதும்.

❖ பிறர் இன்புறக் கண்டு தான் இன்புறுவதே பிழையில்லா சலிப்பில்லாப் பேரின்பமாம். உயர்ந்தோர் அறம் கண்டு நின்ற நெறி ஆராய்வீர் இவ்வுண்மை அதனடக்கம் பெற்றுள்ள தறிந்தொழுகும் ஆண்மை பெற.

❖ இன்பத்தை முறையுடன் - அளவோடு அனுபவிக்க துன்பமே பெரும்பாலும் தோன்றாது.

❖ நன்மை பிறர்க்களித்து நட்டத்தை தான் ஏற்று இன்பம் அடைவார்கள் ஈசன் நிலையறிந்தோர்.

❖ நன்மை செய்பவனுக்கு இறைவன் தரும் வரம் இன்பம். செயல் தவறு என்பதை இறைவன் உணர்த்தும் வழியே துன்பம்.

❖ இயற்கை விதியறிந்து ஏற்று மதித்து ஆற்றும் முயற்சி வெற்றி பெற முழு அமைதி என்றும் இன்பம்.

❖ சமமான உணர்ச்சிகளும் அதில் ஊக்கி விடப்பட்ட உணர்ச்சி களும் இன்பம் என்று சொல்லலாம்.

## 112. இன்ப துன்பம்

* பிறந்துவிட்டோம் - வாழ்கின்றோம் - அனுபவித்தோம் பெற்றபலன் இன்பம் - துன்பம் இரண்டேயாகும்.

* இன்பமும் - துன்பமும் வேறுவேறல்ல. அவை ஒரே உணர்ச்சியின் ஏற்றத்தாழ்வான இருநிலைகளே. அந்தச் சமய தேவைக்கும் - பொருத்தத்திற்கும் ஏற்றவாறு - இன்பமாகவோ - துன்பமாகவோ இருக்கிறது.

## 113. ஈகை

- மனிதகுலத்தின் சிறப்புகளில் ஒன்று பிறர் படும் துன்பத்தைக் கண்டு இரங்கலும் - அத்துன்பத்தைப் போக்க முயலுவதும் ஆகும். அந்த வகையில் எழுந்த செயலே ஈகையாக மலர்ந்தது.
- பிற உயர் - பிற மக்கள் துன்பப்படும்போது இயன்ற மட்டும் அந்தத் துன்பத்தைத் தீர்க்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதுதான் ஈகை அல்லது ஈதல் என்ற வார்த்தையால் உணரப் படுகிறது. அத்துடன் மட்டுமல்ல; தன் ஆற்றலை வளர்த்துக் கொண்டு எப்போதுமே பிறருக்கு உதவி செய்யத் தயாராக இருக்கும் போதுதான் மிகுந்த செல்வமுடையவனைப் போன்றதொரு மனோநிலை ஏற்படும்.
- வாழ முடியாதவர்களையும் - வாழத் தெரியாதவர்களையும் - வாழ்வை இழந்தவர்களையும் - ஏற்றுக் காப்பது சமுதாய நலத்தைக் காக்கும் நற்செயலாகும். எல்லோருமே ஈகையை மேற்கொள்ள வேண்டும். அவரவரும் தங்கள் உழைப்பின் பலனிலே ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து ஈகையாக்க வேண்டும். ஈகையால் ஈபவரின் மனமும் எளிதாகும். பெறுபவரின் வாழ்வும் வளமாகும். எனவே இருதரப்பிலும் ஈகை நலம் பயப்பதாகும்.
- சரியானவருக்கு உதவுவதே ஈகை.
- எப்போதும் தன்னிடம் உள்ள ஆற்றலை வைத்துக்கொண்டு வாழ்க்கையில் பிறருக்கு உதவி செய்துகொண்டே இருக்க வேண்டும்.
- அருளாலோ - பொருளாலோ - உடலாலோ பிறர் குறை நீக்குவது.
- சமையல் குக்கரை எடுத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு ஆவியும் அப்படியே குக்கருக்குள்ளேயே இருந்தால் குக்கர் வெடித்து விடும். அதற்காக என்ன செய்கிறோம்? மேலே ஒரு பாதுகாப்பு வால்வு வைத்திருக்கிறோம். ஆவி அதிகமானால் தானாக ஆவி வெளியேறுகிறது. குக்கர் வெடிக்காது. அதேபோல் - நாம் நூற்றுக்கணக்காகச் சம்பாதிக்கலாம். சம்பாதித்தது முழுவதையும்

நமக்கே வைத்துக் கொள்கிறபோது நீராவி குக்கரில் சேர்ந்து கொண்டே இருந்து - சமயம் வந்தால் உடைத்துக் கொண்டு வெளியேறத் தயாராக இருக்கிறதோ - அதேபோல பொருள் தேக்கத்தால் மனம் உடைந்துவிடும். ஒரு சிறு அளவாகிலும் எடுத்து வைத்துப் பிறர் நலத்திற்காகக் கொடுக்கக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒதுக்கி வைத்தபிறகு - இது எனக்கில்லை - பிறர் நன்மைக்காகவே - பிறருக்குக் கொடுப்பதற்காகவே எடுத்து வைத்தது என்று தர்மமாக அதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதுவே ஈகை.

✪ நிகர வருமானத்தில் ஒவ்வொரு மனவளக்கலைஞனும் ஈகைக்கு ஒதுக்க வேண்டியது ஒரு சதவீதம். நீங்களேகூட அதை ஒரு பள்ளிக்கூடத்திற்குக் கொடுக்கலாம். அல்லது பாடப் புத்தகம் வாங்கி வசதி இல்லாத குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அப்படிச் செய்ய முடியாதவர்கள் - செய்யத் தெரியாதவர்கள் - செய்ய வாய்ப்பில்லாதவர்கள் சங்கத்தில் கொடுத்துவிடுங்கள். சங்கம் எப்படியும் பொதுச்சொத்தாகத்தான் இருக்கும். அருள்துறையின் வளர்ச்சிக்கே உங்கள் பணத்தைப் பயன்படுத்தும்.

✪ அறவழியில் பொருளீட்டி வாழ்வை நடத்தி மிஞ்சிய பொருளை சேர்த்து வைப்பதும் மனித சமுதாய சூழ்நிலையில் ஒப்புக் கொள்ளப்பட்ட நீதி.

## 114. ஈசன் நிலையறிந்தோர்

❁ நன்மைப் பிறர்க்களித்து நஷ்டத்தை தான் ஏற்று இன்பம் அடைவார்கள் ஈசன் நிலையறிந்தோர்.

## 115. ஈதல்

☆ உறுப்புகளை இயக்கி நமக்கும் - பிறருக்கும் உதவுதல், கருணை உடையவராக வாழ்தல், ஆறாவது அறிவின் உண்மை அறிதல், பிற உயிர்களின் துன்பங்கள் தீர்ப்பது, தன் ஆற்றலையும் வளர்த்து பிறருக்கும் உதவுதல், பிறரிடம் எதிர்பார்ப்பின்றி வாழ்தல். தனக்கும், சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் கடமையைச் செய்தல்.

## 116. உதட்டுச் சாயம்

✧ வெளிநாட்டுப் பெண்கள் தமிழ்நாட்டில் வந்து சில நாட்கள் தங்கினார்கள். அப்போது தமிழ்நாட்டுப் பெண்கள் வெற்றிலைப் பாக்கு போட்டு உதடு சிவப்பாக இருப்பதை அறிந்து - தங்கிய காலத்தில் அவர்களும் வெற்றிலைப் பாக்கு போட்டு தங்களது உதடும் சிவப்பாக இருப்பதைப் பார்த்து ரசித்து மகிழ்ந்தார்கள். பிறகு அவர்கள் சொந்த நாடு சென்றவுடன் அங்கு வெற்றிலை - பாக்கு - சுண்ணாம்பு கிடைக்கவில்லை. எனவே அதற்காக ஒரு செயற்கை சிவப்பு சாயம் கண்டுபிடித்து உதட்டில் பூசி மகிழ்ந்தார்கள். ஆனால் வெற்றிலை - பாக்கு - சுண்ணாம்பு கிடைக்கும் தமிழ்நாட்டுப் பெண்களும் செயற்கை சாயத்தை உதட்டில் பூசி உதட்டைக் கெடுத்துக் கொள்வது எந்த வகையில் பொருந்தும்?

## 117. உதவுதல்

✿ உலகம் கொந்தளிப்பில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்ற நாம் ஏதாவது செய்ய முடியுமா? என்றும் கேட்கப்படுகிறது. செய்யலாம். உலகத்தை நினைத்து வாழ்த்தலாம். அன்பும் - கருணையும் நிறைந்த அருளுள்ளத்தால் வாழ்த்தும் போது உலகத்தின் கோணல் போக்கு குறையும். கொந்தளிப்பை நாமும் கூட்டுவதைத் தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவவும் செய்யலாம்.

## 118. உத்தமர் இயல்பு

✪ உணவில் எளிமை - உழைப்பில் கடுமை - ஒழுக்கத்தில் உயர்வு - உத்தமர் இயல்பு.

## 119. உடல்

❖ மனிதனின் உடலமைப்பே உயிரினப் பரிணாமங்களில் சிறப்பு பெற்றது. மனிதனால் மட்டுமே தன்னை அறியவும் - இறை நிலையை அறியவும் முடியும்.

❖ மனித உடலில் மூன்று தத்துவங்கள் ஒன்றிணைந்து அமைக்கப் பட்டு இயங்குகின்றன. அவை பருவுடல் - நுண்ணுடல் - காந்த அலை உடல்.

❖ பருவுடல் மூலகங்களால் அதாவது பேரணுக்களால் கட்டப் பட்டுள்ளது. மூலகம் விண்களின் தொகுப்பு. அதாவது பேரணு அணுக்களின் தொகுப்பு. மூலகங்களின் கூட்டுதான் செல்கள். பருவுடல் செல்களால் ஆனது.

❖ உடல் உயிர் இரண்டிற்கும் வித்தே மூலம்.

❖ உடலும் உயிரும் இசைந்து இணங்கி இயங்கும் நிலையில் இணக்கப் பெற்று வாழ்ந்து வருபவன் மனிதன்.

❖ நமது உடல் - ஆகாசம் - காற்று - வெப்பம் - நீர் - நிலம் ஆகிய பஞ்சபூதங்களால் ஆனது. இதில் ஆகாசம் உயிராகவும், நிலம் பருவுடலாகவும், மற்ற மூன்று பூதங்களும் இவற்றிற்கிடையே காற்று ஓட்டம், வெப்ப ஓட்டம், இரத்த ஓட்டமாகவும் உள்ளன.

❖ அற்புதமான தொகுப்பாக உள்ள உடல் அமைப்பு; வியத்தகு ஆற்றல்களை உள்ளடக்கமாகக் கொண்ட உயிர்ச்சக்தி.

❖ மனித உடல் இயங்குவதற்கு உயிர்ச்சக்தி முக்கியமானதாக - மூல காரணமாக இருக்கிறது. உயிர்ச்சக்தி தங்கும் ஒரு பாத்திரம் போல் உடலமைப்பு இருக்கிறது.

❖ நோயற்ற உடலை உடையவர்கள்தான் அமைதியாக மகிழ்ச்சியாக வாழ முடியும். அவர்களுக்கு அறிவும் திறன்பட இயங்கும்.

❖ பருவுடலினூடே தனித்தனியாக விண்துகள்கள் எனும் உயிர்த்துகள் நிறைந்து சுழன்றோடிக் கொண்டே இருக்கின்றன. இதுவே நுண்ணுடல் அல்லது சூக்கும உடல் எனப்படும். தனித்தனியாக ஓடும் உயிர்த்துகள்களின் ஓட்டமே உயிரோட்டமாகும்.

❖ காந்த அலை உடல் இறைத்துகள்களால் ஆனது. ஒவ்வொரு விண்துகளும் இறைத்துகள்களின் கூட்டுச் சேர்க்கை விண்களின் தற்சுழற்சி விரைவால் அதனில் உள்ள ஒவ்வொரு இறைத்துகளும் தற்சுழற்சி விரைவு மீறி விண்ணைவிட்டு வெளியேறிக் கொண்டே இருக்கின்றன. இதனால் எந்த விண்ணிலிருந்தும் காலத்தால் அதன் பருமன் - ஆற்றல் ஆகியவை கரைந்து கொண்டேயிருக்கும். இத்தகைய விண்களின் கரைசலான இறைத்துகள் பருவுடல் முழுவதும் நிரம்பி இருக்கின்றன. இதைத்தான் காந்த உடல் என்கிறோம்.

- ❖ ஆகாசம் உயிராக இருக்கிறது. அது உடலில் இயங்குவதால் உடலுக்கு ஒரு காந்த இயக்கம் கிடைக்கிறது.
- ❖ காற்றும் வெப்பமும் உடலுக்கு மின்சாரத்தைத் தருகின்றன.
- ❖ உறக்கம் - உழைப்பு - உடை - உணவு இவைகளில் எவற்றையும் மறப்பதும் மிகுப்பதும் மனித உடலின் மகத்துவம் அறியாதோர் செய்கையாம்.
- ❖ நீரும், நிலமும் உடலில் இரசாயன இயக்கத்தை உண்டாக்குகின்றன.
- ❖ உடல் தானாகவே காற்றிலிருந்து கோள்கள் அலை வீச்சிலிருந்து சக்தியை எடுத்துக் கொள்ள முடியும்.
- ❖ உடலின் ஒவ்வொரு செல்லும் ஒரு தெய்வீகத் தன்மையுள்ள பரிசோதனைச் சாலையாகும். மன இயக்கத்திற்கும் - உடல் இயக்கத்திற்கும் வேண்டிய எல்லாவகைச் சக்திகளும் - இரசாயனங்களும் அந்தப் பரிசோதனைச் சாலையில்தான் தயாரித்து அளிக்கப் பெறுகின்றன.
- ❖ உடலில் நடைபெறுகின்ற சீவகாந்த இயக்கம் - மின்இயக்கம் - இரசாயன இயக்கம் - மனஇயக்கம் இவை எல்லாமே ஒன்றோடொன்று தொடர்புள்ளவை.

## 120. உடலுறவு

- ✻ மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்ற ஐம்புலன்களும் அனுபவிக்கக்கூடிய இன்பத்திற்கு அளவுமுறை வேண்டும். எந்தப் புலனை அதிகமாகப் பயன்படுத்தி இன்பத்தை அனுபவிக்கிறோமோ அதன் விளைவாக அந்தப் புலன் பழுதடைந்து அதன் துன்பத்தை நாம் அனுபவிக்க நேரிடும். ஆகவே புலனின்பத்தை விளைவறிந்து முறையோடு அனுபவிக்க வேண்டும். உடலுறவு விஷயத்திலும் அலட்சியப்படுத்தாமலும் அளவு மீறாமலும் முறை மாறாமலும் நடந்து கொள்ளுதல் நலம்.
- ✻ எல்லோருக்கும் இயற்கையான மற்றக் கழிவைப்போல் சுக்கிலமும் (விந்துநாதம்) ஒரு கழிவு வேகம் வரும்போது காலத்தாலே நீக்கிக் கொள்ள வேண்டியதுதான். மிச்சத்தைக் கழிப்பது என்ற அளவுக்குத்தான் உடலுறவு தேவை. இருக்கின்ற இருப்பில் குறைந்துவிட்டால் விந்து சக்தி குறைந்து விடும். அதனால் உயிர்ச்சக்தி குறையும். அதிலிருந்து உருவாக்கக் கூடிய சீவகாந்த சக்தி குறையும்.

* ஒரு ஆணும் ஒரு பெண்ணும் உடலுறவு கொண்டால் என்னென்ன விளைவு ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரியும். அது குழந்தைப் பேறு வரையிலே சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு இணைப்பு. ஒரு தொடர். உடல்நலம் - மனவளம் - சமுதாய வளம் - பொருளாதாரம் - அரசியல் இவ்வளவும் ஆணும் பெண்ணும் உறவு கொள்ளும் போது அதிலேயிருந்து விளையக்கூடிய விளைவுகளாகத் தொடர்ந்து இருக்கின்றன.

* ஒரு வித்து - ஒரு ஆணினுடைய விந்து - பெண்ணினுடைய கர்ப்பப் பையிலே சேருமானால் - அது தவறிப் போகவோ அல்லது வெளியேறவோ ஒரு மாதம் ஆனாலும் ஆகும். அதற்கு இடையிலே வேறொரு தரமான வித்து அதனோடு சேருமேயானால் இப்பொழுது எப்படி இரத்தத்திலே இரசாயனப் பிரிவு என்று பிரிக்கின்றார்களோ - அதேபோல வித்திலேயும் அந்த வேகம் இருக்கிறது. இரசாயன வேகம். அதிலே இரண்டு விதமான வித்துச் சக்தி ஒன்று சேருமேயானால் அது பெரும்பாலும் உடனடியாகக் கிருமிகளாக மாறும். அந்தக் கிருமிகள் கருப்பையைப் பற்றிக் கொள்ளுமேயானால் எத்தனைவிதமான நோய் - வியாதி வரும் என்று டாக்டர்களால்தான் சொல்ல முடியும். அதை நான் வர்ணிக்க இயலாது. ஆகையால் அதைத் தவிர்க்க வேண்டும்.

* சுவாசம் வலச்சுழல் இயக்கத்திலிருக்கின்றபோது உடலுறவு கொண்டு அதனால் பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும். இந்தச் சுவாச ஓட்டச் சுழலை வேண்டியவாறு வலமாகவோ - இடமாகவோ மாற்றிக் கொள்ளவும் செய்யலாம். அதற்கும் இயற்கையில் வழியிருக்கிறது.

## 121. உடல்நலம்

✪ அறிவாற்றல் கவலையினால் வீணாய்ப் போகும் அதையடுத்து உடல்நலமும் குன்றிப்போகும்.

✪ அனுபோகப் பொருள் உடல்நலம் மிகமிகக் கெடும்.

✪ உடல்நலத்தை விரும்புவோர் எதை உண்ணுதல் - எவ்வளவு உண்ணுதல் என்று ஆராய்ந்து உண்ண வேண்டும்.

✪ உயிரும் உடலும் இணைந்த இந்த உறவானது நீடித்திருப் பதற்கு இரத்த ஓட்டம் - வெப்ப ஓட்டம் - காற்று ஓட்டம் இவை மூன்றும் சரியாக இருக்க வேண்டும்.

- இரத்த ஓட்டம் - வெப்ப ஓட்டம் - காற்று ஓட்டம் இந்த மூன்றையும் ஒழுங்காக இருக்குமாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமை, உடல்நலமாக இருந்தால்தான் மனம் வளமாக இருக்க முடியும்.
- நாம் மனதாலும், உடலாலும் சரியான முறையில் வாழத் தெரிந்து கொள்ளவில்லை.

## 122. உடலோம்பல்

- உடல் எடுக்கப்பட்டதன் நோக்கம் அறிந்து - அறிவை உயர்த்தி - பரம்பொருளோடு இணைதல் வேண்டும். எனவே நாம் தொடரும் வாழ்வுப் பயணத்திற்கு வசதியும் - பொருத்தமும் உள்ள ஊர்தியாக அமைந்துள்ள இந்த உடலைப் பழுதடையாமல் காத்து இயக்கினால்தான் ஆன்மா தனது இலட்சிய எல்லையைக் காலத்தோடு அடைய முடியும்.
- உயிருக்கும் - உடலுக்கும் உள்ள உறவறிந்து இனிமை காத்தல் இது உடல்நலம் தரும்.
- இரத்த ஓட்டத்தைச் சரிப்படுத்துவதுதான் ‘ஆசனம்’. ஆசனம் என்றால் இருப்பு.
- உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினால் உள்ளொளி தீயாகி உடலைக் கெடுத்துவிடும்.

## 123. உடற்பயிற்சி

- இன்று உள்ள சமுதாயச் சூழ்நிலையில் பலருக்கும் உடல் உழைப்பிற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் உடல் நலமாக இருக்க உடலின் எல்லா அவயங்களுக்கும் இயக்கம் தேவை. இல்லாவிட்டால் அங்கு கழிவுப் பொருட்களின் தேக்கத்தினால் இரத்தம் - காற்று - வெப்ப ஓட்டங்களில் தடை முதலியன ஏற்பட்டு நோய் ஏற்படலாம். எனவே ஒவ்வொருவரும் உடல் அவயங்கள் அனைத்துக்கும் இயக்கம் அளிக்கின்ற மாதிரி எளிமையான சில உடற்பயிற்சிகளைத் தினமும் செய்து வரவேண்டும்.
- மனஅமைதிக்கு தவம் அவசியம். தவத்திற்கு உடற்பயிற்சி அவசியம். ஆகவே மனஅமைதிக்கு உடற்பயிற்சியும் அவசியம்

என்று வருகிறது. இது இருக்க மனஅமைதிக்கு உடல்நலம் அத்யாவசியமன்றோ? அந்த உடல்நலத்தை காக்க உடற்பயிற்சி அவசியம் என்று வருகிறது.

☆ உடற் செல்களின் சீர்குலைவைப் போக்க ஏற்படுத்தியதுதான் நமது உடற்பயிற்சி.

☆ நமது உடல் பஞ்சபூதங்களால் ஆனது. இதில் ஆகாசம் (விண்) உயிராகவும் - நிலம் பருவுடலாகவும் காந்த அலையும் பருவுடலை பிடித்து வைத்துள்ளன. இவை காற்று ஓட்டம், வெப்ப ஓட்டம், இரத்த ஓட்டமாகவும் உள்ளன. மேலும் உயிரில் எல்லாம் சரியான முறையாக இருப்பதற்கு உரிய பயிற்சிதான் எளியமுறை உடற்பயிற்சி. மற்ற மூன்று பூதங்களும் இவற்றிற்கிடையே இருந்துவரும்.

## 124. உற்சவங்கள்

✧ சுகாதாரம் - அறிவுநிலை - பொருளாதாரம் என்ற மூவகையையும் பாதிக்கும் அளவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உற்சவங் களை பத்து ஆண்டு காலத்திற்கு நிறுத்தி - அந்த செலவுகளை நல்ல வகையில் பயன்படுத்தலாம்.

## 125. உயர்புகழ்

❁ இந்த உலகத்திற்கு - இந்த சமுதாயத்திற்கு - தன்னை வளர்த்து - காத்து - எல்லா வசதிகளையும் அளித்து வரக்கூடிய சமுதாயத் திற்கு நாம் செய்யும் கடமைகள் மூலமாகவே புகழைப் பெற முடியும். அந்தக் கடமைகளை நல்ல முறையில் ஆற்றும்பொழுது அந்தக் கடமையின் மூலமாக எத்தனையோ பேருடைய வாழ்க்கை செழிப்புறும். அவர்களுடைய உள்ளங்கள் மலரும் - நிறைவு பெறும். அதுவே - அந்த வாழ்த்தே - அந்த மனநிறைவேதான் - ஒரு மனிதனுக்குப் புகழ் என்று கூறப்படுகிறது. அத்தகைய புகழ்தான் உயர் புகழாகும்.

## 126. உண்மை

❂ அறிவுக்கு மேன்மை நிலையென்றும் - உண்மை நிலையென்றும் இருநிலைகள் உண்டு. புலன்கள் மூலம் உணர்ச்சிகளாக - இன்ப

துன்ப அனுபவங்களாக உலகை அறிகிறோம். இது புறஅறிவாகும். அறிவின் படர்க்கை நிலையான மனமாக இயங்கும் நிலை இது. இதுவே மேன்மை நிலை. மனதின் உட்பொருளாக உள்ள அறிவுதான் மெய்ப்பொருள் எனும் உண்மையறிவு. உள் என்ற சொல்லைக் கொண்டு உள்மை உண்மை என வழங்கப்படுகிறது.

- உண்மை நிலைக்குப் போனால் அங்கே இருக்கிறதெல்லாம் சிவம்தான். பேரறிவுதான். அதனால்தான் நான் அடிக்கடி சில இடங்களில் எழுதியிருக்கிறேன்; மனதின் மறுமுனை கடவுள் என்று.
- உண்மைதான் நம்மை மாற்றுமேதவிர, உண்மையை நாம் ஒருபோதும் மாற்ற முடியாது.
- உண்மையை (இறைநிலையை) உணராவிட்டால் எவ்வளவுதான் இன்பங்களை மனிதன் அனுபவித்துக் கொண்டிருந்தாலும் அவன் மனத்திலே நிறைவு இராது.

## 127. உபதேசம்

- சஞ்சித கர்மத்தை முடித்துக் கொண்டு பேரின்ப வாழ்வை எய்த - பரம்பொருள் உணர்வைப் பெறுவதற்காக என்னென்ன முறையிலே இந்த உடல் வேண்டுமோ - அந்த முறையிலே அதே அறிவு இயங்கி இந்த உடலைத் தாய் வயிற்றிலே அதே அளவு தான் வெளியில் வந்த உடனே மறந்து போகிறது. புலன் அறிவு வேலை செய்வதனால் மறந்து போகிறது. நீ இதற்காகத்தான் வந்தாயப்பா என்று தூண்டி - என்று எடுத்துக்காட்டி உணர்த்தி பிரம்ம ஞானத்தை உணர்ந்தவனோடு சேர்ந்த உயிரைச் செலுத்துவதுதான் உபதேசம்.

## 128. உரிமை

- பிறந்த மனிதனுக்கு பொருளீட்ட - காக்க - துய்க்க - பிறர்க்கு உதவ - விரும்புவோரிடம் நட்பு கொள்ள - இயற்கை எழில்களை ரசிக்க - சிந்தித்து தெளிந்து மகிழ முழு உரிமையுண்டு.
- வாழத் தெரியாதவர்களையும் - வாழ இயலாதவர்களையும் சிறப்பாக வாழவைக்க பொருள், ஆற்றல், அறிவு இவை மிக்கோர்க்கு கடமை உண்டு. கடமையை உணர்ந்த இடத்தில்

அதைப் பொறுப்போடு காலாகாலத்தில் ஆற்றும் இடத்தில் உரிமையென்ற உணர்வே எழ இடமில்லை.

✻ பிணக்கு - அச்சம் - பகை - வஞ்சம் - போர் மற்றும் கூறப்படும் பழிச்செயல்கள் யாவும் உரிமை வேட்கையின் விளைவுகளே. உரிமை வேட்கையோ கடமை மறந்த இடத்தில் பிறந்ததேயாம்.

## 129. உருவங்கள்

✪ அறிவுக்கு ஆதாரமானது உடல் - உடலுக்கு ஆதாரமானது நாத விந்து. நாதவிந்துவுக்கு ஆதாரம் தொடர்ந்து வந்த பரிணாமத்தில் ஓரறிவு முதல் ஆறறிவு உடைய பலவிதமான உருவங்கள்.

✪ எல்லா உருவங்களுக்கும் மூலமானது அணு. அணுவுக்கு மூலமும் ஆதாரமுமானது ஆதி. இந்தப் பேராதாரத் தத்துவத்தைத் தெய்வம் என்றும் - இறை என்றும் - கடவுள் என்றும் - பிரம்மம் என்றும் சொல்கிறோம்.

## 130. உறவு

❁ ஒவ்வொரு கணவன் - மனைவி உறவை உயிருக்கும் மேலானதாக மதித்துப் போற்ற வேண்டும்.

❁ உடல் பொருள் ஆற்றல் என்ற மூன்றையும் ஒருவருக்கொருவர் மனமுவந்து அர்ப்பணித்து வாழ்க்கைத் துணைவராகி இன்ப துன்பங்களில் பங்குகொண்டு வாழும் பெருமை கணவன் - மனைவி உறவில்தான் அதிகமாக அடங்கியுள்ளது.

## 131. உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்க...

☆ நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

☆ அர்த்தமில்லாமலும் - பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள்.

☆ எந்த விஷயத்தையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக் கொடுங்கள்.

- ☆ சிலநேரங்களில் சில சங்கடங்களை சகித்துதான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
- ☆ நீங்கள் சொன்னதே சரி - செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்.
- ☆ குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- ☆ உண்மை எது - பொய் எது - என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் - அங்கே கேட்டதை இங்கே சொல் வதையும் விடுங்கள்.
- ☆ மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- ☆ அளவுக்கு அதிகமாய் - தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- ☆ எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் - அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ - இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- ☆ உங்கள் கருத்துக்களை செயல்களை நடக்கிற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
- ☆ மற்றவர்களுக்கு மரியாதை காட்டவும் - இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- ☆ புன்முறுவல் காட்டவும் - இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- ☆ பேச்சிலும் - நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் - தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- ☆ அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள் - பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள்.

## 132. உறக்கம்

✧ உடலுக்கு ஓய்வைத் தருவது உறக்கம். இயற்கை நமக்கு உறக்கத்தைக் கொடுத்து அந்த நேரத்தில் உடல் களைப்பை நீக்கி, உடலை சீர்செய்து, பழுது பார்த்து, உடல் ஆற்றலைப் புதுப்பிக்கின்றது. ஆகவே, உறக்கம் உடலுக்கு அவசியம் தேவை. அதிக உறக்கத்தால் உடல் இயக்கங்கள் குறைந்து, கழிவுப்

பொருட்கள் முறையாக அகற்றப்படாததால் நரம்பு மண்டலமும், அறிவுத் திறனும் பாதிக்கப்படும். ஆகவே உறக்கத்திலும் அளவு முறை காக்கப்பட வேண்டும்.

✧ மனத்திற்கு மட்டுமின்றி - உடல் செல்கள் அனைத்திற்கும் ஓய்வளிக்க வல்லது உறக்கம்.

✧ உறக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியமானது. உடல் உழைப்பால் ஏற்பட்ட சீர்கேட்டைச் சீரமைக்கப்படுகிறது.

✧ உறக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியம் - அளவாக.

## 133. உறுதி

✿ செயல்படுத்திப் பழகாத ஓர் உறுதி நல்லதாகவே இருந்தாலும் - அது யாருக்கும் எந்தவிதப் பயனையும் அளிக்காது.

## 134. உயர்முறை

✪ அறிவோடும் விழிப்போடும் அன்பாய்ப் பழகி - அகலாமலும் நெருங்காமலும் தீக்காய்வார் போல் பொருளையோ ஆற்றலையோ உதவியும் பெற்றும் வாழ்வது நட்பினால் ஏமாறாத - ஏமாற்றம் அளிக்காத உயர் முறையாகும்.

## 135. உயர்வு

❖ பழக்கத்தால் மனிதன் உயரவும் முடியும். தாழவும் முடியும்.

❖ மனம் - இயற்கை - சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும். இதில் இயற்கை மாற்றப்பட முடியாதது. ஆளை மனம் அறிந்து மதிக்கும் அளவுதான் மனத்திற்கு உயர்வு கிட்டும்.

❖ தான் உயராது - மற்றவரது உயர்வை மதிக்கவும் முடியாது. ரசிக்கவும் முடியாது.

## 136. உயர்வு தாழ்வு மனப்பான்மை

✻ ஒருவருக்கு அமைந்துள்ள, பொருள் வளம், செல்வாக்கு, புகழ், கடமை, பொறுப்பு இவற்றைக் கொண்டு மற்றவர்களிடமுள்ள

இவற்றின் அமைப்பை ஒப்பிட்டு, தன்னை அல்லது மற்றவரை உயர்த்தவோ, தாழ்வாகவோ கருதும் மனநிலைதான் 'உயர்வு - தாழ்வு மனப்பான்மை' என்பதாகும். இதனால் பொறாமை முதற்கொண்டு பல மாசுகள் ஏற்படுகின்றன. பிறரது உயர்வைக் கண்டு பொறுக்க முடியாமை பொறாமை ஆகிறது.

## 137. உயிர்

- ✪ உயிர் எனும் சக்தி உணர்ச்சியில் மனமாய் ஒடுங்கி தன்மூலம் உணர்ந்திடப் பரமாய்.
- ✪ உயிர் என்பதோ அணுவின் நுண்துகள் ஆம்.
- ✪ உயிர் என்பது பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையான இயக்க மூலக்கூறு ஆகும்.
- ✪ உயிர் - பரம் - அறிவு ஒன்றே பொருளால் உணர்வு ஒழிவு நிலைகளில் மாறுதல்.
- ✪ உடல் ஊடே உயிர் சுற்றிச் சுழன்றியங்க உணர்ச்சியென்ற விளைவுண்டாம். அறிவு ஈதே.
- ✪ காந்தமே ஒலி - ஒளியாய்த் திகழ்தல்போல கண்காணா உயிர் அறிவாம் ஆற்றலும் ஆம்.
- ✪ ஒவ்வொரு உயிரும் தெய்வத்தின் திருவிளையாட்டரங்கம்.
- ✪ தன்னலம் சமுதாய நலம் எனும் இரண்டையும் பின்னி ஒன்றால் ஒன்று பிழைப்படாமல் ஆற்று.
- ✪ உன்னிலே பெரிதென உணர் இன்பதுன்பங்கள் என்னிலும் எல்லா உயிரிலும் உள்ளதுணர். உயிர் என்பது பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையான இயக்க மூலக்கூறு ஆகும்.
- ✪ தெய்வநிலை உணர்ந்து - பிறவியொழித்து முக்தி பெறுவது உயிர்தான் - உடல் அல்ல.
- ✪ பரிணாமத் தத்துவ முறையில் உயிரற்ற பொருளிலிருந்துதான் முதலில் உயிர் தோன்றியது.
- ✪ உயிர்சக்தியின் இயக்க விளைவுதான் எண்ணம். அது அறியும் திறனுடையதால் அறிவென்றும் கூறப்படுகிறது.
- ✪ காந்தமே ஒலி - ஒளியாய்த் திகழ்தல் போல - கண் காண உயிர் அறிவாய் ஆற்றலும் ஆம்.

✪ அண்டத்தில் கடவுளாய் அழைக்கப்படுபவன் பிண்டத்தில் உயிராய் பேசப்படுகிறான்.

## 138. உயிர் உணர்வு

❀ வெளிப்புறத்திலே காட்சியாகவுள்ள உலகை உணர்ந்து கொள்ளுகிறபோது நீளம் - அகலம் - ஆழம் என்று பொருட்களிடையே உருவத்தை வைத்துப் பார்க்கிறோம். அதுபோல அறிவானது - மனம் எங்கிருந்து புறப்பட்டதோ அந்த இடத்தையே திரும்பிப் பார்க்கும்போது உயிர் உணர்வு பெறுகிறோம்.

## 139. உயிர்க்கொலை

✰ **ஆடுமாடுகளையெல்லாம் நீங்கள் கொல்லும்போது அந்த உயிருக்கு ஒரு (Reaction) பதட்டமும் - துன்பமும் வருகிறது அல்லவா? அதனால் அதே பதிவு மனிதனிடம் வருகிறது. இரண்டாவது அதனுடைய குணத்தில் விலங்கினத்தின் குணங்களெல்லாம் அடங்கி இருக்கிறது.**

## 140. உயிர் – மெய்

✧ நிலையாக இருந்த ஒரு பொருள் அசைந்தது. அசைந்தால் அலை. நின்றால் நிலை. இருந்த நிலையில் மெய். எழுந்தால், இயக்கத்தில் உயிர். மொழி இலக்கணத்தில்கூட மெய் அசையாது. ஒலிக்கும்போது உயிரெழுத்து அசைகிறது. இருப்பு நிலையாக இருந்ததுதான் பொருள் என்றால் அது இயக்கத்துக்கு வரவில்லையெனில் பொருள் இல்லை.

## 141. உயிர்நிலை

✿ கண்ணாடி பார்க்க காணலாம் உருவநிலை - உண்ணாடி பார்க்க உணரலாம் உயிர்நிலை.

## 142. உயிர்ச்சக்தி

❂ அளவுக்கு மீறாமல் - தேவைக்கேற்ப மனிதன் தன் எண்ணம், சொல், செயல், உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, கற்பனை,

ஆசை, தன்முனைப்பு, வஞ்சம், கடும் பற்று இவைகளின் அளவில் கட்டுப்பாட்டுடன் இருந்தால் உயிர்ச்சக்தியாக இருப்பு அளவு அதிகரிக்கும். செலவு குறையும்.

- இயற்கை இறைவன். இறைவன் என்றுமே இருப்பு நிலையில் பிரம்மமாக இருக்கிறான். செலவைக் குறைத்து இருப்பை அதிகமாக்கினால் நாம் வளம் பெற்றவர்களாகி விடுவோம்.
- சும்மா இருப்பதே சுகம் என்ற வகையில் புலன் வழிச் செல்லாமல் உயிர் மேல் எண்ணம் வைத்து அகத்தவம் செய்வது சிறந்தது.
- ஒரு சங்கல்பத்தை துரிய நிலையில் இருந்து எண்ணி எண்ணி உணர்வதால் உயிர்ச்சக்தி கூடும்.
- அறுகுண சீரமைப்பினால் உயிர்ச்சக்தி கூடும்.
- உடலில் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் இரத்த ஓட்டம் - வெப்ப ஓட்டம் - காற்றோட்டம் இவற்றைக் கண்காணிப்புடன் சமநிலையில் சரியான அளவில் வைத்துக் கொண்டால் உயிர்ச்சக்தி கூடும்.
- விந்து என்ற அணுக்கோளங்கள்தான் மனித காந்த சக்தி என்ற உயிர்ச்சக்தியின் இருப்பிடமாகும். சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் தான் விந்து. எப்பொழுதும் விந்துவை ஆகர்ஷண சக்தியினால் உடலின் கீழ்ப்பகுதிக்கு விடாமல் தவத்தினால் எண்ண அலை களை அளவிற்குள் வைத்து, உச்சியிலே நிறுத்தி பரநிலையை அடையலாம்.
- உள்ளதை உணர்ந்து, நல்லதைச் செய்து, அல்லதை விடுவதன் மூலம் உயிர்ச்சக்தி சேமிக்கப்படும்.
- உயிர்ச்சக்தியை வீணாக்கும் வழிவகைகளைக் கட்டுப்படுத்தவும், உயிர்ச்சக்தியை அதிகரித்துக் கொள்ளவும், விந்துவை எப்போதும் உச்சியில் வைத்துக் கொள்ளவும், காயகல்பப் பயிற்சியும், மூச்சுப் பயிற்சியும் பெரிதும் பயன் அளிக்கும்.
- அறிவானது புலன்களைக் கொண்டு செயலாற்றும்போது உயிர்ச்சக்தியானது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு எழுச்சியாகி உடலில் ஊறுதல் உணர்ச்சியாகவும், கண்களில் ஒளியாகவும், நாவில் ருசியாகவும், காதுகளில் ஒலியாகவும், மூக்கில் வாசனையாகவும் செலவாகிக்கொண்டே இருக்கிறது.
- கொள்ளும் இயக்கமாகவும் - தள்ளும் இயக்கமாகவும் உடல் முழுவதும் நடைபெறுவதால் ஓரளவு உயிர்ச்சக்தி செலவாகிக் கொண்டு இருக்கிறது.

- ✪ எண்ணம் - சொல் - செயல்களினால் ஜீவன் பெறும் மாற்றுத் தன்மையால் பேராசை, சினம், கடும் பற்று, உயர்வுதாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால்கவர்ச்சி, வஞ்சம் என்ற ஆறு குணங்களின் வழியாகவும் பழக்கவழக்க ஒழுக்கங்களினாலும் உயிர்ச்சக்தி செலவழிக்கப்படுகிறது.
- ✪ மிதமிஞ்சிய போகம், ஆகாரம், பேச்சு, உழைப்பு, வெட்பதட்ப தாக்குதல் இவைகளாலும், நோயாளிகள், தீயகுணமுடையோர், வீட்டு விலக்கான பெண்கள் இவர்கள் ஸ்பரிசமும், கற்பொழுக்கத் தவறுதலாலும் உயிர்ச்சக்தியானது ஒவ்வொரு அளவில் அதனதன் அளவுக்கு ஏற்ப செலவழிக்கப்படுகிறது.
- ✪ எந்தப் பொருளை உணர்ந்தாலும் அனுபவித்தாலும் - நம்முடைய உயிர்ச்சக்தி அந்த இடத்திலே செலவாகிறது. மேலும் மேலும் செலவாகும்போது உடலில் உள்ள அணு அடுக்குகள் சீர்குலைந்து போகின்றன.
- ✪ உயிர்ச்சக்தி சாதாரணமாக எல்லோர்க்கும் மூலாதாரம் என்கின்ற பால் உணர்ச்சிக்குரிய சுரப்பியிலே - மையமாக நின்று உடல் முழுவதும் பரவிக்கொண்டே இருக்கின்றது.
- ✪ கவலை, கோபம், பொறாமை, பயம், பந்துக்கள், பாசம், பொருள் பற்று, பேராசை, காமம் முதலியன எண்ண இயக்கங்களால் உயிர் ஆற்றல் பெரும் அளவில் செலவழிக்கப்படுகிறது.

## 143. உள்ளம்

- ❖ மனதிற்கும் - உயிருக்கும் உள்ள உறவறிந்து இனிமை காத்தல். இது உள்ள நலன் தரும்.
- ❖ உள்ளம் என்பது உடலுக்கு மூலசக்தி.

## 144. உலகநலம்

- ✻ கடன் - வறுமை - கல்வியின்மை என்ற மூன்று களங்கங்கள் உலகினிலே மறைய வேண்டும்.
- ✻ உலகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். உலகநலம்தான் ஒவ்வொரு மனிதனுடைய நலமாக அமைய முடியும். இந்த உண்மையை உலகம் உணர வேண்டும்.

## 145. உலக அமைதி

- ✪ உலக அமைதி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரியதோர் பெறும் செல்வமாகும்.
- ✪ அருள்துறையில் வளர்ச்சியின்றி உலகில் அமைதி அமையாது. அறநெறியும் இறையுணர்வும் இன்றி அருள்துறை வளர்ச்சி அமையாது.
- ✪ உலக அமைதிக்கு, எல்லா நாடுகளும் அணுகுண்டுகளை ஐ.நா. சபையிடம் ஒப்புவிக்க வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, எல்லா இராணுவங்களையும் கலைத்துவிட வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, யுத்த தளவாடங்களை ஐ.நா. சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, அறிஞர்களே ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, ஆக்க வேலைக்காக மட்டுமே ஆக்க சக்தியை உபயோகிக்க வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, உலக ஆட்சியை நிறுவவேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, மதப்போரை தடுக்க, அகில உலக சன்மார்க்க சங்கம் ஏற்படுத்தி மக்களுக்கு தெய்வ நிலையைத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, தனிமனித வாழ்வை உயர்த்த வேண்டும்.
- ✪ உலக அமைதி பெற, தனிமனிதனின் பகை உணர்ச்சியைப் போக்க மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும்.

## 146. உலகநல வாழ்த்து

- ❁ உலகமெல்லாம் பருவமழை ஒத்ததடி பெய்யட்டும், உழவ ரெல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்.
- ❁ பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும் - பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உணர்த்தட்டும்.
- ❁ கலகங்கள் போட்டி பகை கடந்தாட்சி நடக்கட்டும் - கல்லாமை கடன் வறுமை களங்கங்கள் மறையட்டும்.

- நலவாழ்வை அளிக்கும் மெய்ஞ்ஞான ஒளி வீசட்டும் - நம் கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்.
- ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன் உலகம் முழுவதையும் நினைத்து, 'வாழ்க வையகம் வாழ்க வளமுடன்' என வாழ்த்த வாழ்த்த - அந்த வாழ்த்து அலை உலக மனித சமுதாயத்தில், அவர்கள் அறிவிலே பதிவாகி பிரதிபலித்து காலத்தால் உலகம் முழுவதும் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவிடச் செய்யும்.

## 147. உலக சரித்திரம்

- இருள் சூழ்ந்த நிகழ்ச்சிகளின் தொகுப்புகள் தாமன்றோ இன்று நாம் படித்துவரும் உலக சரித்திரங்கள்.

## 148. உலக சமாதானம்

- உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் ஒவ்வொரு தனிமனிதன் மனதில் அமைதி வர வேண்டும்.
- உலக சமாதானத்தை உலகம் ஏற்றுக்கொள்வதற்கு 50 ஆண்டு காலம் ஆகும். மறுபடியும் அது அமுல் வருவதற்கு 100 ஆண்டு காலம் தேவைப்படலாம். காரணம் என்னவென்றால், மனித வர்க்கம் விலங்கினத்திலிருந்து வித்தெடுத்து வந்து அந்தப் பதிவோடு மனிதனாகியுள்ளது. முதலில் மனிதன் என்று நாம் தெரிந்துகொள்வதற்கே நீண்ட காலம் ஆகிவிட்டது. அப்படித் தெரிந்து வாழ்ந்த காலத்தில் இருந்து எத்தனையோ மாற்றங்கள் சரித்திரத்தில் வந்துள்ளன. அந்த மாற்றத்தை உணர்ந்து பயிற்சி யினால் திருத்தி வந்துள்ளோம். அந்தப் பண்பாடு சமுதாயத்துக்கு வருவதற்கும் ஒரு மாற்றம் சரி என்று ஒத்துக்கொள்வதற்கு காலம் ஆகும்.
- உடைமை தனி மனிதனுக்கு உரிமை முறையுள்ளவரை உலகில் சமாதானம் ஒருபோதும் நிலவாது.
- உலக சமாதானம் தோன்ற அரசியல் தலைவர்களும் விஞ்ஞானிகளும் ஆசிரியர்களும் ஆன்மீகத் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- உலக சமாதானத் திட்டத்தை இரண்டு தடவை நம் நாட்டின் தலைவர்களிடமும் கொடுத்தேன்; பாராட்டினார்கள்; அத்திட்டம் இரண்டு தடவையும் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

## 149. உலக சமுதாய வாழ்வு

- சக்கரம் சுழல்வதால் வண்டி ஓடுவதுபோல அறிஞர்களின் சிந்தனைச் சக்கரங்களின் சுழற்சிக்கேற்ப உலக சமுதாய வாழ்வு எனும் வண்டி ஓடுகிறது.

## 150. உலக ஒற்றுமை

- ஒருபிடி உணவில் உலக ஒற்றுமை கண்டிடு. உழைப்பினால் பதில் உலகுக்குத் தந்திடு.

## 151. உலக அமைதி வேட்பு

- ஐ.நா. சபையில் உலக அளவில் எல்லா நாடுகளும் உறுப் பினர்களாக வேண்டும்.
- அந்தந்த நாட்டு ஜனத்தொகைக்கு ஏற்பப் பிரதிநிதி ஆசனங்கள் தரப்பட வேண்டும்.
- இரத்து அதிகாரம் (வீட்டோ பவர்) ஒழிக்கப்பட வேண்டும்.
- போர் சட்ட விரோதமென அறிவிக்கப்பட வேண்டும்.
- தவறு செய்யும் நாடுகளைக் கண்டிக்கவும் - திருத்தவும் ஐ.நா.சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.
- சமூக விரோதிகளால் கைப்பற்றப்பட்ட நாட்டையும் - மனித உரிமைக்கு எதிராகச் செயல்புரிந்து - சர்வாதிகார ஆட்சி நடத்தும் நாட்டையும், ஐ.நா. நிறுவனமே கைப்பற்றி, தக்க சீர்திருத்தம் செய்து, அங்கு குடியாட்சியை ஏற்படுத்தி, மக்களிடம் அந்த நாட்டை ஒப்புவிக்க வேண்டும்.

## 152. உலகநல வேட்பு

- உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம், உயிரறிவை உள்ளுணர்வாய் பெறுதல் வேண்டும்.
- பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும். பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்.
- கலகங்கள் போட்டி பகை கடந்தாட்சி நடக்கட்டும் - கல்லாமை கடன் வறுமை களங்கங்கள் மறையட்டும்.

* நலவாழ்வை அளிக்கும் மெய்ஞ்ஞான ஒளி வீசட்டும் - நம் கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்.

## 153. உழைப்பு

- உழைப்பின்மை சோம்பலை வளர்க்கும் உடற்கருவிகளின் செயல்திறனைக் குறைத்து இரத்த ஓட்டத்தை மந்தப்படுத்தும். இதனால் பல நோய்கள் வரலாம். ஆனாலும் அளவுக்குமீறிய உழைப்பு உடற்சக்தியை விரயமாக்கும். எனவே, உழைப்பிலே அளவும் முறையும் வேண்டும்.
- உடல் உழைப்பால் மனித உடலுக்குள் உள்ள வேண்டாத கழிவுகள் வெளியேற்றப்படுகிறது.
- உடல் உழைப்பாலும், ஒவ்வொருவரும் பெறுகின்ற ஊதியத்தைக் கொண்டே மனிதன் வாழ வேண்டும்.
- உழைப்பவன் உண்ண வேண்டும். உண்பவன் உழைக்க வேண்டும். இது இயற்கைக்கு ஒத்த நீதி. இந்த நீதி தவறுகின்ற இடத்தில்தான் - ஐந்து பெரும் பழிச்செயல்கள் பிறக்கின்றன.
- உணவு உண்டுதான் வாழ வேண்டும். இது இயற்கைச் சட்டம். உணவு பெற உழைத்தே ஆகவேண்டும். இது மனித இனம் உரிமை ஒழுக்கமாக ஏற்படுத்திக் கொண்ட செயற்கைச் சட்டம்.
- ஆக்க முறையால் அன்றிப் பிறர் உழைத்து ஆக்கிவைத்த பொருள் கவர்ந்து பிழைக்க மாட்டோம்.
- உழைப்பினால், உடலும் - உள்ளமும் - உலகமும் - பயன்பெறும் உணர்வீர்.

## 154. உழைப்பாளர்

- பொருள்துறைக்கு ஆதார சாதனங்கள் - புவிமீது பணமுடையோர்க்குரிமையாச்சு - பொருள் தோற்றம் செல்வந்தர் வணிகர் என்போர் - பொறுப்பினிலே வந்தது பின் உழைப்போர்க்கு, பொருள் தோற்ற மூலதனம் கிட்டவில்லை - பொருளுடையோர்க்கு அடிமை செய்து கூலி பெற்றார் - பொருள் தோற்ற விற்க சுதந்திரமில்லாமல் - பொதுவாக உழைப்பாளர் நலிந்து விட்டார்.
- உணவு - உடை - வீடு என்ற முப்பொருளைத் தோற்றும் உழைப்பாளியே முதல்வன்.

## 155. உணவு

- ☆ உண்ணும் உணவு உண்டு கிடைத்தவகை எண்ணி யுண்ணிடல் என்றும் உன் கடன்.
- ☆ உணவை மருந்துபோல் உண், இல்லையெனில் மருந்தையே உணவாக உண்ண வேண்டிவரும்.
- ☆ உணவே உடலாக வந்துள்ளது. ஆகையினால் உணவை உண்டு தான் உயிர் வாழ வேண்டும். உணவில் அளவுமுறை மாறிட மீறிட உணவாகவே உடல் மாறியும் போமன்றோ?
- ☆ அளவோடு உணவு உண்டால் உணவைச் சீரணிக்கும். அதிகமாக உண்டால் உணவு உடலைச் சீரமைக்கும்.
- ☆ ஒரு மனிதனிடையே உருவாகும் சிந்தனைகள், எண்ணங்கள், அவன் உண்ணுகிற உணவின் மூலமாகவே எழுச்சி பெறுகின்றன.
- ☆ ஒரு மனிதனின் புகழும் பெருமையும், இழிவும் அழிவும் அவனுடைய எண்ணத்தின் நன்மைக் கூறுகளாலும் - தீமைக் கூறுகளாலுமே ஏற்படுகின்றன. வேறுவகையில் சொல்லப் போனால் - ஒரு மனிதன் உண்ணும் உணவுதான் அவன் வாழ்க்கையையே தகவமைக்கிறது.
- ☆ உணவு என்பதை வயிற்றுக்கான தீனி என்பதாக மட்டும் அணுகாமல், உடல், உள்ளம், உயிர் இவையனைத்தும் - இயற்கை வெளியுடன் இணைந்து இயங்கும் ஒரு கட்டமைப்பின் ஆக்க சக்தியாகவே கருதவேண்டும்.
- ☆ குடும்பத்தில் ஒருவேளையாவது அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து உண்ண வேண்டும்.
- ☆ ஈசனே தானாக உணர்ந்தபோதும் எழும் பசியை உணவால்தான் போக்க வேண்டும்.
- ☆ நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்.

## 156. உணவு உண்ணும் முறை

- ✧ உண்ணுதல் என்பது வயிற்று பசிக்காக மட்டுமே ஆன செயல் அல்ல. உண்ணுதல் என்பது உணர்வு சார்ந்த ஒரு செயல்.

✧ அன்புக்குரியவர்களுடனும், நட்புக்குரியவர்களுடனும் கூடி உணவு உண்ணுதல் நல்ல உணர்வுகளையும், உறவுகளையும் ஏற்படுத்தும். தனியே உண்ணும்போது தன் உடல், தன் பசி, தன் சுவை பற்றிய சார்தல் உணர்வே மிகுந்த தன்னல மனோபாவத்தை மிகுவிக்கும்.

✧ உணவு உண்ணத் தொடங்கும் முன், இந்த உணவை உண்பதற்கான வாய்ப்பை அளித்த அனைவருக்கும் நன்றியை உணர்ந்து சொல்லி உண்ண வேண்டும்.

✧ உணவு உண்ணும்போது கோபம், பகைமை, வன்முறை, பொறாமை போன்ற எதிர்நிலைச் சிந்தனைகளுடன், உரையாடல் களுடன் உணவு உண்ணுதல் கூடாது. உண்ணுதல் என்பது ஒரு தூய செயல். அது ஓர் அறச்செயல். இயற்கை தந்த, இயற்கை இயங்கிக் கொண்டிருக்கும்.

✧ அழுக்கும், கசகசப்பும் நிறைந்த, தூசு மண்டிய காற்றோட்டமும் இல்லாத இடத்தில் உண்ணும்போதில் மனதில் அமைதியும், இனிமையும் அமையாது.

✧ உண்பவருடைய சிந்தனை அவர்தம் தனி நலனுக்கானதாக மட்டும் அமையாமல், தம்முடைய நலன் மற்றும் பிறருடைய நலம் எல்லாவற்றையும் பற்றிய மனப்பாங்கே அமைய வேண்டும்.

✧ உணவு உண்ணும்போது அவ்வுணவைத் தனக்கு அளித்தவர்களை மகிழ்வோடு, நன்றியோடு வாழ்த்த வேண்டும்.

✧ உணவில் எளிமை, உழைப்பில் கடுமை, ஒழுக்கத்தில் உயர்வு, உத்தமர் இயல்பு.

✧ உடலின் இயக்கத்திற்காகத்தான் உணவு உண்ண வேண்டுமே தவிர - தேவைக்கு அதிகமாக உணவை உண்டு உணவையே உடலாக மாற்றிவிடக் கூடாது.

✧ உணவை மறுத்துப் பட்டினி கிடப்பதும், கிடைக்கிறது, சுவையாக இருக்கிறது என்பதற்காக அளவு பார்க்காமல் மிகுதியாக உண்டு மகிழ்வதும், தன்னுடைய உடல் பற்றிய தெளிவு, தன் உடல் மேன்மைத் தன்மையை அறியாதவர்கள் செய்யும் செயலாகும்.

## 157. உணர்ச்சி

✿ பூ விற்பவர்கள் இரண்டு பேர் அருகருகே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் கோபம் வந்தது என்றால் பூவை எடுத்து

அடித்துக் கொள்வார்கள். கல் உடைப்பவர்கள் இரண்டு பேருக் கிடையில் கோபம் வந்தது என்றால் கல்லை எடுத்து அடித்துக் கொள்வார்கள். அதேபோல நாம் என்னென்ன சேர்த்து வைத்திருக்கிறோமோ அதுதான் அவ்வப்போது வரக்கூடிய உணர்ச்சிகளாகவும் - எண்ணங்களாகவும் வரும்.

- உணர்ச்சியோ உடலில் உயிர் உராயும் விளைவு - உணர்ச்சி சமநிலையானால் உண்மையில் பேரின்பம். உணர்ச்சி மெல்லிதாக உந்த அதே இன்பம் - உணர்ச்சி வல்லுணர்வாக உணர்ந்துவிட அதே துன்பம்.
- உணர்ச்சிவயப்பட்ட நிலையினால் மனிதன் ஒரு செயல் செய்கின்றான் என்றால் - அங்கே ஆராய்ச்சி இருக்காது. அமைதியும் இருக்காது.
- எல்லாம்வல்ல இறைநிலையை மறந்து - 'இந்த உடல் தனித்து இருக்கிறது' என்ற எண்ணம்தான் தன்முனைப்பின் அடையாளம். இந்த எண்ணம் எப்பொழுது ஏற்பட்டது? உணர்ச்சி தோன்றிய அன்றில் இருந்தே.
- உணர்ச்சி தோன்றிய பின்தான் ஐந்து பூதங்களின் இருப்பும் அறியப்பட்டது. அவற்றின் இயக்க விளைவான அழுத்தம் மதுலியனவம் அறியப்பட்டன.

## 158. உணர்வுகள்

- மனிதனுக்கு நான்கு உணர்வுகள்: இன்பம் - துன்பம் - அமைதி - பேரின்பம் ஆகியன உண்டு.
- நாம் அகத்தவம் செய்ய வேண்டும். தவத்தில் சிறந்த சாதனையாளர் களுக்கு உள்ளுணர்வு ஆற்றல் (INTUITIONAL KNOWLEDGE) இயல்பாக உண்டாகும். இதனால் யார்யாரோ எந்த இடத்திலோ சிந்தித்து கடைப்பிடிக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் நமக்கு உள்ளுணர்வாக வரும்.

## 159. ஊக்கம்

- ஆக்கத்துறையில் அறிவைச் செலுத்து ஊக்கமுடன் உழை உயர்வு நிச்சயம். ஊக்கம் உயர்வு தரும்.

## 160. ஊழ்வினை

* ஊழ்வினை என்பது உலக இயல்பு என வேண்டாம்.

## 161. எண்ணம்

- நமது எண்ணமே நாமாகிறோம்.
- உயிராற்றல் சுழற்சியால் ஏற்படும் அலைகள் சீவகாந்தம். இது புலன்கள் மூலம் செலவாகும்போது உணர்தல், கணித்தல் ஆகிய பதிவுகள் புலன்கள் மூளை, உயிர்த்துகள்கள், ஜீவகாந்தம், கருமையம் ஆகியவற்றில் பதிவாகிப் பிரதிபலித்தலும் ஆகிறது. ஒவ்வொரு அனுபோகமும் ஒவ்வொரு அனுபவமாகிறது. இதுவே கால - தூர - பருமன் - வேகம் என்ற கணித்தல் எண்ணுதல் என்று ஆகி எண்ணம் எனப்படுகின்றது.
- எண்ணமே எக்காலத்திற்கும் வாழ்க்கையின் சிற்பி. எண்ணி எண்ணி இனிதே பயக்கும்.
- எண்ணத்தின் வேகம் - இயல்பும் அறிந்தோர்க்கு எண்ணமே இன்பமயம். எண்ணம் அமைதி பெறும்.
- எண்ணத்தின் சக்தி இயல்பு அறிந்திடில் எண்ணம் பிறக்கும் இடமும் விளங்கும்.
- எண்ணத்தை ஆராய்ச்சியிலும் தூய்மையிலும் வைத்திருப்பவன் அறிஞன் - மகான் - ஞானி.
- எண்ணமே செயற்கைக் கருவிகளோடு இயற்கைக் கருவிகளை யெல்லாம் இயக்கும் சக்தி.
- எண்ணம் எழும் இடமோ ஓர் புள்ளியாகும். இயங்கி முடியும் அளவோ அகண்டாகாரம்.
- எண்ணமே இயற்கையதன் சிகரமாகும். இயற்கையே எண்ணத்தில் அடங்கிப்போகும்.
- எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும் எண்ணத்தால் - உறுதியும் - ஒழுங்கும் அமைந்திடும்.
- எண்ணு, சொல், செய், எல்லோர்க்கும் நன்மை தர, எண்ணும்படி செய், செய்யும்படி எண்ணு.
- விண்ணிலும் மண்ணிலும் வியாபகமான நீ எண்ணத்தில் நிறைந்திடு. செய்கையில் சிறந்திடு.

- ✪ உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும். எண்ணும் எண்ணங்கள் எங்கும் பாயும்.
- ✪ எண்ணமே நாடக மன்றம்போல் - எண்ணமே அதில் எண்ணற்ற நடிகர்கள் - எண்ணமே அதைப் பார்ப்போர் ரசிப்போராம் - எண்ணமே அதன் நிர்வாகி உடையவன்.
- ✪ எண்ணத்தை எண்ணத்தால் ஆராய ஆராய இயற்கை ரகசியங்கள் எண்ணத்துள் காட்சியாம். எண்ணத்தின் இவ்வுயர்வை இயற்கையே பேசுதென்றும் இதுவே உள்ளுணர்வென்றும் இயம்புவோர் அனுபவத்தோர்.
- ✪ எண்ணம் தானாக எழுந்து அலையாமல் எண்ணத்தில் எண்ணமாய் இருப்பதே யோகம்.
- ✪ அவரவர் வாழ்வைச் சீரமைக்கும் அற்புத சிற்பி அவரவர் எண்ணமே.
- ✪ தீய எண்ணங்கள் உள்ளத்தைக் கெடுப்பதுபோலவே உடலையும் கெடுக்கின்றன.
- ✪ வேண்டியதற்கு வடிகட்டி வேண்டாததற்கு வழிகாட்டும் எண்ணமே உன் அமைதிக்கு உரம்.
- ✪ எண்ணத்தில் உறுதியும் - ஒழுங்கும் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.
- ✪ எண்ணத்தை நிறுத்த முயலாதே. அது அதிகமாக அலையும். அதை அறிய முயன்றால் அப்போதுதான் அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.
- ✪ எண்ண இயக்கம்தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்குமட்டும் நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டே இருக்கும்.
- ✪ எண்ணத்தைப் பண்படுத்தவும் - பயன்படுத்தும் வழி காண வேண்டும்; அந்தப் பெருநிதியை அழிக்க வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே. அதுதான் மரணம் என்ற இடத்தில் தானாக நின்றுவிடப் போகின்றதே. எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்தது ஏது?
- ✪ எச்செயலும் மூலமெனும் எண்ணத்தாலாம் இன்பதுன்பக் காரணமும் அதுவேயாகும்.
- ✪ வேகம் என்பது மூன்று; மனவேகம், உயிர் வேகம், உடல் வேகம் இந்த மூன்றுக்கும் ஓர் இணக்கம் வேண்டும். அவ்விணக்கம் இல்லை என்றால் நோய் வரும். எண்ணங்களில் குளறுபடிவரும்.

- ✪ மண்ணே பானையாய் இருப்பது போலவே - எண்ணமாய் இருப்பது இயற்கையே ஆகும்.
- ✪ நினைவையடக்க நினைத்தால் நிலையா. நினைவையறிய நினைத்தால் நிலைக்கும்.
- ✪ எண்ணம் எழும்போதே அது ஏன் என்று எண்ணத்தில் ஆராய்ந்தால் சுலபமாக எண்ணத்தின் காரணமும் விளைவும் காணும் எழும் எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்.
- ✪ மழைநீர் இனிமையானதுதான். அது விழுகின்ற நிலத்தைப் பொறுத்தே அதன் தன்மை மாறுபட்டுப் போகின்றது. அதுபோல நல்எண்ணத்தை உடையோர்க்கு எல்லாமே நல்லதாகவே மாறும் இயல்பு கிட்டும்.
- ✪ இயற்கையை அறிந்து ஒத்து எண்ணுபவர் எண்ணம் எப்போதும் எவ்விடத்தும் கவலையாய் மாறாது.
- ✪ உண்மையில் எதிரி உனக்கு உண்டு எனில் உள்ளத்திலெழும் ஒழுங்கற்ற எண்ணமே.
- ✪ எண்ணத்திற்குக் காவலாக எண்ணத்தையே வைக்க வேண்டும். எண்ணத்தை ஆராய எண்ணத்தால்தான் முடியும்.
- ✪ எண்ணம் எழும் இடமோ ஓர் புள்ளியாகும். இயங்கி முடியும் அளவோ அகண்டாகாரம்.
- ✪ எண்ணும்படி செய். செய்யும்படி எண்ணு.
- ✪ எண்ணமே செயற்கைக் கருவிகளோடு இயற்கைக் கருவிகளை யெல்லாம் இயக்கும் சக்தி.
- ✪ விதைத்தவன் உறங்கிவிடுகிறான். விதைகள் உறங்குவதில்லை. எண்ணியவன் உறங்கிவிடுகிறான் எண்ணங்கள் உறங்கு வதில்லை.
- ✪ தீய எண்ணங்களை உள்ளத்தைக் கெடுப்பது போலவே உடலையும் கெடுக்கின்றன.
- ✪ உடலின் இரசாயன மாற்றம் ஏற்படுவதில் நமது எண்ணம் பெரும்பங்கு வகிக்கிறது.
- ✪ தனக்கும், மற்றவர்களுக்கும் எந்த எண்ணம் நன்மை தருமோ, அந்த எண்ணத்தைத்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- ✪ எண்ணுவதையே செய்யுங்கள். அதற்கும்மேல் இன்னொரு படி போங்கள். செய்ய முடிவதையே எண்ணுங்கள்.

- ✪ இன்று மக்களிடையே 'இவரைக் கெடுத்துவிட வேண்டும்' என்று அவரும் - 'அவரைக் கெடுத்துவிட வேண்டும்' என்று இவரும் எண்ணுகின்ற விதமாகத் தீயஎண்ணம் மலிவாகக் காணப்படுகிறது.
- ✪ உயிர்ச்சக்தியின் இயக்க விளைவுதான் எண்ணம். அது அறியும் திறனுடையதால் அறிவென்றும் கூறப்படுகிறது.
- ✪ கெட்டியான இறைநிலையோடு ஒட்டி இருக்கும்போது எந்த எண்ணமும் நம்மைத் தூக்கிப் போகாது.

## 162. எண்ண அலைகள்

- ❁ ஒருவர் துயரத்தாலும் துன்பத்தாலும் வாடும்பொழுது நம் எண்ணஅலைகளின் மூலம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கலாம்.

## 163. எதிர்பார்த்தல்

- ☆ பிறரிடமிருந்தும் அல்லது எவரிடமிருந்தும் எதையும் எதிர்பாராதே! எதிர்பார்த்தல் பெரும்பாலும் ஏமாற்றத்தில்தான் முடிகின்றது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்துவிடும்.
- ☆ மற்றவரை எதிர்பார்த்தல் கையேந்தல் வேண்டாம். மாநிதியாம் இறைவனை நம் மனத்தடியில் தேர்வோம்.
- ☆ இன்றைய தினத்திலிருந்து ஒரு சிறிய பயிற்சியைச் செய்து பாருங்கள். 'எதையுமே யாரிடமிருந்தும் எதிர்பார்க்க மாட்டேன்' என்று - 'அது எப்படி முடியும்? குழந்தைகள் படிப்பதை எதிர் பார்க்காமல் இருக்க முடியுமா? மனைவியிடம் கணவன் எதையுமே எதிர்பார்க்காமல் இருக்க முடியுமா?' என்று எண்ணுவீர்கள்.
- ☆ உள்ளுணர்வு கொண்டுதான் சிக்கலெதனையும் தீர்க்க முடியுமே தவிர - புறத்திலிருந்து எந்த உதவியையும் எதிர்பார்ப்பதற் கில்லை. அப்படி எதிர்பார்த்தால் சிக்கல் இறுகி - புதுச் சிக்கலும் உண்டாகும்.
- ☆ எதிர்பார்த்தல் எப்போதும் எவரிடமும் ஏமாற்றமே விளைவிக்கும்.
- ☆ இன்பம் வேண்டுவோர் ஏமாற்றத்தை தவிர்க்க வேண்டும். ஏமாற்றம் வேண்டாதவர் எதிர்பார்த்தலை தவிர்க்க வேண்டும்.

- எதிர்பார்ப்பது எல்லாம் ஏமாற்றத்தில் முடிகின்ற தோடல்லாமல், எதிர்பார்க்கும்பொழுது பிச்சைக்காரர்களாக அல்லவா நீங்கள் மாறிவிடுகின்றீர்கள்!

## 164. ஐம்புலன்

- ஒன்றி புள்ளியாய் ஒடுங்கி நீ இரு. அன்றி விரிந்திடில் ஆராய்ச்சியோடிரு. நின்றிடு அகண்டாகார நிலையினில் - வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே.

## 165. ஐந்து ஒழுக்கப் பண்பாடு

- நான் என் உடல் உழைப்பாலும் - அறிவின் ஆற்றலாலும் வாழ்வை நடத்துவேன்.
- நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதிற்கும் துன்பம் தரமாட்டேன்.
- பிற உ யிர்களை உணவுக்காகக் கொல்ல மாட்டேன்.
- பிறருடைய வாழும் சுதந்திரத்தையும், பொருளையும் பறிக்க மாட்டேன்.
- துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.

## 166. ஐயுணர்வு

- வேரறுந்த மரத்தினைப் போன்றவர்கள் ஐயுணர்வில் மயங்கியவர்கள்.

## 167. ஒழுக்கம்

- தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ உடலுக்கோ உயிர் உணர்ச்சிக்கோ துன்பம் விளைவிக்காத எண்ணம்தான் ஒழுக்கம் என்பதாகும்.
- எண்ணம், சொல், செயலில் எழும் விளைவறிந்து, உண்மையில் இன்பமே உண்டெனில் ஒழுக்கமாம்.

- பழக்கத்தால் மனிதன் உயரவும் முடியும், தாழவும் முடியும். வாழ்வதற்கு உணர்வளிக்கும் வழக்கங்களே ஒழுக்கம் எனப்படும்.
- ஒழுக்கத்தை ஒருவர் உயிரைப்போல் ஓம்பி வாழ்ந்தால் பிறர் கருத்துக்கும் தேவைக்கும் மதிப்புக் கொடுத்துத் தன் தேவையும் கருத்தையும் நிறைவு செய்துகொள்ளும் பெருந்தகைமை இயல்பாகும்.
- ஒழுக்கமும் அறமும் வேறுவேறாக உணர்த்தப்படினும் ஒன்றில் மற்றடங்கும் ஒழுக்கம் அறத்தின் முதல் உறுப்பாகும்.
- ஒழுக்கம் ஒற்றுமை - ஆண் பெண் நட்பில் ஒழுக்கம் அமைந்து அன்பாய் வாழ்வோம்.
- பழக்கத்தால் மனிதன் உயரவும் முடியும். தாழவும் முடியும். வாழ்வதற்கு உயர்வளிக்கும் பழக்கங்களே ஒழுக்கம் எனப்படும்.
- ஒழுக்கமற்ற ஆண் - பெண் நட்பு - ஒளிரும் காந்த விளக்கின் நடுவில் மின்கம்பிகள் ஒன்றியதனால் ஏற்படும் விளைவை ஒக்கும்.
- ஆண் பெண் நட்பில் ஒழுக்கம் அமைத்து அன்பாய் வாழ்வோம்.
- துன்பம் தவிர்க்க வேண்டும் என்ற அளவுக்கு விழிப்போடு ஆராய்ச்சி யோடு - செய்யும் பண்பு இருக்கிறது அல்லவா? இதுதான் ஒழுக்கம். இந்தச் சூத்திரத்தை முறைப்படுத்தி வைத்துக் கொண்டோமானால், எந்த இடத்திலும், எந்தக் காலத்திற்கும் - ஒருவர் ஆயுள் முழுவதும் இது உதவியாக இருக்கும்.
- பிறருக்குத் துன்பம் இல்லாமல் செயலாற்றுவதே ஒழுக்கம்.
- ஒரு செயலினுடைய விளைவு தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, உடல் உணர்ச்சிக்கோ துன்பம் தருமேயானால் அதனைத் தவிர்க்க வேண்டும். இந்த ஒழுக்கத்தை எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கிறோமோ - அந்த அளவுக்கு வாழ்வு இனிமையாக அமையும்.
- துன்பம் விளையாது காக்கின்ற வாழ்க்கைத்திறனே, செயல் திறமையே ஒழுக்கம் எனப்படும்.
- ஒரு தாளைக் கொடுத்தேன். அதை அப்படியே இரண்டாகக் கிழிக்கச் சொன்னேன். தாளில் கையை எங்கேயோ வைத்திருந்தார். அப்படிப்பட்ட நிலையில், அவர் தாளைக் கிழித்தார். தாள் கோணல்மாணலாகக் கிழிந்தது. மீண்டும் இன்னொரு தாளைக்

கொடுத்தேன். இந்த தாளை இரண்டாக மடியுங்கள் என்றேன். மடிப்பின் வழியே கிழிக்கச் சொன்னேன். தாள் சரியாகக் கிழிந்தது. ஒழுக்கம் என்பது இதுதான் என்று எடுத்துக் காட்டினேன்.

❖ 'நீங்கள் வந்த வழியில் சிகப்பு விளக்கைப் பார்த்தீர்களா? பார்த்த வுடன் என்ன செய்தீர்கள்?' எனக் கேட்டேன். அதற்கு, 'அவர் காரை நிறுத்திவிட்டேன்' என்றார். 'ஏன் நிறுத்திவிட்டீர்கள்? உங்கள் கார்தான் வேகமாகப் போகிறதல்லவா? நிறுத்தாமல் போகலாம் அல்லவா?' என்று கேட்டேன். 'ஐயோ! விபத்து ஏற்படுமே!' என்றார் அவர். இதைப் போலவே சமுதாயம் போட்டுள்ள சட்டத்தின்படி வாழ்வதுதான் ஒழுக்கம்.

❖ ஒழுக்கத்தை எந்த அளவுக்கு கடைப்பிடிக்கிறோமோ - அந்த அளவுக்குச் சிறப்பாக வாழ்வு அமையும் துன்பம் இல்லாமல் அமைதியாகவும் - இன்பமாகவும் வாழ்க்கை இருக்கும்.

## 168. ஒத்துப்போகாத சட்டம்

* லா என்றால் சட்டம். பஞ்சாயத்து சட்டம் இருக்கிறது. முனிசிபாலிடி சட்டம் இருக்கிறது. மாநில அரசாங்கச் சட்டம் இருக்கிறது. மத்திய அரசாங்கச் சட்டம் இருக்கிறது. ஒன்றுக் கொன்று எல்லாம் ஒத்துப்போகிறது. எல்லா லாவும் ஒன்றுக் கொன்று ஒத்தாசையாக இருக்கிறது. எங்கேயும் முரணாக இருக்காது. முரணாக இருந்தால் திருத்தி விடுவார்கள். ஆனால் - மதர் இன்லா - டாட்டர் இன் லா இரண்டும் எப்போதும் ஒத்துப்போவதே இல்லை.

## 169. ஒளி

✪ ஒளி ஒன்றுதான், அது ஆற்றிய செயல்களும் விளைவுகளும் பலப்பல.

✪ ஒலியும் - ஒளியும் உண்மையிலேயே ஓடுகின்றனவா? அல்லது அவை எங்காகிலும் நிலைத்து நிற்கின்றனவா? இரண்டும் இல்லை.

✪ காந்த ஆற்றலின் மூன்றாவது நிலை மாற்றத்தில் ஒளியின் ஆதிக்கம் அதிகம். அங்கு இருக்கும் அழுத்தமும் - அடங்கி நிற்கின்றன.

## 170. ஒலி

- ஒலிக்கெல்லாம் மூலம் ஓங்காரம். காணும் ஒளிக்கெல்லாம் மூலம் இருள்.
- ஒலி ஏற்படும்பொழுது அங்கு ஒலியோடு - ஒலிக்கு உட்பொருளாக அழுத்தமும் இருக்கும். ஆனால் ஒலியின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதால் அபத்தம் அங்கு உணரப் பெறுவது இல்லை.

## 171. ஓய்வு

- அறிவிற்கு ஓய்வளி - அதுவே உன் ஓய்வாகும். அறிவிற்கு ஓய்வினால் ஆற்றல் பெருகி விடும். அறிவிற்கு அடித்தளமே அருள்நிலை வெளி தெய்வம் - அறிவிற்கு வெளி நினைவு ஒன்றேதான் முழு ஓய்வு.

## 172. ஓம்

- ஓம் என்பது இறைநிலையைக் குறிக்கும் ஒரு சங்கேத நாம கரணம். இது எந்த மதத்தையும் சார்ந்ததோ அல்லது சடங்கு முறையோ அன்று.
- மூலாதாரத்தில் எழுந்து - துரியத்தில் முடியும் முழு உயிர்எழுத்தாக வருவது 'ஓ' என்ற சப்தம்தான். 'ஓ' என்ற சப்தத்துடன் 'ம' என்ற மகர ஒற்றை இணைத்த 'ஓம்' என்ற இறைநிலைக்குப் புனிதப் பெயர் வழங்கினார்கள்.
- ஓம் என்பது ஒரு சங்கேதக் குறிப்பு ஆகும். ஆகவே ஓம் என்ற ஓசைக்கோ - சொல்லிற்கோ எந்த தனிச் சிறப்போ - மதிப்போ கிடையாது. புத்தகக் கருத்தை அறிந்த பின் - புத்தகமற்றவர் களுக்குத் தேவையாகும் என்று அதைப் பத்திரப்படுத்தி வருகிறோம். அதுபோல்தான் ஓம் என்ற சொல்லும் நிலைத்து வருகிறது. தொடர்ந்து வருகிறது.

## 173. ஓங்காரம்

- மகர மெய்யுணர்த்துவது 'மோனம்' ஆகும். மற்றுமொரு உயிரெழுத்தாம் 'ஓ' முன்வைத்து - மகரமெய் பொலித்திடுதல் மொழி ஒழுக்கம்; மவுனத்தையதனால் 'ஓங்காரம்' என்போம்.

## 174. ஓம் சாந்தி சாந்தி சாந்தி

- தனக்குத்தானே முரண்படாமல் இருப்பது தன்னிடமிருந்து அமைதி - இது முதல் சாந்தி.
- மனைவி, மக்கள், சுற்றத்தார் ஆகியோருடன் முரண்படாமல் இருப்பது, பிறரிடமிருந்து அமைதி. இதுவே இரண்டாவது சாந்தி.
- சுற்றுச்சூழல், இயற்கையுடன் முரண்படாமல் இருப்பது, இயற்கைச் சூழலிலிருந்து அமைதி. இதுதான் மூன்றாவது சாந்தி.

## 175. ஓஸஸ் மூச்சு

- நுரம்பூக்கப் பயிற்சியில் வித்திலிருந்து பிரிந்த ஓஸைஸ் வித்து உற்பத்தி ஸ்தானமாகிய மூளைக்குச் செலுத்துவதே, காயகல்பப் பயிற்சியின் இரண்டாவது பயிற்சியான ஓஸஸ் மூச்சு என்னும் பயிற்சியாகும். நோய்கள் விலகவும் - நீங்கவும் மற்றும் ஆயுள் நீளவும், உயிரானது உடலில் கவர்ந்துபோகவும் ஜீவசமாதி சித்திக்கவும் இந்தப் பயிற்சி உதவுகிறது.

## 176. கடமை

- கடமை: கடன் - மை சமுதாயத்திற்கு திருப்பச் செலுத்த வேண்டிய கடன்.
- ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்கும் இந்த உடலும் அறிவும் சமுதாயத்திலிருந்து அவன் பெற்றவையாகும். மேலும் அவ்வப்போது அவன் அனுபவிக்கும் பொருட்களும் சமுதாய கூட்டுறவில் பெற்றதன்றி தனி ஒருவன் காரணமாக முடியாது.
- உடல் - குடும்பம் - சுற்றம் - ஊர் - உலகோர்க்காற்றும் கடமை - முறையே முக்கியம் கெடாமலும் பார் ஒன்றினால் மற்று.
- நாம் வாங்கிய கடனைத் திரும்பக் கொடுப்பது கடமை.
- உயிர்களுக்கு கடமை செய்வதற்கு அறம் வேண்டும்.
- காலம் தாழ்த்தாமல் கடமையைச் செய். இல்லையேல் காலம் உன்னைத் தாழ்த்திவிடும்.
- முற்கால வாழ்க்கையில் கண்ட அனுபவம் இக்காலத் தேவை நிகழ்ச்சிகள் சூழ்நிலை - பிற்கால விளைவுகள் யூகித்துக் கடமையை செய். முக்காலம் கண்ட முனிவன் நீயே ஆங்கே.

* உடலாற்றலையும் அறிவாற்றலையும் அந்தந்த நேரத்திற்கும் சூழ்நிலைக்கு ஏற்றபடி குறைவில்லாமல் சமுதாய நலத்திற்கு அர்ப்பணமாகச் செலவிடல்தான் கடமை.
* கடமையில் சிறந்தவன் கடவுளை நாடுவான். கடவுளை உணர்ந்தவன் கடமையில் வாழ்வான்.
* முதியவர்களைக் காப்பது கடன்பட்டதைத் தீர்த்தல் போன்று ஆகும். குழந்தைகளைக் காப்பது எதிர்காலச் சேமிப்பு போன்று அமைகிறது.
* உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும் செய்வதும் நித்திய கடன்.
* ஒருவர் உணர்ச்சிகளை மற்றவர் கூர்ந்துணர்ந்து - ஒருவருக் கொருவர் ஒத்தும் உதவியும் வாழ வேண்டியதே கடமையாகும்.

## 177. கடவுள்

✪ கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீ! கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய் ஆங்கே.

✪ இறைவனை உணர வைராக்கியம் வேண்டும்.

✪ இறைவனைத் தேட வேண்டாம். ஏனெனில் அவன் எங்கும் இருக்கிறான்.

✪ செயலின் விளைவே தெய்வ ஒழுங்கு.

✪ கடவுளுக்கு நாம் செய்ய வேண்டிய சேவை என்ன? என சிந்தித்துப் பார்ப்போம். 'கடவுள்' என்னும் தத்துவம் எங்கும் நிறைந்த ஓர் பேராற்றல். அதனுடைய தன்மைகளில் இன்னொன்று அன்பு. அந்த அன்பே உங்கள் எண்ணம், சொல், செயல்களிலும் ஊடுருவி நிறைந்திருந்தால் அதுதான் நீங்கள் இறைவனுக்காக ஆற்றக்கூடிய சேவை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள். திருப்திப்படுத்த இதைவிடச் சிறந்த வேறொரு வழி இல்லை. அதற்கும் மேல் அவனுக்கு எதுவும் வேண்டியதுமில்லை.

✪ கடவுள் + கட = உள் ஐம்புலன்களைக் கடந்து உள்நோக்கி அறிவை அறிவது.

✪ கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் அதன் அறிவாகக் குடிகொண்டு இருக்கிறார்.

- ✪ **கடவுள் ஒன்றுதான் என்பது நிச்சயம். இரண்டு கடவுள் இருந்தால் நீங்கள் தேடிப் போக வேண்டாம். உங்கள் வீட்டிற்கு ஓட்டு கேட்க வருவார்கள்.**
- ✪ எல்லா இயக்கத்திலும் ஊடுருவி இயங்கிக் கொண்டு இருக்கிறது ஓர் ஆற்றல். அதைத்தான் பெரியவர்கள் அந்தக் காலத்தில் ‘கடவுள்’ என்று சொன்னார்கள்.
- ✪ ஒன்றை ஒன்பதாகக் திரித்து, எப்படி எப்படியோ எழுதி, இன்றைக்கு கடவுளை எவ்வளவு சிறுமையாக ஆக்கியிருக் கிறார்கள்!
- ✪ ஆகர்ஸண சக்திதான், தெய்வம் என்றும், கடவுள் என்றும், பல பெயரால் வழங்கப் பெறுகின்றது.
- ✪ இன்று கடவுளை யார் எதற்காகத் தேடுகிறார்கள்? தனக்கு எழக்கூடிய ஆசைகளை அப்படியப்படியே முடித்துக் கொள்ளலாம் என்பதற்காகத்தான்.
- ✪ உண்மை நிலைக்குப் போனால் அங்கே இருக்கிறதெல்லாம் சிவம்தான், பேரறிவுதான். அதனால்தான், நான் அடிக்கடி சில இடங்களில் எழுதியிருக்கிறேன்; ‘மனத்தின் மறுமுனை கடவுள்’ என்று.
- ✪ இதுதான் கடவுள், நீங்கள் செல்வதெல்லாம் கடவுள் இல்லை என்று பழமைவாதிகளைப் பார்த்து சாக்ரட்டீஸ் சொன்னார்.
- ✪ நமது ஆறாவது அறிவு வேலை செய்ய வேண்டும். ‘நமக்குத் தெரியாமலே நமக்குள்ளாக ஒரு சக்தி, பேராற்றல் பெற்ற தெய்வீக சக்தி (DIVINE POWER) ஊடுருவி இருந்துகொண்டு ஒவ்வொரு செயலையும் இயக்கத்தையும் நடத்துகிறது’ என்பதை யூகித்துணர முடிகிறதல்லவா? அதுதான் இறைவன் - கடவுள்.

## 178. கடவுள் எங்கே?

- ❀ கடவுள் எல்லாமாக இருக்கிறார். நானுமாக இருக்கிறார். எனவே எனக்கும் கடவுளுக்கும் ஒரு சங்கிலிப் பிணைப்பு இருக்கிறது. அதன் ஒரு முனை நான், இன்னொரு முனை அவர் என்னும்போது, இந்தச் சங்கிலியைப் போட்டுவிட்டு அவரை எங்கே போய்த் தேடினால் கிடைப்பார்?
- ❀ உண்ணும் உணவு ரசமாகி, இரத்தமாகி, தசையாகி, கொழுப்பாகி, எலும்பாகி, மூளையாகி, விந்தாகி, மனித உடல் இயக்கங்களை

யெல்லாம் நடத்துகிறதல்லவா. இவற்றை நீங்களோ உங்களுக்காக வேறு ஒருவரோ செய்யாது. கடவுள்தானே செய்கின்றார்.

- மனிதன் எந்த செயல் செய்தாலும் ஒரு விளைவு தக்கபடி உண்டாகிறது அல்லவா? அது இன்பத்திலோ - அல்லது துன்பத்திலேயோ தானே முடிகிறது! ஒவ்வொரு அணுவிலும் பொருளிலும் உயிரிலும் கடவுள் நிறைந்து அறிவாக இயங்கிக் கொண்டிருப்பதால் செயலுக்கு ஏற்றபடி இறைவன் விளைவைத் தருகிறான். துன்பத்துக்கு பயந்து தவறான செயல்களைச் செய்யக்கூடாது. ஏன் இறைநிலையானது எச்சரிக்கை செய்வதுபோல துன்பம் அளிக்கும். இந்த உண்மை உணர்விலேதான் மனிதன் கடவுளுக்கு பயந்து நடக்க வேண்டும்.

## 179. கவலை

- ஆசை தடைபடுத்தும் பொருள்மீது, நபர்மீது ஏற்படும் பொருத்தமில்லா உணர்ச்சி சினம். சினம் செல்லாதவிடத்து ஏற்படும் ஓர் கற்பனை வலையாகிய எண்ணமே கவலை.
- கவலை வரக் காரணம் என்ன? 1. உடலில் நோய், (செயல் விளைவு;) 2. உள்ளத்திலே களங்கம் - (அச்சம் - திறமையின்மை;) 3. வாழ்க்கையில் சிக்கல் - (அறிவுக் குறைபாடு. )
- கவலைகளை நான்கு வகையாகப் பிரித்து ஒழித்துவிடலாம். 1. அனுபவித்தே தீர்க்க வேண்டியவை (திடீர் மரணம் - நோய் - புயல் - வெள்ளம்); 2. தள்ளிப்போட வேண்டியவை (மகன் வேலை - மகள் திருமணம்); 3. அலட்சியப்படுத்த வேண்டியவை (பிறருடைய பொறாமை - வீட்டுப் பெரியவர்களின் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள்); 4. உடனடியாகத் தீர்க்க வேண்டியவை (அறுவைசிகிச்சை - கடன் - பாகப்பிரிவினை).
- கவலைகளைப் போக்க இறைநீதியாகிய செயல்விளைவுத் தத்துவத்தை அறிதல், சிந்தித்தல், உணர்தல் அவசியம்.
- கவலையினால் மனஅலைச்சுழல் வேகம் அதிகரிப்பதால் உயிராற்றல் அதிகம் செலவாகிறது. சிக்கல்கள் வாழ்வின் இயல்பே என உணர்ந்து தேவைகளைக் குறைத்து, ஏவல், எதிர்பார்த்தல் தவிர்த்தால் கவலையின்றி வாழலாம்.
- கவலை, சினம் எனும் இரண்டும் மனிதர் வாழ்வைச் சீரழிக்கும் நச்சாகும். உணர்ந்துகொள்வீர்.

☆ நினைப்புக்கும் - நட்புக்கும் இடையே வித்தியாசம் வரும் போது இருக்கும் மனநிலையை கவலை என்கிறோம்.

☆ கோபம், வஞ்சம், பொறாமை, வெறுப்புணர்ச்சி, பேராசை, ஒழுக்கம் மீறிய காமநோக்கம், தற்பெருமை, அவசியமற்ற பயம், அவமதிப்பு, அதிகார போதை இந்தப் பத்தும் கவலையின் தொகுப்பாகும்.

☆ மனோசக்தி - உயிர்ச்சக்தி இவைகளை எல்லாம் கணத்தில் வெளியேற்றக்கூடியது கவலை.

☆ வறுமை, நோய், கடன், குடும்பத்தவர்களோடு கருத்து வேறுபாடு, பேராசை, பொறாமை, சுற்றத்தார் மரணம், தனது அல்லது சுற்றத்தாரின் மரணம் பற்றிய அச்சம், பொருள், புகழ், செல்வாக்கு இவற்றின் இழப்பு இவற்றால் கவலைப்படுவோர் எண்ணிறந்தோர்.

☆ வறுமையையும், கடனையும் முயற்சியாலும் சிக்கனத்தாலும் தான் தீர்க்க முடியும்.

☆ நோயைச் செயலொழுக்கம், மருந்துண்ணல் என்பனவற்றால் போக்க முடியும்.

☆ கருத்துவேறுபாடுகளைக் காரணமறிந்து விட்டுக்கொடுத்தும் - விளக்கம் கூறி மனநிறைவு ஏற்படுத்தியும்தான் தீர்க்க வேண்டும்.

☆ பேராசை - பொறாமை இவை விளைவறிந்து நிறை மனம் பெற்றுத்தான் தீர்க்கப்பட வேண்டும்.

☆ நாம் தவறாகப் புரிந்துகொண்டு எடுக்கும் தவறான முடிவுகளே கவலைகளுக்குக் காரணம்.

☆ பொருள் - புகழ் - செல்வாக்கு இவற்றின் இழப்பை முயற்சி யாலும் ஒழுக்கத்தாலும் சமுதாயத் தொண்டாலும்தான் ஈடுகட்டிக் கொள்ள வேண்டும்.

☆ செய்ய வேண்டிய கடமைகளை மறந்து கவலை உடனே தானாகத் தீர்ந்துவிட வேண்டுமென்று நினைப்பது அறியாமையே.

☆ கவலை ஒழித்தல் பழகுங்கள். அச்சமின்மை - மெய்யுணர்வு உடல்நலம் - மனநிறைவு இவையுண்டாகும்.

☆ அறிவாற்றல் கவலையினால் வீணாய்ப்போகும். அதையடுத்து உடல்நலமும் குன்றிப்போகும்.

☆ இயற்கையை ஒட்டிய எண்ணத்தை விட்டு கற்பனையான எண்ணத்தை ஒட்டிச் செல்லும்போது கவலை ஏற்படுகிறது.

- ☆ உள்ளத்தின் களங்கமாகிய நோய்களும், உயிரின் களங்கமாக விளங்கும் வாழ்க்கைச் சிக்கல்களும் கவலையாக மாறுகிறது.
- ☆ கவலையினை முயற்சி, சிந்தனை இவற்றால் கடமையினை தேர்ந்தாற்றி வெற்றி கொள்வோம்.
- ☆ கவலை என்பது என்ன? எவ்வாறு அதை வளப்படுத்தி - போக்கிக் கொள்வது? என்ற முறையை எல்லாம் வகுத்துக் கொடுக்கின்ற பயிற்சியே கவலை ஒழித்தல் பயிற்சியாகும். இதனால் மனம் மிகவும் இலேசாகி விடுகின்றது. ஆயிரம் ஆயிரம் ஆசைகளை உருவாக்க அவற்றையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டு உள்பாரம் கொண்டிருந்த நிலை இப்பயிற்சியினால் மாறி, அந்தப் பளு இல்லாததினாலே மனம் அமைதியாக இருக்கும்.
- ☆ சிக்கல்களைச் சந்திக்க போதிய பலமில்லாத மனநிலையைக் கவலை என்கிறோம்.
- ☆ கவலையில்லாது சுதந்திரமாக இருக்கக்கூடிய மனம்தான் மேல்நிலையைப் பற்றிச் சிந்திக்க முடியும். இறைநிலையை அடையவும் முடியும்.
- ☆ எல்லோரும் தப்புக் கணக்கிட்டுக் கொண்டு இருக்கின்றோம். எல்லோருக்கும் பல கவலைகள் மனதில் இருப்பாக இருக் கின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு ஒரு பயிற்சி முறை வேண்டும்.
- ☆ இந்தக் கவலையைப் பற்றி ஆராய்ச்சி செய்து - 'கவலை அவசியம்தானா?' என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு பாருங்களேன். கவலை என்பது கற்பனையாக மனிதன் பின்னிக் கொள்ளும் ஒரு வலைதான் என்ற உண்மை விளங்கிப்போகும்.
- ☆ கவலைப்பட்டுக் கவலைப்பட்டுப் பழக்கத்தால் மனதுக்கு அது ஒரு நோயாகவே ஆகிவிடுகின்றது. இதனால் மனித மனத்துக்கு எப்பொழுதும் ஏதாகிலும் ஒரு கவலை தேவையாகவே ஆகிவிடுகிறது. இதை ஒழித்தாக வேண்டும்.
- ☆ கவலையே இல்லாமல் வாழவேண்டும் என்று நீங்கள் நினைக் கிறீர்கள். அந்த நினைப்பிற்குரிய செயலும் இருந்தாலன்றி இதில் வெற்றி கிட்டாது. செய்வதையே செய்து கொண்டிருந்தால் வந்து கொண்டிருந்ததே வந்துகொண்டுதான் இருக்கும்.
- ☆ தப்புக் கணக்கிட்டுத் தானொன்றெதிர் பார்த்தால் ஒப்புமோ இயற்கை விதி. ஒழுங்கமைப்புக்கேற்றபடி - அப்போதைக்கப் போதே அளிக்கும் சரி விளைவு. எப்போதும் கவலையுற்று இடர்ப்படுவார் இதை உணரார்.

## 180. கடன்

✧ கடன் புண் போன்றது. வட்டி புண் சீழ்பிடித்தல் போன்றது.

✧ பெரும்பாலான மக்கள் சிறு அளவு செல்வத்தையும், பெரிய அளவில் கடனையும் ஆதாரமாகக் கொண்டு செல்வர்களைப் போல் படாடோபமாக வாழ்ந்து வருகிறார்கள்.

✧ கடன் மனத்தை உறுத்தும் முள் போன்றது.

✧ வாங்கும் கடனும் - தேங்கும் பணமும் வளர வளர வாழ்வைக் கெடுக்கும்.

## 181. கடையன் – கயவன்

❁ தவறு என்று அறிந்துகொள்ள முடியாமல் தவறுகளைப் புரிந்துவிடுவான் அப்பாவி. தவறு எனத் தெரிந்தும் செய்து கொண்டிருப்பான் கடையன். தான்புரியும் தவறுகள் நீதி என நிரூபிக்கும் வகையில் வாயாடித்தனமாய் பேசிப் பிறரையும் தவறு செய்யத் தூண்டுவான் கயவன்.

## 182. கட்சி

❂ எந்தக் கட்சியானாலும் பொதுவான சமுதாய மக்களுடைய எண்ணிக்கையை ஒத்துப் பார்த்தால் அது சிறுபான்மை நிறுவனமாகவே இருக்கும். இதனால் சிறுபான்மையோர் பெரும்பாலான மக்களை ஆளக்கூடிய அதிகாரம் பெறுகிறார்கள்.

## 183. கடைவீதி

❖ அந்தக் காலத்திலெல்லாம் ஒரு கிராமத்திலே மற்ற எல்லா வீதிகளையும் தாண்டி, கடைசியிலே ஒரு வீதி வைப்பார்களாம். அவரவர்களுக்கும் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளவும், உபரியான பொருட்களைக் கொண்டுபோய் மாற்றிக் கொள்வதற்காகவும் ஒவ்வொரு கிராமத்திலேயும் அதன் கடையிலே ஒரு வீதி உண்டு. அது கடைசியிலே இருப் பதினாலே - கடைசி என்பதைக் கடை என்றும் சொல்லலா மாகையால், கடைசி வீதியைக் கடைவீதி என்றனர்.

## 184. கர்மங்கள்

* ஒருவரின் 3வது வயது முதல் இன்றுவரை ஒருவர் செய்த செயல்களும் விளைவுகளும் இன்பதுன்ப அனுபவங்களும் கருமையத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இத்தகைய பதிவு களும் தன்மாற்ற விளைவுகளும் கருமையத்தில் உள்ளன. இவை தன்வினை பதிவுகள் அல்லது பிராரப்த கர்மம் எனப்படுகிறது.
* சிற்றுயிரிலிருந்து ஒவ்வொரு உடலும் எடுத்துக்கொண்டே வரும் போது ஒவ்வொரு உடலிலேயும் என்னென்ன அனுபவங்கள் நடந்ததோ அந்த அனுபவங்கள் எல்லாம் அந்த காந்த ஆற்றலில் திணிவு பெற்றிருக்கிறது. அதேபோல மனிதன் வரையில் வந்த எல்லா ஆற்றல்களும் கரு மையத்தில் இருப்பாக இருக்கும். அவ்வாறு தனது பெற்றோர் வரைக்கும் வந்த பதிவுகள் சஞ்சிதகர்மம் என்றழைக்கப்படுகிறது.
* முன்வினை பதிவுகள் - தன்வினை பதிவுகள் ஆகிய இரண்டு பதிவுகளே ஒருவரது அறிவாட்சித் தரம் ஆகும். இந்தப் பதிவு களுக்கேற்ப ஒரு மனிதன் உலகத்தோடு தொடர்பு கொள்ளும் போது விருப்பம் செயல் உருவாகின்றது. இதுவே ஆகாம்ய கர்மம்.

## 185. கர்மயோகம்

- உடலுக்கும் பொருளுக்கும் தொடர்புணர்ந்து உழைத்துண்டு உதவுதலே கர்மயோகம்.
- நன்றியுணர்வும் கடமையுணர்வும் ஒன்றிணைத்து - நலம் விளைக்கும் செயல்களையே விளைவறிந்து - ஒன்று மதம் இது ‘கர்மயோகம்’ எனும் வாழ்வாம் - உயிர்கட்கு உறுதுணையாம் உலகுக்கு அமைதி.
- செய் தொழில்களில் இறைநீதி உணர்ந்து பிணக்கின்றி அதன் வழியே செயல்படுதல்தான் கர்மயோகம்.
- தனக்கு எல்லா வசதிகளையும் அளித்து காத்து வருகின்ற சமுதாயத்திற்கு தனது கடனையாற்ற அறிவாலோ உடலாலோ உழைப்பதுதான் கர்மயோகம்.
- தாய் - தந்தை - குரு - அரசு - தெய்வம் ஐங்குறவர் வழிபாடு.

- இறைநிலை எங்கும் நிறைந்தது என உணர்தல்
- எண்ணம் - சொல் - செயலால் துன்பம் விளைவிக்காமை.
- உணவு - உழைப்பு - ஓய்வு - உடலுறவு - எண்ணம் அளவுமுறை பேணல்.
- ஒழுக்கம் - கடமை - ஈகை அறநெறி வாழ்க்கை வாழ்தல்.
- தான் - குடும்பம் - சுற்றம் - ஊர் - உலகு - ஐவகை - கடமை ஒன்றினால் ஒன்று கெடாமல் செய்தல்.
- எல்லாக் குற்றங்களுக்கும் தனிமனிதன் மட்டும் காரணமில்லை. கருத்தொடரால் விரிந்த சமுதாயமும் பல குற்றங்களுக்குக் காரணம்.
- பெண் பெருமை பேணல்.
- செய்தொழில்களில் இறைநீதி உணர்ந்து பிணக்கின்ற அதன் வழியே செயல்படுதல்தான் கர்மயோகம்.
- வருமானத்தில் *100*க்கு *1* சதவீதம் ஈகையாக்கல்.
- ஆன்மா தூய்மை பெற, மேன்மை பெற அகத்தவமாற்றுதல்.

## 186. கர்ப்பகாலம்

- கர்ப்பகாலத்தில், இரண்டு மாதத்திலிருந்து கடைசி வரையில் அஸ்வினி முத்திரை (Spinter Experience) சில (Posture) இல் இருந்து போட்டுக்கொண்டே வந்தால் - குழந்தை நல்ல முறையில் வளர்கின்றது. பிரசவம் எளிய முறையில் ஆகின்றது. பிரசவம் ஆனபிறகு தாயும், சேயும் சீக்கிரமாக உடல்நலத்தோடு இருப்பதற்கு முடிகின்றது.
- கருவுற்ற காலத்தில் ஒரு பெண்ணுடைய மனம் சோர்வு அடையுமேயானால் - பிணக்கு அடையுமேயானால் வருத்தம் அடையச் செய்வோமேயானால் - ஒவ்வொரு வருத்தமும் அவர்களின் குழந்தைகளை மனத்தாலே பாதிக்கும்.
- ‘என் வயிற்றில் பிறக்கக்கூடிய குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும். நான் அமைதியாகவும் - சினம் முதலியவையெல்லாம் தவிர்த்து நல்லபடியாக இருந்தால்தான், என் குழந்தையும் நல்ல குணத்துடன் இருக்கும்’ என்று சங்கற்பம் செய்தல் நலம்.

- கருத்தரித்த தாய்மார்கள் 3-வது மாதம் தொடங்கி வலது கரத்தை வயிற்றின் மீது வைத்து உருவாகும் குழந்தையை நாள்தோறும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி வந்தால் அக்குழந்தை கருவில் திருவுடையதாக விளங்கும்.

## 187. கருணை

- இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.
- தெய்வத்திற்கு கருணை என்பதேது. தெய்வநிலையறிந்தோர்க்கே கருணையுண்டு. தெய்வநிலை சுகதுக்கம் கடந்ததன்றோ? தெய்வநிலை அறிவறிந்தோர் உணர்ந்ததாகும்.

## 188. கரு உருக்காலம்

- இன்று பார்க்கிறோம் உலகம் முழுவதும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் என்று. என்ன காரணம்? இப்பொழுது கருஉருகாலமே தவறாகப் போய்க்கொண்டு இருக்கிறதுதான். எந்தப் பவுர்ணமியை உடலுறவுக்கு ஆகாது என்று சொன்னார்களோ - அந்தப் பவுர்ணமி இன்று ஒரு புனித நாள் என்ற ஒரு வாசகம் போய் உல்லாசநாள் என்ற வாசகமாக மாறிப்போய்விட்டது. அந்தக் காலத்தில் கரு ஏற்படுமேயானால் - அந்த சீவகாந்த ஆற்றலை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை இனி நமது மருத்துவ விஞ்ஞானிகள் ஆராய வேண்டும்.
- கருவுற்ற காலத்தில் எந்த விதத்திலே ஒரு பெண் ஒரு குடும்பத்திலே இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிந்துகொண்டார்களோவென்றால் தெரிந்துகொள்ளவே இல்லை. அந்தக் காலத்திலே ஏற்படக்கூடிய மனநிலை குழந்தைகளை எப்படிப் பாதிக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.
- கருஉருகாலம் அமாவாசையாகவோ - பௌர்ணமியாகவோ அமையக் கூடாது என்பதை நம் முன்னோர்கள் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். ஏனென்றால் சூரியன் - பூமி - சந்திரன் இந்த மூன்றும் நேர்க்கோட்டில் வரும்போது உடல், உள்ளம் இரண்டையும் ஒரு முக்கியமான எல்லைக்கு உயர்த்தவோ - தாழ்த்தவோ உடையதாக உள்ளது. அந்தக் காலத்தில் ஏற்படக்கூடிய கரு, உடலிலும், மனதிலும் குறைவு உடையதாகவேதான் அமையும்.

## 189. கருவமைப்பு

- கருவமைப்பு குறித்தும் அதிகமாக நினைவில் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் எந்த முறையிலே மனம், உடல் அமைப்பிலே இருக்கின்றார்களோ அதை ஒட்டித்தான் ஒரு குழந்தை உருவாக முடியும். மரத்தை ஒட்டித்தான் விதை இருக்கும். அந்த விதையை ஒட்டித்தான் மரம் இருக்கும். இது தொடர் நிகழ்ச்சி.
- குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், பெற்றோர்கள் மனநலத்திலே, உடல்நலத்திலே நலம் உள்ளவர்களாக அமைய வேண்டும்; இருக்க வேண்டும். பெற்றோர்களிடத்திலே ஒருவருக்கு ஒருவர் பிணக்கு, மனத்தாங்கல் இருக்குமேயானால், நமது உடலிலே முக்கியமான சீவகாந்த ஆற்றல் பிணக்குற்று அது விஷத்தன்மையாக மாறக்கூடியதாகவே அமையும். அது குழந்தைகளையும் பாதிக்கும்.
- ஆணும் பெண்ணும் (தாயும் தந்தையும்) கூடியபோது அமைந்த அவர்களது விந்து மற்றும் நாதத்தின் அளவு மற்றும் வீரியம், அந்த நேரத்தில் இருந்த கிரகங்களின் நிலை ஆகியவையே அவர்களுக்குக் குழந்தைப் பிறந்த பிறகு ஏற்படுகின்ற வாழ்க்கை நிலைகள் அனைத்துக்கும் மூலகாரணமாக இருப்பதால், அவற்றைக் ‘கருவமைப்பு’ என்று குறிப்பிடுகிறோம். இவ்வாறு பெற்றோர் களின் கரு மையத்தின் வழியாக மக்களுக்குக் கிடைக்கின்ற நோய்ப் பதிவுகள் மற்றும் பாவப் பதிவுகளே மனிதருள் வேறுபாடு ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைகின்றன.

## 190. கருமையம்

- உயிரினங்களில் உடல் முழுவதும் சுழன்றோடுகின்ற காந்த ஓட்டம் துல்லிய சமதளச் சீர்மை என்ற தத்துவப்படி உடலில் ஒரு மையத்தில் திணிவு பெறுகிறது. அந்தத் திணிவு பெற்ற காந்த மையம்தான் கருமையம். இது மூலாதாரத்தில் உள்ளது. உடல் மையம் - உயிர் மையம் - காந்த மையம் மூன்றும் தங்கும் இடம் கருமையம்.
- உடலுக்கு மூலப்பொருள் வித்து. உயிருக்கு முக்கியப் பொருள் விண்துகள்கள். மனதுக்கு மூலப்பொருள் சீவகாந்தம். இவை மூன்றும் மையம் கொண்டிருப்பது உடலுக்கு மையமான பகுதி யாகிய மூலாதாரம். மூலாதாரம் என்பது மனித உடலுக்கு கருமையம்.

- கருமையம்தான் மனிதனின் பெருநிதி செயலுக்கேற்ற விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் - தொடர் பிறப்புகள் பலவற்றுக்கும் இடையே வினைப்பதிவு பெட்டக மாகத் தொடர்ந்து வரும் மாயத் துணைவன் தெய்வத்தையும், மனிதனையும் இணைத்துக் காட்டும் அறிவின் பேரின்பக்களம்.
- மூலாதாரத்தில் அமைந்துள்ள கருமையம் கோடிக்கணக்கான பதிவுகளைக் கொண்டுள்ளது. மனம் சுருக்கி பதிவுகளாக இங்கு வைக்கிறது. வெவ்வேறு அலைச் சுழல்களில் பதிவுகள் உள்ளன.
- சீவகாந்தத்தின் திணிவு பெற்ற நிலைதான் கருமையம். இது ஆன்மா என்றும் உள்ளம் என்றும் அழைக்கப்படுகிறது.
- மனிதன் உடலுக்கு - மனதிற்கும் இடையே, தனிமனிதனுக்கும் - சமுதாயத்திற்கும் இடையே, மனிதனுக்கும் - வான்கோள் களுக்கும் இடையே, மனிதனுக்கும் - பிரம்மம் என்னும் அருட்பேராற்றலுக்கும் இடையே பாலம்போல அமைந்து இறை, உயிர், மனம் என்னும் மூன்று மறைபொருட்களுக்கும் இருப்பிடமான மகா மறைபொருள்தான் கருமையம்.
- உடலுக்கு மூலப்பொருளான வித்துக் குழம்பு, உயிருக்கு மூலப்பொருளான உயிர்த்துகள்கள், மனதுக்கு மூலப்பொருளான ஜீவகாந்தம் (ஆன்மகாந்தம்) ஆகியவை மையம் கொண்டுள்ள இடம் மூலாதாரம். இதுவே கரு மையம் ஆகும்.
- கருமையத் தூய்மை பெறுவதற்கு, உடல்நலம் பேண உடற்பயிற்சியும், உயிர்மேல் மனம் செலுத்தும் குண்டலினித் தவமும், தற்சோதனையில் அறுகுண சீரமைப்புப் பயிற்சியும், காயகல்பப் பயிற்சியும் (வினைப்பதிவுகளைப் போக்கும், வாழ்நாளை நீட்டிக்கும். உயிர் ஆற்றலை வலுப்படுத்தும்) இறையுணர்வு எனும் பிரம்மஞானம் பயிற்சியும் பெற்று சாதனை செய்ய வேண்டும்.
- கருமையத்தில் ஜீவகாந்த சக்தி இரண்டு தன்மையுடையது. ஒன்று இறைநிலையான இருப்பு. மற்றது அதனுடைய சக்தி இயக்க நிலை. இந்த இரண்டும் கருமையத்தில் இருப்பதனால் எந்தப் பொருளைப் பார்த்தாலும் அவ்வலையில் உள்ள அழுத்தம் எல்லாம் சுருங்கி பதிவு ஒன்றை ஏற்படுத்துகிறது. மீண்டும் அது மன அலைச்சுழல் அமைகிறபோது அப்படிப் பதித்த பதிவை மூளைச் செல்கள் எடுத்துக்காட்டி செய்கிறது.

- புலன்கள் மூலம் எதை உணர்ந்தாலும் அது புலனைத் தாண்டியவுடன் மூளையில் போய்ச் சேரும்போது புள்ளிதான். ஆனால் இந்த உலகத்தில் பிரபஞ்சத்திலேயே மனித மூளை காந்த இயக்கத்தில் மிகமிகச் சிறந்த கருவி. மூளையானது அந்தப் புள்ளியையும் காந்த அலையாக மாற்றிவிடும். இந்த காந்த அலை நம் உடலில் வேகமாக ஓடிக்கொண்டேயிருப்பதனால் அதற்கு ஓர் மையப்புள்ளி உண்டாகிறது. அதுதான் கருமையம் ஆகும்.
- துல்லியச் சமதளச் சீர்மை (ஸ்பெசிபிக் கிராவிட்டி) என்ற தத்துவ நியதிப்படி, காந்தச் சுழற்சியின் விரைவால் மையத்தில் திணிவு நிலை ஏற்படுகிறது. அந்தக் காந்தத் திணிவுநிலைதான் கரு மையம்.
- விலங்கினத்திலிருந்து அதனுடைய கருமையப் பதிவுகள் எல்லாம் நமக்கு மரபுத் தொடராக வந்துவிட்டன.
- கருமையத்தைப் பற்றி அறியாதவர்கள் அவர்தம் வாழ்க்கையில் துன்பம், நோய், வறுமை இவற்றிற்கு ஆளாகிறார்கள்.
- மனம், இறைநிலை, விண்துகள், காந்தம் இவையெல்லாம் பிரபஞ்சத்தில் மறைபொருட்களாக உள்ளதைப்போல கரு மையமும் ஒரு மறைபொருளாகவே உள்ளது.
- ஏழு வயதில் ஏதோ ஒரு ஊரில் ஏதோ சில காட்சிகளைப் பார்த்தீர்கள். இப்போது நினைத்தாலும் அதே காட்சி அப்படியே வருகிறது. இப்போது அந்த ஊர் வரவில்லை. அந்தக் காட்சி வரவில்லை. அந்த ஊரைப் பார்த்தபோது நீங்கள் அதுவானீர்கள். அதுதான் உணர்தல். அந்த உணர்வை அப்படியே அலைவடிவில் சுருக்கி இருப்பு வைத்தாயிற்று. அப்படி மூன்று வயதில் இருந்து இன்று வரையில் நடந்த எல்லா விஷயங்களும் இறுக்கி ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் கருமையம்.
- எல்லா அனுபவங்களையும் இந்தக் கருமையமானது ஈர்த்து இருப்பாக வைத்து - காலத்திற்கு ஏற்றவாறு அவற்றை எண்ண மாகவும் - செயலாகவும் வெளிப்படுத்தும்.
- நாம் என்ன செயல் செய்தாலும் அதை அப்படியே அலை வடிவத்தில் சுருக்கி நிலையாகக் கருமையத்தில் வைத்துக் கொண்டு - மீண்டும் நாம் சும்மா இருக்கிறபோதெல்லாம் இறைவன் எடுத்துக்காட்டிக் கொண்டே இருப்பான்.
- காந்தக் கருமையம் அலைவடிவிலேயே இருப்பதனால் - எவ்வளவு காந்த முடிச்சுகள் அதில் சேர்ந்தாலும், அது பெருக்கமடையவோ,

சுருக்கம் அடையவோ செய்யாமல், அந்த முடிச்சுகளின் தன்மைகளை மாத்திரம் தனதாக்கிக் கொள்கிறது.

- ஒரு ஜீவனின் கருமையத்தில் அமைகின்ற செயல்திறனும், மனத்திறனும் மற்றும் அனைத்துமே பிரபஞ்சத்தில் உள்ள எல்லா ஜீவன்களோடும் தொடர்புடையன.
- திணிவு பெற்ற ஜீவகாந்த மையம், உயிர்ச்சக்தி, ஆன்மா இவை யாவும் ஒருசேர அமைந்துள்ள களம் கருமையம் ஆகும்.
- பருவுடல், ஸ்தூல உடல், சூக்கும உடல் ஆகியவற்றின் விசேஷமான குணங்களை அழுத்தமாகக் கொண்டுள்ள ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த காந்தக்கள இராச்சியம் கரு மையம்.
- கரு மையம் என்பது ஒரு ஜீவனின் மையத்திலிருந்த போதிலும் பேரியக்க மண்டலம் முழுவதிலும் தொடர்பு கொண்டு இயங்குகின்றது.
- சீவகாந்தக் கருமையம் செயலுக்குத் தக்க விளைவைத் தரும் தெய்வீக நீதிமன்றம்.
- கருமையத்தின் முழு ஆற்றல்களும் கீழ்ப்பகுதியான மூலாதாரத் திலேயே இருக்குமானால் மனித மனத்தில் பொருள் பற்றும், மக்கள் பாசமும், உணர்ச்சிவயப்பட்ட எண்ணங்கள் மற்றும் செயல்களுமே முதன்மைத் தன்மையாக இருக்கும்.
- கருமையம் பருஉடலுக்கு ஈர்ப்பு மையமாக அமைந்து செயல்படுகின்றது.
- மனம் என்பது நம்முடைய எண்ணங்கள். இன்பதுன்ப உணர்வுகள். அகம் - உள்ளம். உள்ளே இருப்பது. அதுதான் ஆன்மாவாக இருக்கிறது. அதுதான் கருமையமாக இருக்கிறது. அதுவும் பிறவித் தொடராக வந்துகொண்டிருக்கிறது.
- காந்தம் - உயிர் - விந்து மூன்றும் இணைந்ததுதான் கரு மையம். மூளையில் ஒரு முறை பதிந்தது, கரு மையத்தில் அப்படியே பதிந்து விடும்.
- தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலினால் மண்ணில் ஒரு வேகம் ஏற்படுகிறது. துல்லிய சமதளச் சீர்மையினால் வெளி யேறும் நீர் மாற்றம் பெற்று அதுதான் புல்லாக முளைக்கிறது. புல்லே பலவிதமாகப் பெருகி மரங்களாகி - விதையாகி, விதையே காலத்தால் முளைக்கப் போடாதபோது புல்லாயிற்று. புல்லுக்குக் கருமையம் புல் முழுவதுமே இருக்கிறது.

## 191. கருவிலே திருவுடையார்

❀ இளம்வயதிலேயே ஆண், பெண் இருவரும் காயகல்பப் பயிற்சி எடுத்துக்கொண்டு செய்துவந்தால் விந்து நாதத்தில் உள்ள கறைகள் அகற்றி விந்து நாதம் சுத்தப்படும். அவர்கள் திருமணம் செய்துகொண்டால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை உடல்நலம், மனவளம் மிக்கதாகவும், அறிவுக்கூர்மையுடையதாகவும், ஆன்மீக எண்ணம் கொண்டதாகவும் இருக்கும். 'கருவிலே திருவுடையார்' ஆதல் என்பார்கள். எப்படி வித்து கெட்டதாகவும் - குறையுடையதாகவும் இருந்தால் மரம் பழுதடைகிறதோ - வீரிய வித்தை உபயோகித்தால் பலன் சிறப்பாக உள்ளதோ அதேபோன்றுதான் இதுவும்.

## 192. கருமையத் தூய்மை

### [கருமையத்தை தூய்மை செய்யும் செயல்கள்]

☆ தாய் - தந்தை - குரு - ஆட்சித்தலைவர் - தெய்வம் இவர்களை மதித்து வாழ்தல்.

☆ ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றுமிணைந்த அறநெறி பின்பற்றி வாழ்தல்.

☆ மன ஓர்மைக்கும், அறிவு விளக்கத்துக்கும் ஏற்ற அகத்தவப் பயிற்சியினை முறையாகச் செய்து வருதல்.

☆ இரத்தம், வெப்பம், காற்று, உயிர், சீவகாந்தம் ஆகியவை தடையின்றி ஓடி உடலைக் காத்துக்கொள்ள ஏற்ற உடற்பயிற்சிகளை அளவோடு செய்து வருதல்.

☆ இறைநிலை உணர்ந்து அந்நிலையோடு அடிக்கடி ஒன்றிப் பழகுதல்.

☆ மனித முயற்சியால் உற்பத்தி செய்த பொருட்களையும், இயற்கை வளத்தையும், பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப் படுத்தாது மதித்து நடத்தல்.

☆ நாம் பார்க்கும் ஒவ்வொருவர் உடலும் இயற்கை என்ற பேராற்றலால் கட்டப்பட்டிருக்கும் பெருமையை உணர்ந்து, உடலுக்குள் அறிவாக விளங்குவது தெய்வத்தின் ஒளியே என்று மதித்து ஒத்தும் உதவியும் வாழ்ந்து வருதல்.

- ☆ உள்ளத்தில் பகைமை - வஞ்சம் - எதையும் வைத்துக் கொள்ளாமல் மன்னிப்பும், ரசனையும் கொண்டு எல்லோருடனும் இன்முகத் தோடும் அன்போடு பழகுதல்.
- ☆ நாடு, மதம், சாதி, மொழி இவற்றால் மனிதரை வேறுபடுத்திக் காணாமல் எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவில் வாழ்தல்...

## 193. கனவு

- ✧ மனிதன் தூங்கும்போது மனஇயக்கம் முழுமையாக நின்று போகாமல் சிறிது கசிவு ஏற்படும். இதை ஜீவகாந்தக் கசிவு என்பர். அந்த சமயத்தில் மூளை செயல்படும். அந்த நிலைதான் கனவு எனப்படும்.
- ✧ கனவு தூக்கத்தில்தான் வரும் என்பது இல்லை. விழிப்பு நிலையில்கூட கருமையப் பதிவுகள் எண்ணங்களாக மலர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கும். இதைத்தான் பகற்கனவு என்கிறோம்.

## 194. களங்கங்கள்

- ❁ கடன் - வறுமை - கல்வியின்மை என்று மூன்று களங்கங்கள் உலகினிலே மறைய வேண்டும்.
- ❁ மூன்று களங்கங்களோடு உள்ளவன்தான் 'மனிதன்'. அவை 1. தன்முனைப்பு; 2. பாவப்பதிவுகள்; 3. மயக்கம் என்பனவாகும். இம்மூன்று களங்கங்களை ஆணவம் - கன்மம் - மாயை என்றும் சொல்வர். மனிதன் படுகின்ற துன்பங்கள் அத்தனையும் உற்பத்தியாகும் இடம் இம்மூன்றில்தான்.
- ❁ ஊழ்வினை - கடவுள் செயல் - உலக இயல்பு என வேண்டாம். ஆழ்ந்த சிந்தனையாளர் அரசேற்க களங்கம் போம்.

## 195. கடும்பற்று

- ❂ ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனப் பிறர் கவராமல் பாதுகாத்துக் கொள்ளும் செயல் கடும் பற்றாகும்.

- தான் ஈட்டிய பொருட்களைத் தான் வைத்திருக்கவும், துய்க்கவும், மனிதனுக்கு உரிமையுண்டு. தனது தேவைக்கு மேலாக பொருட்கள் மிகுதியாக இருக்கும்போது, அவை பிறர் நல்வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத் தேவையென அறிந்த போதும், அப்பொருட்கள் தனக்கே உரியவையென்ற உணர்வில் தானே வைத்துக்கொண்டு அவற்றைப் பிறர் பயன்படுத்தாமல் பாதுகாக்கும் ஒரு மனநிலையே கடும்பற்று ஆகும்.
- கடும் பற்றை ஈகையாக்குவதற்கு மனதை விசாலப்படுத்திக் கொள்ள வேண்டும். தானும் பயன்படுத்தாமல் பிறரும் பயன் படுத்தவிடாமல் பொருள்களையே, சிலர் கெடுத்துவிடுவார்கள். அவர்கள் அச்செல்வத்தையே பீடிக்கும் நோய் போன்றவர்கள்.
- ஒழுங்குறாத ஆசையே ஆன்மீக வாழ்வுக்குத் தடையென்றால், ஈகையாகச் சீரமையாத கடும் பற்றோ மனதை இறுக்கிக் குறுக்கி அதன் உயர்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது. மற்ற எல்லா நற்குணங்களையும் தலையெடுக்க விடாமல் இந்த கடும் பற்று ஒன்றே பண்ணிவிடும். மேலும்மேலும் துன்பமும் பிறப்பும் தொடர்ந்து நிவர்த்திக்கே இடமில்லாமல் செய்துவிடக் கூடியது இந்தக் கடும்பற்று.

## 196. கல்வி

- ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளானாலும் அவர்கள் கற்கும் கல்வியின் தரத்தால் அறிவில், செயல்திறனில் பண் பாட்டில் வேறுபடுகிறார்கள். கல்வி என்பது இரண்டு வகைப் படும் ஒன்று பண்பாட்டுக் கல்வி. மற்றொன்று நூல்கள் வழியாக மொழி மற்றும் தொழிற்கல்வி.
- அறிவை அறிவதற்கான அறிவைத் தருவதுதான் அறக்கல்வி.
- பத்து வயதாவதற்குள் எழுத்துக் கல்வி பயிற்சி எல்லாக் குழந்தைகட்கும் முடியும். வாழ வித்தை பலவும் பயில மேலும் பத்து வருடங்கள் ஒதுக்கிவிடுவோம். உலகில் உள்ள அத்தனை தேசங்களிலும் மாறிமாறி அவரவர்கள் தொழில்பயில இடமாய்க் கொள்வோம். இத்தகைய கல்வி முறையால் யாவர்க்கும் இவ்வுலகம் பொதுவென்ற உண்மை காண்போம்.
- சிறுக சிறுகப் பயின்றால் சித்திக்கும் உண்மை நெறி.

- காலத்திற்குத் தக்கவாறு வாழ வேண்டும். அதற்கு உடல்நலம் அவசியம். மனவளமும் அவசியம். நாம் தொடர்பு கொண்டு வாழக்கூடிய மக்களிடம் அந்தத் தொடர்பில் நட்பு பாராட்ட வேண்டியது. நட்பை காப்பாற்ற வேண்டியது அவசியம். இதற்குத் தேவையானவற்றைத் தெரிந்துகொள்ளக் கூடியதுதான் கல்வி. எப்படி வாழ வேண்டும் என்பதைப் படித்துக் கொள்வதுதான் கல்வி.
- எப்படி வாழவேண்டும் என்பதற்கு இதுவரையில் உலகத்தில் கல்வி வரவில்லை.
- கல்வி செழித்து வந்தபோதுதான் ஆண்களுக்கும் - பெண்களுக்கும் வாழ்க்கையில் சமமான பொறுப்பு வந்துள்ளது.
- முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை அவர்களுக்குப் பின் வாழ வரும் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளக் கூடிய சீரிய முறையே கல்வி எனப்படும்.
- உடலுக்கு உரமளிக்கும் நல்லுணர்வு உள்ளத்திற்கு உணர் வளிக்கும் கல்வி.
- எழுத்தறிவு தொழிலறிவு இயற்கைத் தத்துவ அறிவு ஒழுக்க பழக்கங்கள் இவை உணர்த்தும் முறையே கல்வி.

## 197. கலை

- இயற்கை இயல்புகளையும், விளைவுகளையும் இரசிக்கும் திறமையும் இவற்றைப் போலி செய்து பிறருக்குக் காட்டி மகிழ்வூட்டி மகிழும் ஆற்றலும் கலை எனப்படும்.
- இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அறிவாலே, உடல் திறனாலே உருமாற்றி, சிறப்பித்துக் கொள்கின்றோமோ அதுதான் கலை.

## 198. கந்தன்

- சிவன் சக்தியானால் பிறந்த காந்தம் கந்தனாயிற்று.

## 199. கற்பனை

- ஒரு செயலை அல்லது அனுபோகத்தை அது நடவாத முன் ஞாபகத்தினால் உருவாக்கினால் அது கற்பனையே ஆகும். புலனுணர்ச்சிகளிலே குறுகி நிற்கும் அறிவின் நிலையில் எழும்

கற்பனைகளுக்கு, அந்த உடல்பலம், அந்த நிகழ்ச்சிக்குரிய சமய சந்தர்ப்பப் பலம் இவைகள் மாத்திரம் உதவியாக இருக்கும். விரிந்த அகண்டாகார ஆராய்ச்சி எல்லையிலே எழும் கற்பனை களுக்குப் பலமும் - நீண்டகாலமாக சமுதாயத்தைத் தொடர்ந்து வரும் உலக அனுபவங்களும், அக்கால மக்களின் அறிவின் பலமும் ஒன்றுசேர்ந்து இந்தக் கற்பனைகளைச் செயல்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்கிப் பின்னர் அவை செயலாகவும் மலரும்படிச் செய்யும்.

## 200. கற்பு

- கற்பு என்பது ஆணுக்கும் - பெண்ணுக்கும் உயிரைவிட மேலாகப் போற்றக்கூடிய ஒழுக்கம்.
- ஒவ்வொரு நாட்டிலும் பண்பாடு என்பது பெரும்பாலும் பெண்களைப் பொறுத்து அமைகின்றது. பெண்கள் கற்புக்கு இழுக்காக நடப்பது கடவுளுக்குத் துரோகம் இழைப்பது ஆகும். அதனால்தான் எங்கள் பெண்கள் கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.
- உடல், உரம், மனநலம், பொருள் வளம் மூன்றையும் காக்க வல்லது கற்பு.
- கற்புக்கு மதிப்பளிக்க இருபாலர்க்கும் கடமை பொதுவே.
- கற்புநெறி என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும் ஓர் உயர்ந்த சொல், கற்பு நெறி, அறிவு வளம், நல்ல வாழ்க்கைத் துணை அமைதல் - செல்வ வளம் எல்லாம் அமைகின்றன. நல்அறிவுள்ள குழந்தை களைப் பெற்றெடுக்கலாம்.
- கற்புநெறி பெண்களிடத்தில்தான் இருக்க வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறான எண்ணம். தான் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தனக்கு வரும் மனைவி மட்டும் நல்ல கற்புடையவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தக் கருத்தை உயர்ந்த சிந்தனையின் மூலமாகத்தான் மாற்றி அமைக்க முடியும். கற்பு நெறி ஆண்களுக்கும் அவசியம்.

## 201. காதல்

- ❖ ஒருவர் ஒருவர்க்கு உடல் பொருளோடாற்றல் உவந்து அர்ப்பணித்த உளநிலையே காதல்.
- ❖ ஒருவருக்கொருவர் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள, கணவன் மனைவியின் நட்பால்தான் முடியும். இதைத்தான் ‘காதல்’ என்கிறார்கள்.

## 202. காயகல்பம்

- ✻ காயம் என்றால் உடல். கல்பம் என்றால் அழிவின்மை என்பது பொருளாகும். தென்னாட்டுச் சித்தர்கள் கண்டறிந்த அற்புதக் கலையே காயகல்பமாகும்.
- ✻ நோயற்ற உடலுக்கும் தெளிந்த அறிவு மேன்மைக்கும் விந்து நாதந்தான் ஆதாரம். மேலும் குடும்ப வாழ்வில் ஆண் - பெண் உறவில் ஒரு இனிமையையும் ஆழமான நட்பையும் அமைதியையும் மகிழ்வையும் கொடுப்பதுமாகும். எனவே அவற்றைப் புனிதப் பொருட்களாகக் கருதி, அவற்றின் தூய்மையைப் பராமரித்து அவற்றுக்கு மேன்மையளிக்க வேண்டும். அதற்கு உதவுவதுதான் காயகற்ப கலை.
- ✻ இளவயதிலேயே ஆண் - பெண் இருவரும் காயகல்பப் பயிற்சி எடுத்துக்கொண்டு வந்தால் விந்து நாதத்தில் உள்ள குறைகள் அகன்று விந்து நாதம் சுத்தப்படும். அவர்கள் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை உடல்நலம், மனவளம் மிக்கதாகவும், அறிவுக்கூர்மையுடையதாகவும், ஆன்மீக எண்ணம் கொண்டதாகவும் இருக்கும். இதைத்தான் கருவிலே திருவுடைய குழந்தை ஆதல் என்பார்கள்.
- ✻ ஆயகலைகள் மொத்தம் கணக்கெடுத்தோர் அறுபத்திநாலு என்றார் அனைத்தும் கற்றும் காயகற்பமெனும் கலையைக் கற்காவிட்டால் கற்றதெல்லாம் வீணாகும்.
- ✻ காயகல்பப் பயிற்சியினால் உடலில் உள்ள நரம்புகள் வலுப்பெறுகிறது. ஜீவ வித்துக் குழம்பு (SEXUAL VITAL FLUID) கெட்டிப்பட்டு இருப்பு அளவில் அதிகரித்து உயிர் ஆற்றல் கூடும். உயிர் ஆற்றல் கூடும்பொழுது - ஜீவகாந்தத்தின் இருப்பு கூடி உடல் நலமும் - மனவளமும் மேம்படும்.

* காயகல்பப் பயிற்சியினால் உடலில் உள்ள நோய் நீங்குவதோடு நோய் எதிர்ப்புச் சக்தி (IMMUNITY) பெருகும்.
* பால் உணர்வு கட்டுப்படும் - கற்பு நெறியும் இயல்பாக மலரும்.
* நல்ஒழுக்கங்கள் - நினைவாற்றல் - அறிவுத்திறன் கூடுதல் - படிப்பில் முழு ஈடுபாடு கிட்டும்.
* பதினான்கு வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு காயகல்பப் பயிற்சியைக் கொடுப்பது பெற்றோர்களின் கடமை. காயகல்பப் பயிற்சி அவ்வளவு உயர்ந்த வெகுமதி கொடுப்பதுபோல ஆகி விடும். இளைஞர்களுக்கு இதைக் காலத்தால் கொடுத்து விட்டால் - அவர்கள் சினிமா பார்த்தாலும்கூட மனம் கெட்டுப் போகாமல் நிலையாக இருக்கும். பிறகு கொஞ்ச நாட்களில் தானாகவே சினிமாவிற்குப் போவதை விட்டு விடுவார்கள். உண்மையான ஆக்கத் துறையான படிப்பில் கவனத்தைச் செலுத்த முடியும். ஆக்கத்துறை அறிவு (CREATIVE PERSONALITY) வந்துவிடும்.
* பெண்களுக்கென்ற காயகல்பப் பயிற்சியின் போதனையில் ஒரு பயிற்சி கொடுக்கிறேன். அந்தப் பயிற்சியின் காரணமாக மாத விலக்கு (MENSTURATION) சம்பந்தப்பட்ட எந்தவித தொந்தரவு களும் இல்லாதபடி அந்த உள்ளூறுப்புகளைப் பலப்படுத்தி - உடலைப் பாதுகாப்பதற்கு ஒரு எளிய பயிற்சி இன்றைக்கே வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம்.
* காயகல்பப் பயிற்சியினால் மாயமெனும் வித்து அமுத ரசமாய் மாறி மரணமிலாப் பெருவாழ்வு சித்தியாகும்.
* மனவளக்கலையும், காயகல்பமும் ஒன்றைஒன்று சார்ந்திருக் கின்றன. ஒன்றுக்கொன்று உதவி இரண்டுமே மேம்படுகின்றன.

## 203. காந்தம்

✪ இறைவெளி பாட்டன் - வேதான் தந்தை - யோகான் பேரன் - பேரன் பாட்டன் தோளில் ஏறி விளையாடும் திருக்கூத்துதான் காந்தம்.

✪ காந்தநிலை உணர்ந்திடில் கடவுள் மனம் தெரியும்.

✪ மனம் என்பது உடல் இயக்கத் திறன் அது காந்தம்.

✪ மனித மனம் காந்த அலை மா இறையே அடித்தளம்.

✪ உயிர் உடல்களில் உண்டாகிச் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காந்த அலைதான் சீவகாந்தம்.

- ✪ எந்த ஒன்றறிந்திடில் இறைவன் முதல் உயிர் வரை எல்லா வற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்.
- ✪ ஆகாசம் உயிராக இருக்கிறது. அது உடலில் இயங்குவதால் உடலுக்கு ஒரு காந்த இயக்கம் கிடைக்கிறது.
- ✪ பரமாணுவின் சுழற்சியால் வரும் விரிவலை இருப்பு நிலை யோடு இணைவதால் ஏற்படும் மாபெரும் ஆற்றல்.
- ✪ நிறைவெளியில் விண் சுழல நெருக்கின்ற உரசல் நிலை வெளியில் எழுப்புகின்ற நேரலைகள் காந்தமாம்.
- ✪ காந்தமானது - பிரபஞ்சத்தின் இயக்க மண்டலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு பொருளின் ஊடேயும் நிறைந்து விளங்குகிறது.
- ✪ காந்தம் அழுத்தமாக மாறுகின்ற தன்மாற்றத்தைக் கொள்ளல், தள்ளல் என்ற இரண்டு வகையாக உணர முடியும்.
- ✪ எப்போதும் மாற்றம் அடைந்து கொண்டிருக்கிற அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகியவை காந்தத்தின் தன்மாற்றத் தினாலேயே விளைகின்றன.
- ✪ பிரபஞ்சத்தின் எல்லா இயக்கங்களுக்கிடையிலேயும், இயக்கங்களுக்கு உள்ளேயும், அவ்வியக்கங்களைச் சுற்றிலும் விளங்குகின்ற பேராற்றலே காந்தமாகும்.
- ✪ நிழல் விண்ணானது தோன்றி, இயங்கி மறையக் கூடியது. இந்த தோற்றத்திற்கும் மறைவிற்கும் மத்தியில் உள்ள இயக்கம் இருக்கிறது பாருங்கள். அதுதான் காந்தம்.
- ✪ காந்த ஆற்றலானது சடப்பொருட்களில் ஐவகையான தன் மாற்றமும், உயிரின் உடலில் மனம் எனும் தன் மாற்றமாகவும் சிறப்புற்று இயங்கும் நிலைகளே இறைவெளியின் சிறப்பு நிலைகளாகும்.
- ✪ காந்தமும், அதன் தன்மாற்ற விளைவுகளான அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் அனைத்தும் அலைகளேயாகும்.
- ✪ காந்த ஆற்றலின் இயக்க வேறுபாடுகளே அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் எனும் ஆறு வகையாகும்.

## 204. காந்த தத்துவம்

- ❁ இறைவனைப் பற்றிய உண்மை அறிவு மறைந்து கற்பனைக் கருத்துக்கள்தான் நேற்றுவரை போதிக்கப்பட்டிருக்கின்றன.

அதனால் மனிதகுலத்தில் ஏமாற்றமே நிலவி வந்திருக்கிறது. காந்த தத்துவமானது விஞ்ஞான முறையில் பிரம்ம ஞானத்தை (UNIFIED FORCE) ஆகக் காட்டி இறைநிலையை உண்மையான முறையில் உணர்வாக பெற வழிவகுப்பதால் சிக்கலும் துன்பமும் இல்லாத வாழ்வை இனி உலக மக்கள் பெறமுடியும்.

- இறைநிலையே அணு முதற்கொண்டு அண்டம் ஈறாகவும், மனிதனாகவும் வந்துள்ளது. எனில், மனிதனிடம் களங்கமும், பாவப் பதிவுகளும் எப்படி வந்தன? ஏன் துன்பங்கள் வருகின்றன? எல்லாச் சிந்தனையாளர்களும் இதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதற்கு விளக்கம் கூறி உதவுவதுதான் நமது காந்தத் தத்துவம்.

## 205. காந்த அலை

- சூரியனிடமிருந்து வருகின்ற காந்த அலை, எலும்புகளோடும்; புதன், தோல் மீதும்; சுக்கிரன், ஜீவசக்தியோடும்; சந்திரன், இரத்த ஓட்டத்தோடும்; செவ்வாய், எலும்பிலுள்ள மஜ்ஜையோடும், குரு, மூளைச் செல்களோடும்; சனி, நரம்புகளோடும்; ராகு - கேது, ஓஜஸோடும் தொடர்பு கொள்கின்றன.

## 206. காலம்

- காலம் தாழ்த்தாமல் கடமையைச் செய். இல்லையேல் காலம் உன்னைத் தாழ்த்திவிடும்.
- ஒரு இயக்கம் எவ்வளவு நேரம் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதைக் குறிக்கும் அலகுதான் காலம் எனப்படும். இயக்க நீடிப்பு அளவுதான் காலம். உலகம் சுற்றுகிறது. ஒரு சுற்றுக்கு தேவைப்படுவது ஒரு நாள். அதை வகுத்ததால் விநாடி என்ற அளவு கிடைக்கும். பெருக்கினால் வருடம் என்ற அளவு கிடைக்கும்.
- இதுவரைக்கும் காலத்திற்கு விஞ்ஞானத்தில் சரியான விளக்கம் இல்லை. காலம் தத்துவத்திலும் தெளிவாக விளக்கப்படவில்லை.
- அதிர்வலைகளின் தொடர் நீளத்தைக் காலம் என்பதாக உணர்கிறோம்.
- காலத்தால்தான் எல்லா இயக்கங்களும் மாறுதல்களைப் பெறுகின்றன. கட்டுப்படுத்தவும்படுகின்றன.

## 207. காலில் விழலாமா?

- ஓர் அன்பர் என் காலில் விழுந்து வணங்கும்போது எனக்குப் பொருந்தா உணர்வாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் இதனை அறிவித்துக் காலில் விழுந்து வணங்குவதை அன்பர்கள் தவிர்க்க வேண்டுகிறேன். அதற்குப் பதிலாக நேர், நிறையுணர்வை உணர்த்தும் வகையில் கைகூப்பி வணங்குவதும் வாழ்த்துவதும் நல்லது. இதனையே நமது மன்றத்தில் எதிர்காலத்தில் செயல் நடத்துதல் வேண்டும்.

- **குருவின் கால்களைத் தொட்டு வணங்கினால் பாவம் எல்லாம் போய்விடும். நாம் தூய்மை பெற்றுவிடலாம் என்ற தவறான எண்ணம் மக்களிடையே உள்ளது. அதனால் மக்கள் காலைத் தொட்டு வணங்க வேண்டும் என நினைக்கிறார்கள். உங்களை இறைநிலை வரை உயர்த்தி விட்டிருக்கிறேனே. இன்னும் ஏன் குனிந்து கால்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். குருவின் ஆசியைப் பெற அவரின் கண்களைப் பார்த்தாலே போதுமானது.**

## 208. காற்று

- அணுக்கள் சேர்ந்த ஒரு களம் ஒன்றுசேர்ந்து இயங்குவதே வெப்பக் காற்று ஆகும்.
- நாம் எந்த நுண்ணிய பரமாணுக்களைப் பார்க்க முடியவில்லையோ - அவற்றின் அடர்த்தி நிலை காற்றில் நிரம்பி இருப்பதால் - காற்றின் சக்தி வியத்தகு அளவில் இருப்பதை உணர்கிறோம்.
- விண்ணின் இயக்கத்தால் ஏற்பட்ட உரசலால் ஓர் அலை பிறந்தது. அதுவே காற்று.
- விண் முதலாவதாகவும் காற்று இரண்டாவதாகவும் தோன்றியது.

## 209. காமம்

- பொருள் மூலம் உடல் வளரும். பூரித்த காமத்தால் குடும்பம் உண்டாம்.

## 210. காமகுரோதம்

* இந்தக் காம குரோதாதிகளை என்ன செய்வது? ஒழித்துவிட முடியுமா? அவை தாம் இயற்கையானவையாயிற்றே? மாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் செய்யலாம். முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் செய்யலாம். தீய விளைவுகளை மாற்றி நல் விளைவு தருபவையாகச் செய்து கொள்ள வேண்டுமானால் முடியும்.

## 211. கிரகண நாட்கள்

✪ கிரகண நாட்களில், ராகு - கேது காந்த அலை வீச்சால் சூரிய ஒளி, சந்திர ஒளி, பாதிக்கப்படும்போது நம் உடலில் உள்ள ரசாயனமும் வித்தியாசப்படும். அந்த மாறுதல் ஏற்படும்போது நமது உணவு செரிமானம் குறைவாக இருக்கிறது. அந்த நேரத்தில் தெய்வீக நினைவு அல்லது வேறு ஏதாவது சங்கல்பம் செய்வது நல்லதே.

✪ கிரகண நாட்களில், ஆண், பெண் உடலுறவை கொள்ள நேரிட்டால் அந்த நேரத்தில் விளையக்கூடிய குழந்தை கேடுற்ற உடலும், மனமும் உடையதாக இருக்கக்கூடும் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம். ஆகவே, இத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்காகவே அந்த நாட்களை விரத நாட்களாக ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

✪ கிரகண நாட்களில் சாப்பிடாமல் இருப்பது நல்லது. இதனால் உடலினுடைய சக்தி அழிவு இல்லாமல் அப்படியே காப்பாற்றப் படும். கிரகணம் முடிந்து குளிப்பது என்பது எப்பொழுதும் குளிப்பதைப் போலத்தான். அப்பொழுது குளிக்காமல் போனால் ஒன்றும் பாதிப்பு இல்லை. தூய்மை வேண்டும் என்பதற்காக எதற்குமே குளித்து விட்டுச் செல்வது என்பது ஒரு சடங்குதான்.

## 212. கிள்ளி எறிவோம்

❁ கள்ளம், சோரம், கடன், குடி பெரும்பாலும் மெள்ள அதிகரிக்கும் விஷமொக்கும் இயல்புடைத்து உள்ள சுகம் போக்கும் உயிரைப் பலி கொள்ளும் கிள்ளி எறிவோம் கிளைக்கும்போதே இவற்றை.

## 213. குத்துவிளக்கு

☆ ஆன்மாவை அறிந்து கொண்டால் அதன் உள்ளும் புறமும் இறைவனே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கான பயிற்சிதான் குண்டலினி யோகம். நமக்குள்ளாக இருப்பது உயிர்ச்சக்தி. ஆன்மா என்ற உயிர்ச்சக்தியை அழுத்தம் கொடுத்து உணர வைப்பதைத்தான் குத்துவிளக்குவது என்று சித்தர்கள் சொன்னார்கள். அது இப்பொழுது குத்துவிளக்கு என்றாகி விட்டது. குத்துவிளக்கு அப்படி விளக்குகிறபோது பஞ்ச இந்திரியங்களும், பஞ்சபூதங் களும் நன்றாக விளங்கி விடும் என்பதைக் காட்டுவதாகத்தான் குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் வைத்திருக்கிறார்கள். குத்து என்றால் அழுத்து என்று பொருள். அப்படி அழுத்தி உனக்குள்ளாக இந்த உயிர்ச்சக்தி இருக்கிறது. அந்த உயிருக்குள்ளாகத் தெய்வமே அறிவாக, சிவமாக இருக்கிறது என்று விளக்கிக் காட்டுவது தான் அகத்தவப் பயிற்சி.

## 214. குடும்பம்

✧ குடும்பம் ஒரு கோயில் என்றால் அதில் கணவன் மனைவி தான் மூலகிரகம். அப்படிப்பட்ட கோயிலுக்கு நான் பூசாரியாக வருவேன்.

✧ குடும்பத்தில் அறிவு ஆட்சி செய்ய வேண்டும். குடும்பத் தலைவனா அல்லது தலைவியா என்பது அல்ல.

✧ குடும்ப வருமானத்திற்கேற்ப செலவினத்தைத் திட்டமிட்டு குடித்தனம் நடத்துவது தாய்மார்கள் கையில்தான் இருக்கிறது.

✧ குடும்பம் என்பது வாழ்க்கை கலையை கற்கும் கலாசாலை.

✧ ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமேயானால் அது அவரது குடும்பத்தின் அமைதிதான்.

✧ நீங்கள் கற்க வேண்டிய எல்லாப் பாடங்களையும் குடும்பத்துக் குள்ளேயே கற்றுக் கொள்ளலாம்.

✧ ஒரு பல்கலைக்கழகத்தையே கூடக் குடும்பத்துள் காணலாம். கடவுள் தன்மை, இயற்கைத் தத்துவம், வாழ்க்கைத் தத்துவம், ஞானம் முதலிய அனைத்துக்கும் குடும்பத்துள் பாடங்கள் நடத்தப்பெற்று வருகின்றன.

- ✧ அமைதியான, திருப்தியான வாழ்க்கையை நீங்களும் வகுத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தாருக்கும் வகுத்துத் தர வேண்டும். இதுதான் உங்கள் ஞானத்தின் தலையாய பயன். இவ்வகையில் வெற்றி பெற்றால்தான் உண்மையான ஞானியராவீர்.
- ✧ குடும்பத்திலேயே நாம் பெற்ற விளக்கத்தை ஒரு பேரறிவின் தெளிவை பயன்படுத்த முடியவில்லை என்றால் வாழ்நாள் வீணாகப் போய்விட்டது என்று அர்த்தம்.
- ✧ ஒருவருக்கொருவர் துன்பம் தராமல் பார்த்துக் கொள்வது - அடுத்து அவர்களது தேவையை நம்மால் முடிந்தவரையில் நிறைவு செய்து வைப்பது. இந்த இரண்டையும் ஒருவருக்கொருவர் செய்தால் அந்தக் குடும்பம் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். உண்மையான கோயிலாகவே இருக்கும்.
- ✧ குடும்பம் ஒரு ஜீவநதி. நம்பிக்கையே அதில் ஓடும் நீராகும்.

## 215. குடும்ப அமைதி

- ❁ குடும்ப உறுப்பினர்களுக்கு உடல் நலம், மனஅமைதி, மனவளம், செல்வ வளம் இருக்க வேண்டும்.
- ❁ தம்பதியினரிடையே தனியான ரகசியம், பொருள் இருக்கக் கூடாது.
- ❁ வரவுக்குள் செலவு செய்தல் வேண்டும்.
- ❁ தேவைக்கதிகமாக பொருள் சேர்க்கக் கூடாது.
- ❁ சிந்தித்து, சடங்கு, சம்பிரதாயங்கள், பண்டிகைகளில் தேவை யில்லாததை விட்டுவிடல் வேண்டும்.
- ❁ உறுப்பினர் அனைவரும் அல்லது பெரும்பாலோர் அறவழியில் சம்பாதிக்க வேண்டும்.
- ❁ குடும்ப உறுப்பினர்களிடம், உறுதியான - நெருக்கமான, உண்மையான நட்பு நிலவ வேண்டும்.
- ❁ தம்பதியர் நட்புக்காகக் கற்பைத் தவிர வேறு எதையும் தியாகம் செய்யலாம்.
- ❁ ஒருவர் மற்றவரைப் புரிந்துகொண்டு மற்றவர் கருத்துக்களை மதிக்க வேண்டும்.
- ❁ தேவை, அளவு, முறை, காலம் என்பதில் ஏற்படும் வேறுபாடு களை விட்டுக்கொடுத்தல் மூலம் சரிசெய்தால் பிணக்கு எழாது.

- தாய்மார்கள் வரவு செலவைத் திட்டமிட்டுச் செய்வதால் பொருளாதாரப் பிணக்கு இருக்காது.
- குடும்பத் தலைவர்க்குத் தன்முனைப்பு கூடாது.
- சலனமற்ற, விசாலமான மனம்தான் எதையும் தாங்கும்.
- பிறர் குற்றத்தை பெரிபடுத்தாமை, உடன் சுட்டிக்காட்டாமை, விட்டுக்கொடுத்தல், தியாகம், மன்னிப்பு தேவை.
- பிறரின் கடுஞ்சொற்களை அவை சொல்லப்படாததுபோல் பாவிக்க வேண்டும்.
- நல்ல கருத்தேயாயினும் வாழ்க்கைத் துணைவர் ஒத்துக் கொள்ளவில்லையெனில் சிறிது காலம் தள்ளி வைத்தல் அவசியம். பால் உறவிலும் விட்டுக் கொடுத்தல் தேவை.
- கணவன் - மனைவி இருவரும் ஒருவர் மேல் மற்றவர் குறை கூறக்கூடாது.
- குழந்தைகள் முன் தம்பதியர் சண்டை சச்சரவு கூடாது.
- தம்பதியர் உறவை மதித்து, பெற்றோர் மக்கள் கூட்டுறவை மேம்படுத்த வேண்டும்.
- தேவை, தன்மை, தரம் காலத்தில் ஒருவருக்கொருவர் வேறுபாடு ஏற்படுவது இயல்பு. எனவே விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை, மன்னிப்பு கடைப்பிடிக்க வேண்டும்.
- குடும்ப அமைதியை இழந்து பெறுவது அது ஞானமேயினும் அதனால் ஒரு பயனும் வராது.
- அன்பு, அருள், இன்முகம், கலை இவற்றோடு கூடிய உருவப் படங்களை மாட்டி வைத்தால் குடும்பத்தில் அமைதியும் - இன்பமும் நிலவும்.

## 216. குடும்பமும் ஞானமும்

- கணவன் மனைவி உறவு இயற்கையாகவே ஓர் ஆணுக்கும் - பெண்ணுக்கும் வந்த தொடர்பு. ஆணும் - பெண்ணும் சேர்ந்து வாழுகின்ற வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. அதில் தான் நிறைவு வரும். ஞானமும் வரும். அந்தவகையில் இருவரும் ஒருவரோடொருவர் ஒத்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவரிடத்தில் ஒருவர் வளைந்து கொடுத்து, ஒருவரை யொருவர் தன்னிலும் மேலாக மதிக்கின்ற வகையில் சில தியாகமும் செய்தாக வேண்டும்.

## 217. குரு

- ❖ எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும் தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத் தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்.
- ❖ வினைப்பதிவுகள் கருமையத்தில் அலையாக சுருங்கியுள்ளது. இதைத் தூய்மை செய்துகொள்ள தேவை தவம், அறம். தவம், அறம் முறையாக உணர்ந்தவர்கள் பிறருக்கு உணர்த்தும் தகுதி பெற்றபோது அவரைத்தான் ஞானகுரு என்கிறோம்.
- ❖ உன்னையோ, கடவுளையோ அறிய ஒரு குறுக்கு வழியுண்டு. தன்னை உணர்ந்து அந்நிலையில் நிலைத்து வாழும் தனிக்கருணை வடிவான குருவை அடைந்தால் போதும்.
- ❖ குருவின் எண்ணம் இல்லாமல் குண்டலினி ஏறாது.
- ❖ எனக்கு குரு எத்தனையோ பேர், எங்கெங்கே போகிறேனோ அங்கே யார் என்னென்ன சொல்கிறார்களோ அவற்றையெல்லாம் எடுத்துச் சேர்த்து வைப்பேன். இப்படிப் பார்த்தால் எனக்குக் குரு என்று எடுத்தீர்களானால் நூறு குரு இருப்பார்கள். பண்பாட்டில் வந்தது என்னுடைய அனுபவம். சித்தர்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு எடுத்தது. அதற்கு மேலாகச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் என்று எனக்கு குரு பலர்.
- ❖ நான் வான்காந்த அலையில் கலந்துள்ளேன். உங்களுக்குத் தவத்தில் எந்த இடர் ஏற்பட்டாலும் என்னை நினைத்துக் கொள்ளுங்கள். நினைக்கும்போது நான் உங்களோடு கலந்து விடுவேன். என் கையைப் பிடித்துக்கொண்டே நீங்கள் தவத்தில் உயரலாம். உங்களுக்கு வரும் எந்த இடரையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.
- ❖ குருவானவர் உருவத்தில் மனிதர் - அரூபத்தில் தெய்வம்.
- ❖ இந்த அரும்பிறவியில் முன் வினையறுத்து எல்லையில்லா மெய்ப் பொருளை அடைவதற்கு வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வேன்.
- ❖ தவத்தை குருமூலம் தான் பெற்று பழகுதல் வேண்டும். என்றாலும் குரு என்பவர் எங்கிருந்தோ வருகிறார் என்று எண்ண வேண்டாம். அது உங்களுடைய வினையின் பதிவுதான். நீங்கள் செய்த

கர்மத்தின் மூலமாக, வினையின் பயனாக நல்லதைப் பெற வேண்டும் என்ற உங்களது எண்ணம் ஓங்க உங்களது மனதின் ஊடே உள்ள அந்தச் சக்தியானது தானாகவே வழிகாட்டுகிறது. அந்த நேரத்திற்கு வருபவனைக் குரு என கொள்கிறீர்கள்.

## 218. குரு காணிக்கை

✻ குரு காணிக்கை என்பது ஒன்று உண்டு. அதை நான் உங்களிடம் வேண்டுகிறேன். உங்களின் சினத்தை, பொறாமையை, தவறான செய்கைகளை எனக்குக் குரு காணிக்கையாக இன்றிலிருந்து தந்துவிட வேண்டுகிறேன்.

✻ குரு காணிக்கையாக நீங்கள் காலையில் எழுந்தவுடன் வாழ்க வையகம் - வாழ்க வளமுடன் என்று வாழ்த்தினால் அதுவே பெருமதிப்புள்ள காணிக்கையாகும். அனைத்து உள்ளங்களிலும், எழும் இவ்வொலி அலை, உலக மக்கள் மனதிலே ஊடுருவி அமைதிக்கு ஏற்ற பணிகளைச் செய்யத் தூண்டும்.

## 219. குருகுலக் கல்வி

✪ ஆலயங்கள், மடங்கள், ஆதினங்கள் இவைகளிடம் முடங்கிக் கிடக்கும் பொருட்களையும் நிலங்களையும் கொண்டு இயன்ற மட்டும் இந்தக் குருகுலக் கல்வி முறையை பரப்பலாம்.

## 220. குழப்பங்கள்

❁ ஆன்மீகத் துறையில் போதனை, பயிற்சி, சாதனை பலன் கண்டு நிறைவு காணும் சோதனை அனைத்தும் ஒன்றிணைந்த நமது கர்மயோக வாழ்க்கை நெறியாக மனவளக்கலை உலகில் பரவினால் மனித குலத்தில் இன்றுள்ள குழப்பங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்பது திண்ணம்.

## 221. குழந்தை

☆ குழந்தைகள் மனத்தில் நம்பிக்கையை செதுக்குகிற சிற்பிகள்தான் பெற்றோர்கள்.

☆ பெற்றோர்களுடைய வினைத்தொடரே குழந்தை.

☆ பிள்ளைகள் முன்னால் பெற்றோர் சண்டையிட்டால் பிள்ளைகள் மனநிலை பாதிக்கும்.

☆ குழந்தைகளை நாள்தோறும் இரண்டு முறை வாழ்த்தி வர நல்ல எதிர்காலம் குழந்தைகளுக்கு உண்டு.

☆ நல்ல குழந்தை வேண்டுமானால் பெற்றோர்கள் உடலை, உயிரை, அறிவைச் செம்மையாகப் பேணி காக்க வேண்டும்.

☆ ஒரு குழந்தையின் உற்பத்தியானது பெற்றோர்களுடைய உடல், உயிர், அறிவு இவற்றின் தரத்திற்கு ஏற்றவாறுதான் அமையும்.

☆ குழந்தைகளுக்காக உயர் கல்வி, நல்ஒழுக்கம், நற்பண்பு, பக்தி, பிறரை மதிப்பதை கற்றுக்கொடுத்து ஆளாக்குவதே உண்மையான செல்வமாகும்.

☆ கணவன் - மனைவி உறவு சரியான முறையில் அமைந்தால் தான் வாழ்க்கை அமைதியாக இருக்கும். எந்த காரியத்தைச் செயல்படுத்தினாலும் வெற்றியாக அமையும். பிறக்கக்கூடிய குழந்தைகள் நல்ல குழந்தைகளாக - குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நல்ல குழந்தைகளாக இருப்பார்கள்.

## 222. குழந்தை வளர்ப்பு

✧ பிறக்கின்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி பெற்றோர்கள் மக்கள் பாசம் எழாமல் செய்து, இறக்கின்றோர் சொத்தும் - முதியோர், நோயுற்றோர், இவர்களையும் பொது ஆட்சி ஏற்றுக் கொண்டு, அறப்பணிக்கே தகுதியாகக் குழந்தைகட்கு அறிவு, தொழில், கல்விகளைப் புகட்ட வேண்டும்.

✧ குழந்தை வளர்க்கும் சமயத்தில் குடும்பத்தில் பெரியோர்களின் அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 223. குழந்தைப்பேறு

✿ குழந்தைப்பேறு உண்டாவதற்கு முன்னதாகவே கணவன் மனைவு உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதை நமது பண்பாட்டில் நாம் வளர்க்க வேண்டும். ஒருவருக்கொருவர் பிணக்கு எழாது உள்ள குடும்பத்தில்தான் குழந்தைகள் நல்லா இருக்கும். அங்கு பிணக்கு இருக்குமேயானால் அதில் உள்ள

போராட்டம் குழந்தைகளையும் பாதிக்கும். மனம், உடல்நலம் கெட்டதாகத்தான் அமையும். இதை மிகவும் முக்கியமாகக் காண்கின்றபோது, கணவனும் ஒத்துழைக்கணும். மனைவியும் ஒத்துழைக்கணும். உணர்ந்து கொள்ளணும். ஒருவருக்கொருவர் உள்ளத்தைப் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் உதவி வாழ்வதற்காக இங்கே வந்தாச்சு. திருமணம் ஆச்சு. வாழ்ந்துதான் ஆகணும். இனி ஒருத்தருக்கொருத்தர் உதவித்தான் ஆகணும் என்ற அளவிலே அவர்கள் வந்துவிட வேண்டும்.

## 224. குணம்

- நாம் ஏற்கனவே எண்ணிய எண்ணங்களே நமது மன அலைகளாக மாறி செல்களிலும், உடலிலும் மூளையிலும் இயக்கப் பதிவாக அமைந்து விடுகின்றது. அவ்வாறு பழகப் பழக மனம் தன்னுள்ளேயே ஒரு தன்மையை ஏற்படுத்திக் கொள்கிறது.
- மனிதனாக வாழ்ந்து எத்தனை காலமோ, எத்தனை பிறவிகளோ அதைவிட விலங்கினமாக வாழ்ந்த பிறவிகள்தான் அதிகம். அதனால் விலங்கினக் குணம் நம்மிடம் அதிகமாக இருக்கும்.
- பணத்திற்கும், பண்புக்கும் நடக்கும் போட்டியில் மனிதர்கள் குணத்தில் குறைந்து விடுகின்றனர்.
- மனிதனில் மிருகம் தமோ குணம் - மனிதனில் மனிதன் ரஜோ குணம் - மனிதனில் தெய்வம் சாத்வீக குணம்.

## 225. குண்டலினி வாழ்க்கை

- குடும்ப வாழ்க்கையைக் குண்டலினி யோகம் பாதிக்காது. குண்டலினி தீட்சை பெற்ற 15 நாட்கள் வரை பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பது நல்லதுதான். சீக்கிரமாக உயிர்ச்சக்தியைத் தெளிவாக உணரலாம். மேலும் அது பின்னால் துரியம் வாங்குவதற்கு நல்ல அஸ்திவாரமாகவும் அமையும். பின் குடும்ப வாழ்க்கையையும், வாழ்க்கைத் துணைவரை திருப்திப்படுத்த வேண்டிய பொறுப்பு உணர்ச்சியும் தவத்தினுடைய மேம்பாட்டை எந்த வகையிலும் பாதிக்காது.

## 226. குற்றங்கள்

* விலங்கினங்கள் அந்த விலங்கின வாழ்க்கையில் செய்த குற்றத்தை மனிதன் தொடர்ந்து செய்கிற வரையில் விலங்கின மாகத்தானே அவனும் இருக்கிறான்?
* முதலில் குற்றம் என்றால் என்ன? துன்பத்தை விளைவிக்கக் கூடிய செயல்கள் யாவும் குற்றம். இறையாற்றலுக்கு முரண் பாடாக மனிதனின் ஆற்றல் செயல்படும்போது விளையக் கூடிய முரண்பட்ட விளைவுகள் குற்றம். இதைத்தான் பாவம் என்றும் சொல்கிறோம்.
* ‘குற்றம் செய்துவிட்டேனே! ஐயோ - செய்துவிட்டேனே!’ என்று உருகிக் கொண்டிருப்பதில் யாருக்கும் ஒரு பயனும் இல்லை.
* குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்பதே சட்டத்தின் நோக்கம் ஆகும். அது சமுதாயத்திற்கு அவசியம்தான். ஆனால் குற்றம் ஏன் எழுகிறது என்று பார்ப்பதற்கு சமுதாயத்திற்கு அக்கறை வேண்டாமா?

## 227. குறை காண்போர்

✪ பறை ஒலியால் சங்கீதம் பயனற்றுக் காண்பதைப்போல் குறை காண்போர் அறிவியல் நற்குணங்கள் பயனற்றிருக்கும்.

## 228. குறைபாடுகள்

❁ இயற்கையில் எவ்விதக் குறைபாடும் இல்லை. மனிதனிடமே தான் சில குறைபாடுகள் உள்ளன.

## 229. குற்றவாளி

✫ குற்றவாளி பாவியென்று யாருமில்லை உலகினில் குறை களுக்குக் காரணமோ பழைய சமுதாயம்.

## 230. குணநலப்பேறு

✧ மனம் தூய்மை அடைந்து மேலும் மேலும் அகத்தூய்மையில் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதே குணநலப்பேறு.

## 231. கொலைக்காரர்கள்

- ஒவ்வொரு போர் முடிவிலும் மீதியாகும் ஆட்கள் கொலை காரர்கள்தான்.

## 232. கோள்கள்

- குழந்தை பிறந்த நாளில், பிறந்த நேரத்தில் எந்தெந்த கோள்கள் வானில் எங்கெங்கு இருக்கிறதோ அதுதான் குழந்தைக்கு ஒத்தது. அதன் பிறகு அந்தக் கோள்கள் ஓட்டத்தினால் பூமிக்கு அருகிலேயோ அல்லது விலகியோ செல்லும்பொழுது அதிலிருந்து வருகின்ற கதிர்வீச்சில் அழுத்த மாற்றம் ஏற்படும். அந்த அழுத்த வேறு பாட்டிற்குத் தகுந்தவாறு உடலில் உள்ள இரசாயனங்களில் தோன்றும் மாற்றம் உடல் மன இயக்கத்திற்கு ஒத்ததாக இருந்தால் நன்மை அதிகரிக்கும். அதன் ஒவ்வாமை மனதிற்குத் தீமை விளைவிப்பதாக அமையும்.
- கோள்களிலிருந்து வரும் காந்த சக்தி நமது காந்த சக்தியுடன் சேரும்போது இருப்பு அதிகமாகி, இன்பம் உண்டாகிறது. ஆனால் வந்த காந்த சக்தி நமது உடல் செல்களின் தன்மையையோ அமைப்பையோ பாதிக்குமானால் மின்குறுக்கு ஏற்பட்டு துன்பமும் உண்டாகும்.

## 233. கோடீஸ்வரன்

- வெற்றி உங்கள் கையிலே, இன்பம் உங்களிடமிருந்து மட்டும்தான். நீங்கள் யார் மனவளக் கலைஞர்களல்லரோ? வெற்றிகளைப் படையுங்கள். அவற்றைப் பிறருக்கும் படையுங்கள். நீங்கள்தான் கோடீஸ்வரன். இதைத்தான் ஐயமிட்டுண் என்றார்கள்.

## 234. கூட்டுத்தவம்

- நாம் நாள்தோறும் குளிக்கிறோம். ஒரு நாள் குளிக்காவிட்டால் அழுக்கும், வியர்வையும், நாற்றமும் உண்டாகின்றன. நாள் தோறும் குளித்துக்கொண்டே இருந்தால்தான் உடல் சுத்தமாக இருக்கும். இதேபோல் புலன் மயக்கத்தால் வாழும் மனிதனுக்கு

உயிர் தூய்மை செய்துகொள்ள மனவளக்கலை மன்ற உறுப்பினர்கள் வாரந்தோறும் நடத்தும் கூட்டுத்தவ மன்றத்திற்கு செல்வது அவசியம்.

## 235. கூர்தலறம்

- அணுமுதற்கொண்டு அண்டங்கள் ஈறாக, ஓரறிவு முதல் ஆறறிவு வரையில் வந்த சீரான மாற்றங்கள்தான் பரிணாமம். காந்த ஆற்றல் இடத்திற்கேற்ப எழுச்சி பெற்ற இயக்கங்கள் விளைவுகளாக வருவதே இயல்பூக்கம். எந்த இயக்கமானாலும் இடத்திற்குத் தக்கபடி துல்லியமான விளைவாக, இன்ப, துன்ப உணர்ச்சிகளை அளிப்பது கூர்தலறம்.

## 236. கூட்டுறவு

- உழைப்பினது உயர்வு கெடச் செய்யும் தனியார் ஒழுங்கற்ற வணிகமுறை ஒழிய வேண்டும். உழைப்பாளர் கூட்டுறவு முறை இதற்கு ஒத்தவழி உயர்ந்தவழி பொறுப்புடைத்து.
- தனிமனிதன் பணம் சேர்க்க அனுமதித்து விடினும் சமுதாயத்தை வட்டி இலாபம் என்று எங்கும் இனி எவரும் கவராமல் கூட்டுறவில் நிலங்கள் இடவசதி தொழிற்சாலை வாணிபம் ஏற்றிடுவோம்.

## 237. கைரேகை

- மனித உடலில் (Electrical, Mechanical and Chemical Energy) அவ்வப்போது மாறும், கிரகங்களுக்கு ஏற்றவாறு உடலில் சருமத்தில் சில இரசாயன மாற்றங்கள் உண்டாகும். அதற்குத்தான் கைரேகை, மச்சம் என்று சொல்வார்கள். இவைகள் எல்லாம் என்ன எடுத்துக்காட்டுகின்றன என்று பார்த்து, கிரகங்களில் இன்னின்ன அழுத்தம் இருக்குமேயானால், இன்ன இடத்தில் மச்சம் வரும் என்று கண்டுபிடித்தார்கள்.
- கைரேகை இப்படித்தான் வரும் என்பதையும் அது அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும்போது அந்தக் கிரகங்களுடைய வேறுபாட்டினாலும் கைரேகை மாறிக்கொண்டே வரும்.

அதைக் கொண்டு பலன் சொல்வார்கள். ஆனால், அவ்வளவும் சரியாக இராது. இயற்கையில் நடைபெறக்கூடிய நிகழ்சிகள் அவ்வளவையும் நுண்மையாகக் கணிக்க முடியாது. கூறப்படும் ஹேஸ்யங்கள் ஓரளவுதான் சரியாக இருக்கும்.

## 238. சக்தி

- ✧ சிவம் இயங்கும்போது அதனைச் சக்தி என்று அழைக்கின்றோம்.
- ✧ மெய்ப்பொருள் தனக்குள்ளாகவே அடங்கிய ஓர் ஆற்றலைப் பெற்றது. அதனால் ஒரு நுண்ணிய அளவிலே வேகத்தைப் பெற்று அது இயங்க ஆரம்பிக்கின்றபோது அதைத்தான் ‘சக்தி’ என்றும் ‘பரமாணு’ என்றும் கூறுகின்றோம்.
- ✧ நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி நமக்கு உள்ளும் புறமுமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அது நாம் செய்வது எல்லா வற்றையும் எடுத்துக்காட்டி வழிநடத்துகிறது.

## 239. சகிப்புத்தன்மை

- ❁ மனைவியோ - மகனோ தவறான கருத்தை வைத்துக்கொண்டு அதன் காரணமாகப் பிணக்கை ஏற்படுத்தினால், அதாவது அவர்கள் பிணங்குவதற்கு நியாயமே இல்லையென்றால், அவர்கள் கருத்து எந்த வகையில் தவறு என்பதை அன்போடு விளக்கிக் காட்ட வேண்டும். முறையாக உணர்ச்சிவயமின்றி, சிதறா மனத்தோடு, விளக்கினால் ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் ஒத்துக்கொண்டு பிணக்கினை ஒழிப்பார்கள். இணக்கத்தை வற்புறுத்தும்போதும் இன்சொல்லையே உள்ளமும் உதடும் உபயோகப்படுத்த வேண்டும். அச்சொல்லினால் கெடுதல் ஒழியும், நன்மைகள் பல பெறலாம். பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழியாகும்.

## 240. சகோதரத்துவம்

- ❂ உலக சகோதரத்துவம் என்பது ஒரு பேச்சளவில் இருக்கிற கொள்கையாக இருக்கக் கூடாது.

## 241. சத்சங்கம்

❖ சத்சங்கம் = சத் + சங்கம். சத் - இறைவன். சங்கம் - சபை.

❖ எங்கே நல்வழி நடப்பவர்கள் கூடி ஒரு மனதாக நல்லதே சிந்தித்து - நல்லதே பேசி நல்லதே செய்து இறைவனைத் தியானிக்கிறார்களோ அங்கே சத் சங்கம் இருக்கிறது.

## 242. சங்கீதம்

✻ சாப்பாடானாலும் சரி, தியானம் ஆனாலும் சரி கொஞ்சம் நேரம்தான் வேண்டும். நாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. நாள் முழுவதும் தியானம் செய்து கொண்டேயிருக்க முடியாது. அதுபோல் மனதுக்கு ஒரு தொடர்பு ஈடுபாடு ஒரு விருப்பமான இடத்தில் பதிய வைப்பதற்கு ராகம் அதாவது சங்கீதம் அவசியம்தான். சங்கீதத்தினால் ஒவ்வொரு ராகத்திலும் அது ஒவ்வொரு நரம்பிலும் ஜீவகாந்த சக்தியை தூண்டிவிட்டு நன்மை செய்ய முடியும் என்றாலும், அதுபோலவே தீமை கூடச் செய்ய முடியும். அதுவும் இருப்பதனால் நல்ல இசையைக் கண்டுபிடித்து அதைப் பரப்புவது நல்லதுதான்.

## 243. சடங்குகள்

✪ மனோதத்துவம், சுகாதாரம், பொருளாதாரம் என்ற அடிப் படையில், பாமரர்களும் ஒழுங்காக வாழ்க்கை நடத்த ஏற்ற நல்வழிகள் சடங்குகள், காலம், இடம், அறிவின் வளர்ச்சி, சந்தர்ப்பம் இவைகளுக்கேற்பச் சடங்குகள் உருவாகின்றன. அவை மாறுவதற்கேற்பச் சிலபல சடங்குகள் மாற்றப்படவும், திருத்தப்படவும் ஒழிக்கப்படவும் வேண்டும்.

✪ பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சீர்திருந்துவதும், முன்னேறுவதும் அறிஞனின் இயல்பு. பழக்கத்திற்கு அடிமையாவது, அதிலிருந்து மீளமுடியாமல் துன்புறுவது பாமரனின் இயல்பாகும். ஒரு சடங்கு தேவையற்றது எனினும் அது தனிமனிதன், சமுதாயம் என்ற ஒவ்வொரிடத்திலும் பழக்கத்தால் நீடிக்கிறது.

✪ பத்திரம் எழுத ரிஜிஸ்டர் செய்து அசையாப் பொருட்களின் உரிமையை மாற்றிக் கொள்ள முடியாத காலத்தில் ஒரு புதுவீடு கட்டியவர் சமுதாயம் அங்கீகாரம் செய்வதற்கென ப் புதுமனைப்

புகுவிழா நடத்தினார். இக்காலத்தில் இம்முறையால் மனித சக்தியும் பொருளும் விரயமாகின்றன. காரணம், விளைவுகள் இவற்றைப் புரிந்துகொள்ளாமல் பின்பற்றப்படுகின்ற சடங்கு மூடப்பழக்கம் எனப்படுகின்றது.

- மணப்பெண் மாப்பிள்ளை இவர்களுக்கு ஏதேனும் அங்கவீனமோ மறைவான வியாதியோ இருக்குமெனில் அவற்றைக் கண்ணியமான சோதனை மூலம் அறிவதற்கு ஒரு சிலர் நலங்கிடுதல் என்ற முறையைக் கையாளுகின்றார்கள். உடைகளைக் களைந்து நம்பிக்கையான உறவினர்களால் சோதனை இடுகின்ற ஒரு சிறந்த முறை இது. மருத்துவர்களால் மணமக்களைச் சோதனையிடும் பழக்கம் அமுலில் வருகின்ற வரையில் நலங்கிடுகின்ற முறை பின்பற்றப்படுவதால் தவறில்லை.

- தேவையற்ற சடங்கு முறைகளை மனோதத்துவம், பொருளாதாரம், சுகாதாரம் என்ற மூன்று பிரிவுகளையும் ஒன்றுசேர்த்து ஆராய்கின்ற திறனுடைய அறிஞர்களே மாற்றுவதற்கும், திருத்துவதற்கும், ஒழிப்பதற்கும் தகுதியுடையவர்கள். சடங்கு முறைகளைக் கூட்டிக்கொண்டே வாழ்க்கையை பாரமாக்கிக் கொள்ளுகின்ற போக்கு இனி இச்சமுதாயத்தில் மாறியே ஆகவேண்டும்.

- சடங்கு முறைகளில் அல்லது மூடப்பழக்க வழக்கங்கள் செய்ய வேண்டிய எந்த மாற்றமும் ஒரு தனிப்பட்ட மனிதனால் மட்டும் செய்யப்படுவதால் எந்தவிதப் பயனும் விளைவதற்கு இல்லை. பல மக்கள் கூடி ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் பண்போடும் செயல்படுவோம்.

- அறிவு உண்மையான இறைநிலையை உணரும்வரைதான் மதச்சடங்கு. மதச்சின்னங்கள் தேவைப்படலாம். உணர்ந்தபின் அவை எல்லாம் தேவையற்றதாகிவிடும். கட்டிடம் கட்டும் வரைதான் சாரம் தேவை. கட்டி முடித்தபின் சாரம் தேவையில்லை.

- சடங்கு முறைகளை கூட்டிக்கொண்டே - வாழ்க்கையை பாரமாக்கிக் கொள்ளுகின்ற போக்கு இனி மாறியே ஆக வேண்டும்.

- கலியாணங்கள், திருவிழாக்கள், பண்டிகை தினங்கள், சாவு இவைகளைப் போன்ற சடங்குகளை ஒழுங்குபடுத்திச் சமுதாயப் பொதுவில் நடத்த முயற்சி எடுக்க வேண்டும்.

- கலியாணங்கள், திருவிழாக்கள், பண்டிகை தினங்கள், சாவு, இவைகளைப் போன்ற சடங்குகளை ஒழுங்குபடுத்திச் சமுதாயப் பொதுவில் நடத்த முயற்சி எடுக்க வேண்டும்.

## 244. சட்டம்

- சட்டத்தை மாற்றுவது என்பது வேறு; சட்டத்தை குறை கூறுவது என்பது வேறு. ஆனால் போடப்பட்டுவிட்ட சட்டத்திற்கு நாம் அடிபணிந்துதான் நடக்க வேண்டும். ஏனென்றால் எல்லோரும் சேர்ந்து சட்டம் நிறைவேற்றிவிட்ட பிறகு, அதை மதிக்கவில்லை யானால் சமுதாய அமைப்பிலே குழப்பமல்லவா உருவாகும்?
- சட்டங்களை இயற்றுவது குற்றம் இல்லாத தூயோர்கள் மட்டுமல்ல. பெரும்பாலும் உலகில், உள்ள சட்டங்களைக் குற்றவாளிகளே செய்திருக்கின்றார்கள்.
- ஆண்களே எழுதினதால், 'பெண்கள் நமக்கு வேலைக்காரர்களாக இருக்கட்டும்' என்ற கருத்தில் எல்லாச் சட்டங்களையும் எழுதி விட்டார்கள்.

## 245. சப்தம்

- ஓங்கார நிலையினிலே மௌனம் என்போம் - உச்சரிப்பில் அதனையே சப்தம் என்போம்.

## 246. சங்கற்பம்

- அருட்பேராற்றலின் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்வோம்.

## 247. சமத்துவம்

- உடல் வலிவு போன்றவற்றால் உயர்ந்தவர்கள் மற்றவர்களுக்கு அவற்றைக் கொண்டு உதவி செய்து, எல்லோருடைய பிறப் புரிமையையும் ஒப்புக்கொண்டு, அவர்கள் சுதந்திரத்தைக் காக்கத் தங்களாலாகிய கடமைகளைச் செய்து எல்லோருடனும் ஒத்தும் உதவியும் வாழுகின்ற தகைமையே சமத்துவம் ஆகும்.

## 248. சமத்துவ வாழ்வு

- பொன், பணம் என்கின்ற புகை போன்ற திரைமறைவில் பொருளாதாரம் என்ற பொக்கிஷம் உள்ளவரை சமத்துவ வாழ்வு ஏற்படாது.

## 249. சமாதானம்

- சமாதானம் எங்கே இருக்கிறது? எல்லோரும் சமாதானம் யுத்தத்தில் இருக்கிறது என்று நினைக்கிறார்கள்.

## 250. சமையல்

- விவசாயமும் சமையலும் மாத்திரம் எப்போதும் தொடர்ந்து செய்து வரப்பட வேண்டும். அனைவரும் சேர்ந்து முறை வகுத்து சமையல் செய்து உண்ணும் பழக்கம் வேண்டும்.

## 251. சமுதாயநல வாழ்த்து

- உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம் உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்.
- உலகனைத்து நாடுகளின் எல்லை காக்க ஒருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்.
- உலகில் போர், பகை, அச்சமின்றி மக்கள் உழைத்துண்டு வாழ வேண்டும்.
- உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும் ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்ய வேண்டும்.

## 252. சமுதாயம்

- பொருளாதாரம், தொழில், கல்வி, ஆட்சி இவற்றில் ஒன்றாலோ பலவாலோ பல குடும்பங்கள் ஒன்றிணைந்த மக்கள் கூட்டுறவு வாழ்க்கை வட்டம் சமுதாயம் ஆகும்.
- எல்லோரும் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய முறையில் கடனாற்றினால் மனித சமுதாயம் எப்போதும் வளமுடன் இருக்கும். எல்லோரும் இன்புற்று வாழலாம்.
- தனிமனிதனால் சமுதாயமும் சமுதாயத்தினால் தனிமனிதனும் ஆக்கவும் காக்கவும் படுகிறார்கள். இன்று சமுதாயம் என்பது உலக மனித சமுதாயம் முழுவதையுமே குறிக்கும்.

- நாம் சமுதாயத்தின் ஓர் அங்கம், சமுதாயத்தை நலமாக வைத்துக் கொள்வது நமது கடமை.
- மனிதன் அனுபவிக்கும் பொருட்களும் சமுதாய கூட்டுறவில் பெற்றதன்றி தனி ஒருவன் காரணமாக முடியாது.
- ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்கும் இந்த உடலும் உறவும் சமுதாயத்திலிருந்து அவன் பெற்றவையாகும்.
- தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவறிந்து இனிமை காத்தல், இதனால் அறநெறி தழைத்து சமுதாய வளம் சேர்க்கும்.
- பொன் - பட்டு மாறினாலே சமுதாயத்தில் பெரிய மாற்றம் வந்துவிடும்.
- ஒவ்வொரு மனிதனையும் சமுதாயம்தான் காப்பாற்றுகிறது. ஒவ்வொரு மனிதனம் சமுதாயத்திலே தன்னை இணைத்துக் கொண்டு சமுதாயத்தை வளமுறச் செய்து, சமுதாய முதலீடு குறையாது பார்த்துக் கொள்ள வேண்டும்.
- தனிமனிதனுடைய, ஒவ்வொருவருடைய ஆற்றலும் தன்நலத்தைப் பேணுவதோடு சமுதாயத்திற்கும் ஆக்கம் தருவதாக இருக்க வேண்டும்.
- ஆதிகாலம் தொட்டு இன்றுவரையில் கண்டுபிடித்த நுட்பங் களும் வாழ்க்கை அனுபவங்களும் நிறைந்த பாதுகாப்பான காட்சி தவசாலை, கலாசாலை சமுதாயம் ஆகும். ஒவ்வொருவரும் பிறக்க, வளர, வாழ மனிதனுக்கு இடமளிக்கும் அறநிலையம் சமுதாயம்.
- சமுதாயமே தனி மனிதனை உருவாக்கும் தொழிற்சாலை. உயர்வாக்கும் கலாசாலை - வாழவைக்கும் அறநிலையம் - நீதி வழங்கும் ஆட்சிமன்றம். ஆகவே ஒவ்வொருவரும் சமுதாயத்தை மதிக்கும் அளவே சிறப்போடு வாழ முடிகின்றது.
- சமுதாயத்தில் மக்கள் ஒவ்வொருவரும் தேவை, விருப்பம், தகுதி ஆகியவற்றால் வேறுபட்ட நிலைகளில் வாழுகின்றார்கள். பலர் விருப்பத்திற்கும் தேவைக்கும் மதிப்பளித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்வது பாதுகாப்பான ஒழுக்கமான உயர்முறை.
- சமுதாயத்தின் மேன்மையே தனிமனிதன் வாழ்வின் இன்பமாக இருப்பதால் ஒவ்வொருவரும் தான் வாழ்வதோடு சமுதாய நலத்திற்காக - மேன்மைக்காக இயன்றவரையில் பாடுபட வேண்டும்.

- தேவையுணர்வு, பழக்கம் ஆகிய இரண்டாலும் செயல் முறைகளிலும் கருத்திலும் அழுத்தமான வலுவைப் பெற்றுள்ள மக்கள் கூடிய சமுதாயத்தைக் குறுகிய காலத்திலோ, ஒருவராலோ அல்லது சிறு குழுவினராலோ திருத்திவிட முடியாது. ஆயினும் அறிவில் உணர்ந்த நன்முறைகளையும் கருத்துக்களையும் முறையோடு சமுதாயத்திற்கு உணர்த்த வேண்டியது அறிந்தோர் கடமை.
- தனிமனிதன் சொத்துரிமையின் கீழ் வாழும் மக்கள் தங்கள் பொருள் வருவாய் அல்லது அறிவு, உடல் ஆற்றல்கள் இவற்றில் நூறில் ஒரு பங்காகிலும் சமுதாய நலனுக்கென ஈகையாக்கி ஒதுக்கிப் பயன்படுத்துவது சமுதாயத்தைச் சிறப்பிக்கச் செய்யும் நற்றொண்டு ஆகும்.
- அறம், தத்துவம், ஞானம் இவை எந்த அளவு சமுதாயத்தில் ஓங்குகின்றனவோ அந்த அளவே சமுதாயம் பண்பாட்டில் உயரும்; மக்கட்குலம் சீரும் சிறப்பும் பெற்று இனிது வாழும்.
- சமுதாயமே தனி மனிதனை உருவாக்கும் தொழிற்சாலை.
- சமுதாயமே மனிதனை உயர்விக்கும் கலாசாலை.
- சமுதாயமே மனிதனை வாழவைக்கும் அறநிலையாகும்.
- சமுதாயமே மனிதனுக்கு நீதி வழங்கும் ஆட்சி மன்றம்.
- சமரசம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் இவையே மனித சமுதாயத்தில் இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- சமுதாயத்தின் உறவினாலும், கருணையினாலும், அறிவு மற்றும் உடல் உழைப்பினாலும் ஏற்படுகின்ற விளைவுகள்தான் ஒவ்வொரு மனிதனையும் உருவாக்குகின்றன.

## 253. சஞ்சித கர்மம்

☆ ஒவ்வொரு உடலும் சிற்றுயிரிலிருந்து எடுத்துக்கொண்டே வரும்போது ஒவ்வொரு உடலிலேயும் என்னென்ன அனுபவங்கள் நடந்ததோ அந்த அனுபவங்கள் எல்லாம் அந்தக் காந்த ஆற்றலில் திணிவு பெற்றிருக்கிறது. அதேபோல மனிதன் வரையில் வந்த எல்லா ஆற்றல்களும் கரு மையத்தில் இருப்பாக இருக்கும். இவ்வாறு தனது பெற்றோர் வரைக்கும் வந்த பதிவுகள் 'சஞ்சித கர்மம்' என்றும் முன்வினைப்பதிவு என்றும் அழைக்கப்படுகிறது.

## 254. சந்தர்ப்பம்

✧ சாமர்த்தியத்தைவிட சிலசமயம் சந்தர்ப்பம் மனிதனைப் புகழ், பொருள், செல்வாக்கு ஆகியவற்றில் உயர்த்தி விடுகிறது. ஒருவருக்குக் கிடைத்த அதே சந்தர்ப்பம் பிறருக்குக் கிடைக்கும் என்பதில் உறுதியில்லை. எனவே, ஒரு மனிதன் உயர்வு தாழ்வுகளுக்குச் செல்வம், புகழ் முதலியவற்றின் ஏற்றத்தாழ்வு களுக்குச் சந்தர்ப்பமும் ஒரு காரணமாக அமைகின்றது.

## 255. சாக்ரட்டீஸ்

❁ மெய்ப்பொருள் என்பது சுத்தவெளி, சூன்யம், பிரமம் என்பது ஆதிகாலத்திலேயே வந்துவிட்டது. அது பழக்கம் ஆகிப் போய் விட்டது. பழக்கம் இல்லாத நாட்டில் சாக்ரட்டீஸ் என்ற மகான் உண்மையான கடவுள் எது என்பதைக் கண்டுபிடித்தார்.

❁ இதுதான் கடவுள் - நீங்கள் சொல்வதெல்லாம் கடவுள் இல்லை என்று சாக்ரட்டீஸ் சொன்னார். அவ்வளவுதான். அப்படிச் சொன்னது மட்டுமல்லாமல் பாடம் கேட்க வந்த இளைஞர்களுக்கும் பாடமாக அந்த அரூபத் தத்துவத்தைச் சொல்லிக் கொடுத்தார். இதைப் பார்த்த அரசியல்வாதிகள் அவருக்கு மரண தண்டனை கொடுத்துவிட்டார்கள்.

## 256. சாபம்

❂ கணவன் மனைவி உறவிலே பகைமை அல்லது பிணக்கு இருக்குமேயானால் ஒருவர் மற்றவர்மீது சினம் கொள்வார்கள். அந்தச் சினமே ஒருவருக்கொருவர் சாபம்போல அமைந்துவிடும்.

❂ பகைமை உணர்வினால் ஏற்படக்கூடிய சாபம் தீயவிளைவுகள் அடிக்கடி ஏற்படும். நோய்களை உண்டுபண்ணும். பல தற்செயலான விபத்துக்களைப் பார்க்கிறோம். அந்த விபத்துக்களில் பல கணவன் மனைவி உறவில் பெற்ற சாபப் பதிவுகள்தான் காரணமாக அமைகின்றன. அந்தந்த இடத்தில் அவை செயல் பட்டு விபத்துக்களாக நடைபெறுகிறது.

## 257. சாதி

❖ பழக்கவழக்கம் பண்பாடு கலாச்சாரம் என்ற முறைகளால்தான் சாதிகள் நிலைத்தும் நீடித்தும் வருகின்றன. உயர்ந்த பண்பாடுகள்

மனிதவர்க்கத்திற்குப் பொதுவாகத் தேவையாவதால், அவை காப்பாற்றப்பட வேண்டும். மற்றவைகளைத் திருத்தி உயர்த்த வேண்டும். அதன் மூலமே இன்று நிலவி வருகின்ற சாதிபேதங்கள் மறைய முடியும்.

❖ கருவான நாதவிந்தில் சாதியேது? கற்பனையால் நாம் மிரண்டு பேசுகின்றோம்.

## 258. சாந்தம்

✻ வருமானம் கிடைக்கும்போது சேமித்து வைக்கும் பணம் தேவையானபோது உதவியாவதைப்போல், சாந்தமாக இருக்கும்போது கொள்ளும் உறுதி, கோபம் எழும்போது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் உண்டாக முன்வந்து நிற்கும்.

## 259. சாந்தி தவம்

✪ மூலாதார யோகம் எனப்படும் சாந்தி யோகம் தவக்கனலின் அதீதத்தை உடல்நலனுக்கும் உள்ளத்தின் நலனுக்கும் பயனாக்கிக் கொள்ளவும் உதவுகிறது.

✪ சாந்தி தவம் செய்துவந்தால் - நாள்பட்ட கர்ம நோய் என்று ஒன்று சொல்வார்கள். அதாவது இதுதான் வியாதி என்று தீர்மானமாகத் தெரிந்துகொண்டாலும், அதற்கு நிச்சயமாக இதுதான் மருந்து என்று கண்டுபிடித்துக் கொடுத்தாலும், அந்த வியாதி தீராது. அதுதான் கர்ம நோய். நீண்டகாலமாக இருந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட, எவ்வளவு நாளாக இருந்துகொண்டு இருக்கக்கூடிய கர்ம நோயாக இருந்தாலும் கூட நீண்ட காலம், ஒரு மாதம், இரண்டு மாதம், பல மாதங்கள் என்று தினந்தோறும் பல வேளை சாந்தியோகம் மட்டுமே செய்துவந்தால், மற்ற பத்திய நிமித்தங்களையும் கடைப்பிடித்து வரும்பட்சத்தில், அந்த நோய் மெல்லத் தீர்ந்துவிடும்.

✪ பைத்தியம் முதலிய மனநோய்கள்கூட சாந்தியோகமே செய்துவரும் அளவில் குறையும். காலத்தால் நீங்கும்.

✪ பஞ்சபூத தத்துவத்தில் மண்ணாகிய பிருதிவிக்கு உரிய இடம், மூலாதாரம். இங்கு நின்று தவம் ஆற்றுவதால் பூ கர்ப்ப ஆராய்ச்சி பற்றிய அறிவு விருத்தி ஆகும்.

✪ குண்டலினியின் ஏற்றம் பெற்றோர் உடனடியாகச் சாந்தியோகம் தெரிந்து பயிலுதல் வேண்டும். இது மூலாதாரப் பயிற்சி என்றும் கூறப்படும்.

## 260. சாஸ்திரம்

❁ அறிஞர்கள் மட்டும் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்ற இயற்கை அமைப்பை விளக்கும் வேதத்தில் உள்ள வாழ்க்கை உண்மைகளை மற்றவர்களும் உணர்ந்துகொண்டு, உணர்ந்ததை வாழ்க்கையில் பயனாக்கிக் கொள்ளக்கூடிய அளவில் அறிஞர்கள் விரித்துச் சொன்ன கருத்துக்களின் தொகுதி சாஸ்திரம் எனப்படும்.

## 261. சிக்கல்

☆ சிக்கலில்லாத வாழ்க்கையே இல்லை. சிக்கலைத் தீர்க்கும் வழி தெரியாமல்தான் துன்பத்தில் வாடுகிறோம்.

☆ வாழ்வில் சிக்கல்களே இருக்கக்கூடாது என்று எண்ணவோ இருப்பவற்றையெல்லாம் வேரோடு களைந்துவிட வேண்டும் என்ற முடிவு செய்யவோ, செயலாற்றவோ வேண்டாம். ஒரு சிக்கல் தீரும் இடத்திலேயே மற்றொன்று முளைத்துவிடும். எனவே, அவற்றைத் திட்டமிட்டுச் செயலாற்றி நீக்கிக் கொண்டால் மகிழ்ச்சியும், அமைதியும் பெறலாம்.

☆ ஒரு சிக்கலை விரைவாகத் தீர்த்துவிட உணர்ச்சிவயப்பட்டுச் செயலாற்ற வேண்டாம். அறியாமையால் சிக்கல்களை மேலும் உண்டாக்கிக் கொள்ளாமல் இருந்தால் போதும்.

☆ சிக்கல்களை நான்காகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அவை 1. ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இது மாற்ற முடியாத சிக்கல். 2. தள்ளிப் போட்டால் காலத்தால் சமுதாயத்தால் நடந்து விடும். நான் நினைப்பதால் நடப்பதில்லை. 3. அலட்சியப் படுத்த வேண்டியது. இது ஒன்றுமில்லை என்று விட்டு விட்டால் தானாகவே காலத்தால் மறைந்துவிடும். 4. என்னாலேயே உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்கள். காலம் தாழ்த்தினால் துன்பம் வரும்.

☆ எல்லாச் சிக்கல்களுக்கும் நம்மிடம் உள்ள ஒரு தவறுதான் காரணம். அதுதான் எதிர்பார்ப்பு. ஒருவர் பிறரிடமிருந்து எதையும் எதிர்பாக்கவில்லையெனில் அனைவரும் செல்வர்கள்!

- ☆ கவலை இல்லாத மனிதன் உலகில் உண்டு. சிக்கல் இல்லாத மனிதன் யாரும் இல்லை.
- ☆ உலக சிக்கல்களை ஒரு நொடியில் உணர்த்திடலாம். ஒருவராலும் அதனை உடன் திருத்த முடியாது.
- ☆ உழைப்பின்றி பொருள் கவர்தல், வேலையின்மை என்ற இரண்டு சிக்கல்களும் சமுதாயத்தில் எவ்வளவு தீமைகளை வளர்த்து வருகின்றன.
- ☆ சிக்கல்கள் தீர்வதற்கு இயற்கையிலேயே வழியிருக்கிறது. ஆனால் தற்பொழுது மனித வாழ்க்கையில் இருக்கக்கூடிய சிக்கல்களுக்குக் காரணம் மனிதனுக்கு மனிதனே - செய்யக் கூடிய தீங்குகள்தான்.
- ☆ சிக்கலிலே தவித்துக் கொண்டிருக்கக்கூடிய மனம் முனையில் இருக்கிறது. அந்த மனத்தின் அடியிலே இறைவன் இருக்கின்றான். அவன் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்குத் தயாராக இருக்கின்றான். அவன் பக்கம் திரும்புவதற்கு வழி காண வேண்டும்.
- ☆ கலைஞர்கள், அறிஞர்கள் இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அளவுக்கேற்றபடியே, மக்களுக்கு வாழ்க்கைச் சிக்கலிலிருந்து விடுபடும் திறமை, பொறுமை, ஆர்வம் இவைகள் ஏற்படும்.

## 262. சித்தர்கள்

- ✧ சித்தர்கள் இல்லறம், துறவறம் இரண்டிலுமே இருந்தார்கள். தங்களுக்கு வேண்டிய பொருட்களை அவர்களே ஈட்டி, பிறருக்கும் உதவினார்கள். அதேபோன்று அறிவுத்துறையிலும், மேன்மையடைந்து எல்லோருக்கும் அறிவுத் தொண்டாற்றினார்கள்.
- ✧ சித்தர்கள் இல்லறம், துறவறம் இரண்டுமிணைந்த நல்லற ஞானிகள் அவர்.
- ✧ தவத்திற்குப் பொருத்தமான தட்பவெப்பமானது ஆண்டு முழுவதும் இனிமையான பருவங்களாக நிலவி வந்ததால் - உலகின் வேறு பாகங்களிலிருந்தும் வந்த ‘ஆன்மீக ஆர்வலர்கள்’ தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். இங்கு சில காலம் வாழ்ந்து ஆன்ம சாதனை செய்து, வெற்றி பெற்ற பின் தங்கள் தங்கள் நாட்டுக்கு மீண்டும் சென்றனர்.
- ✧ ‘அகஸ்டஸ்’ என்ற பெயரிய மேல்நாட்டுக்காரர் தமிழகம் வந்து தவத்தில் தேர்ச்சி அடைந்தார். அவரைத்தான் நம் மக்கள்

அகத்தியர் என்றனர். அதேபோல் 'டைகர்' என்ற வெளிநாட்டுப் பெரியார் இங்கு பெற்ற பெயர் 'புலிப்பாணி' போகர் சீனத்திலிருந்து வந்தவர்.

✧ தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சுருங்கிய முறையில் கொண்டு வந்ததை நான் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து, மேலும் காலத்திற்கேற்ற வகையில் தேவையான மாற்றம் செய்து, பாதுகாப்பு சேர்த்து வெண்ணெயைப் போல் சத்தாக (எசன்ஸ்) திரட்டிக் கொடுத்துள்ளேன். இனி எப்போது வேண்டும் என்றாலும் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டு பிறர்க்கும் தொண்டு செய்து மன நிறைவும் பெருமையும் பெறலாம்.

## 263. சித்தன்

❁ யாரிடமும் ஒரு சித்தன் கையேந்த மாட்டான்; பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவே மாட்டான். பிறருக்கு என்ன உதவி செய்ய முடியும் என்ற நிலையிலேயே வாழ்வான்.

❁ செயல் வேகம் கொண்டவனே சித்தன்.

## 264. சித்து

✻ ஒரு நெல்லை நூறு நெல்லாக்கும் சித்து செய்கிற விவசாயியும் - ஊதினால் பறந்து போகும் பஞ்சை பலவிதமான ஆடைகளாக்கித் தரும் சிறப்பான சித்து செய்யும் நெசவாளியையும், மண்ணைக் கொண்டு மாற்றி அமைத்து மனிதர்களைச் சுகமாக வாழச் செய்யும் கொத்தர்களையும், ஒரு துளி விந்துவை ஒன்பது மாதத்தில் ஒரு குழந்தையாக்கித் தரும் பெரும் வினோதச் சித்து செய்யும் தாய்மார்களையும், நாம் பாராட்ட முற்படுவதற்கில்லை.

✻ எந்தவிதமாக இதைச் செய்கிறான் என்று பிறர் அறிந்து கொள்ள முடியாத விதத்தில் தந்திரமாகவும், திறமையோடு செய்யும் சமுதாயத்திற்கு எவ்விதப் பயனும் விளைவிக்காத வியப்பூட்டும் செயல்களைச் சித்து என்று மயக்க நிலையில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள்.

✻ சித்துக்கள் எல்லாம் சாதாரண அறிவில்லாத மக்களை, ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுகின்ற தந்திரச் செயல்களே தவிர வேறொன்றுமல்ல.

* ஒரு பொருளை இன்னொரு பொருளின் உதவி இல்லாமல் யாரும் உண்டுபண்ணிவிட முடியாது. ஒரு நெல் மணியை மண்ணிலே போட்டு, முளைவந்து, பிறகு பயிராகி கதிர் வந்து, இவ்வாறு ஒரு தானியத்தை அந்தத் தானியம்தான் கொடுக்க முடியுமே தவிர, மனிதனால் முடியா. மடக்கி வைக்கப்பட்ட மாஞ்செடி எழுகிறது. 'அங்கே' இருக்கிற பொருள் 'இங்கே' வருகிறது. அவ்வளவே! மனக்காந்தப் பயிற்சி, வாக்குச் சாதுரியம், கையாட்கள் ஒத்துழைப்பு இவற்றால் வித்தை செய்து, பார்ப்பவன் வியப்புறக் காட்டிப் பணம்' - பெண்டிர் நேசமும் பெறுகின்றனர்.

* சித்து வித்தை செய்பவர்களது நடவடிக்கைகளை உன்னிப்பாகப் பார்த்தீர்களானால், பணத்திலே ஒரு பேராசை அல்லது ஆண் பெண் நட்பொழுக்கத்தில் ஒரு ஒழுங்கீனம் அல்லது இவை இரண்டுமே இருப்பது தெரியவரும். சுத்தமான ஆன்மீகத் துறையில் இருப்பவர்கள் இந்தச் செயல்களில் ஈடுபட மாட்டார்கள்.

* சித்து வித்தைகளைப் பார்க்கிறவர்கள் இவை எப்படி நடக்கின்றன எனத் தெரிந்துகொள்ளும் வரையிலேதான் விந்தையாக இருக்கும். தவிர, அவற்றைச் செய்கிறவர்கள் பணத்தையோ, விளம்பரத்தையோ பெறுவதைத்தான் உள்நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். அறிவுபூர்வமான, விஞ்ஞானரீதியான யோகம் பயில்கின்ற நாம் இதிலெல்லாம் மயக்கமுறுகின்ற நிலையிலே இல்லை.

* நம்மைச் சுற்றி யாராவது வேடிக்கை வினோதம் செய்தால், அதைப் பிரமாதப்படுத்துகிறோம். ஒரு கோதுமையை முளைக்கப் போட்டால், 500 கோதுமை விளைகின்றன. எந்த விஞ்ஞானியாகிலும் - கோதுமையைப் போல் வடிவத்தில் ரப்பரால் செய்யலாம், மண்ணால் செய்யலாம். ஆனால் அது முளைக்கப் போட்டால் முளைக்குமா? அப்படிப் பார்க்கும்போது இயற்கையில் எவ்வளவு சக்தியும், ஆற்றலும் இருக்கின்றன?

* இயற்கையில் நடப்பது எல்லாம் சித்துதான். ஏமாற்ற வித்தைகளையெல்லாம், ஒன்றை மற்றொன்றாகக் காண்பித்து பணம் பறிப்பதெல்லாம், சித்து என்று ஒப்புக் கொள்ளக்கூடாது.

❖❖❖

# பொன்மொழிகளின் பொற்குவியல்கள்

'என் சிந்தை கோயிலென வாழும் குரு' என்ற தாயுமானவரின் வாக்கின்படி மானுடத்தின் சிந்தைகளில் வாழுகின்ற ஞானகுரு வேதாத்திரி மகரிஷி. அறிவார்ந்த பெருங்கருணையும் தவஞ்சான்ற நல்லமைதியும் ஒன்றாகக் கலந்து இயங்கும் பெருங்கடல். உலக அமைதியை நாடுகின்ற நமது குரு. அறிவியல் ஆன்மீக சித்தராகவும் சிறந்த மகானாகவும் அருள் வள்ளலாகவும், பிரம்ம ரிஷியாகவும் தத்துவ ஞானியாகவும் வாழ்ந்தவர்.

தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி என்ற சமுதாயத்தின் மூன்று அம்சங்களையும் பாமரரும் புரியும் வண்ணம் மகரிஷியின் எழுத்துக்களில் இருப்பது எல்லாமே பொன்மொழிகளாகும். இந்தப் பொன்மொழிகளைப் படித்து பரவசமடைந்திருப்பீர்கள்! பொன்மொழிகள் ஒவ்வொன்றிலும் உயிர்த்துடிப்பின் சீரான ஒலியைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள்.


குருவின் மூளைக்குள்ளேதான் எத்தனை ஆயிரம் விருட்சங்களின் விதைகள். இந்த விதைகள் - உலகெங்கும் உள்ள மானுடத்தின் மீது - இந்தப் பொன்மொழிகள் மூலம் விதைக்கப் பட்டுள்ளன. திறந்து கிடக்கும் ஞான இரகசியங்களை இனி எளிமையாக ஊடுருவிப் பார்க்க முடியும்.

குருவின் நூற்றாண்டில் இந்தப் பொன்மொழித் தொகுப்புகளை குருவுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம்.


குருவின் தொண்டில்
**பானுகுமார்.**

செங்கற்பட்டு,
*10.07.2010*

# துணை நின்றவை



- அறிவுத் திருக்கோயில் மலர்கள்.
- அருள்தந்தையிடம் நேரிடையாகக் கேட்ட உபதேசங்கள்.
- அருள்தந்தையின் பயிற்சிகளிலும் விழாக்களிலும் கருத்தரங்குகளிலும் சேகரித்த விபரங்கள்.
- அருள்தந்தையிடம் நெருக்கமாக இருந்தவர்களிடம் நேரிடையாக எடுத்த பேட்டிகள்



# ஆசிரியரின் படைப்புகள்

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 பாகம் I & பாகம் II
4. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
5. மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
6. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
7. தியானம் பழக 100 நற்சிந்தனைகள்
8. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
9. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்
10. பாரதியாரின் 100 பதில்கள்
11. தன்னம்பிக்கை மலர்கள் (நாளொரு நற்சிந்தனைகள்)
12. ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...
13. மன்னார்குடி வரலாறு
14. ஓய்வுகால வாழ்க்கை
15. செயலே விளைவு (சிறுகதைத் தொகுதி)
16. தவம் (சிறுகதைத் தொகுதி)
17. டென்ஷனை வெல்வது எப்படி?
18. காலமே உன் உயிர்
19. இடைக்காட்டுச் சித்தர்
20. ஏழு ஆலயங்கள்
21. சிம்லாவில் ஐந்து நாட்கள்
22. உடம்பின் உன்னதங்கள்
23. அறிவறிந்த மக்கட்பேறு
24. நினைவாற்றல் கலை
25. தித்திக்கும் திருவாரூர் (அரிய செய்திகள் ஆயிரம்)